Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් பெப்.24-மார்ச்.02,2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 448

## இராஜதந்திர யுத்தம் வெற்றி யார் கைகளில்

## பாதை திறக்கும் படலம்

# பயணம் எதுவரை?

## யாழ். மணம்



## பொய் சொன்ன வாய்க்கு

வாசக நெஞ்சங்களுக்கு 'ஈத் முபாரக்'

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## மன்மதன் உயிர் பெற்ற நாள்

சிருஷ்டித் தொழிலுக்கு ஆக்கபூர்வமாக உதவுபவன் காமன். இவனை மன்மதன் என்றும் கூறுவார்கள். இவனது மனைவி ரதி. ஒரு நாள் காமன் தன் மனைவியைப் பிரிந்து வந்து பரமேஸ்வரன் மீது மலர் அம்புகளை ஏவினான். ஈஸ்வரனுக்கு கடுமையான சினம் பொங்கி எழுந்தது. நெற்றிக்கண்ணிலிருந்து வெளியான அக்னியால் காமனை எரித்து சாம்பலாக்கினார். இதைத்தான் காம தகனம்' என்பர். தன் கணவன் சாம்பலானதைக் கேள்விப்பட்ட ரதி கதறி ஓடிவந்து ஈஸ்வரன் காலடியில் வீழ்ந்து மன்றாடினாள். கணவரை உயிர்ப்பித்துத்தருமப்படி வேண்டினாள். ஈஸ்வரன் மனம் இளகியது. ரதியின் கண்களுக்கு மட்டும் தெரியும்படியாக காமனை உயிர்பெற்று எழச் செய்தார். காம தகனம் நடைபெற்ற இடம் தமிழ் நாட்டிலுள்ள 'திருக்குறுங்கை' என்னும் ஊராகும். இந்த ஊரில் உள்ள குளத்தின் அடிப்பகுதி மண் சாம்பல் நிறமாக இருப்பதாகக் கூறுகின்றனர். மன்மதன் உயிர் பெற்று எழுந்தது பங்குனி உத்திர திருநாளன்றுதான். அன்று மன்மதன்-ரதி தம்பதியை வழிபடுவோருக்கு சிவபெருமான் அருள் பரிபூரணமாகக் மகிடைக்கும்.

ரீ. குணவர்த்தன- களுவாஞ்சிக்குடி.



## அல்லாஹ்வைக் கொண்டு வெட்கப்படுங்கள்

அண்ணல் நபி (ஸல்)அவர்கள் "மக்களே! அல்லாஹ்வைக் கொண்டு முழுக்க முழுக்க வெட்கப்படுங்கள்!" என்று கூறினார்கள் அதற்கு கூடியிருந்த மக்கள் "அல்லாஹ்வின் தூதரே! எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்குத்தானே! நாங்கள் தான் அல்லாஹ்வைக் கொண்டு வெட்கப்பட்டுக்கொண்டுதானே இருக்கிறோம்." எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் "நீங்கள் எப்படி வெட்கப்பட வேண்டுமோ' அப்படி வெட்கப்படுங்கள்! அதாவது தலையையும் அதிலுள்ள (காதுகள் கண்கள் நாவு)" ஆகிய உறுப்புகளைப் பற்றியும் கவனமாக இருந்து கொள்ளுங்கள் மரணத்தையும்,துன்பத்தையும் அடிக்கடி நினைத்துக் கொள்ளுங்கள். யார் மரணத்தை ஞாபகத்தில் பதிந்து கொண்டாரோ அவர் உலக அலங்காரத்தைப் பொருட்படுத்தமாட்டார். மறுமைக்கு முக்கியத்துவம் அளிப்பார். யார் இப்படிச் செய்கிறாரோ அவர்தான் அல்லாஹ்வைக் கொண்டு முழுக்க முழுக்க வெட்கமடைந்தவராகிறார்" என்று கூறினார்.

இஸ்லாம் மார்க்கத்தின் கொள்கை வெட்கமாகும். அதாவது ஒவ்வொரு முஸ்லிமும் தன்மான முள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*ஆதாரம்: திர்மிதி-157-158*

வை.எம். தாஹிர் கரீம்- கல்முனை 06

## கேளுங்கள் கொடுக்கப்படும்

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்- ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்." (மத்.7.7.8)

கிறிஸ்துவிற்குள் பிரியமானவர்களே! கேட்க வேண்டும்! .கேட்கும் போது பெற்றுக் கொள்வீர்கள். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா."(மத்.7.11)

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கிறான். அது போல பரலோகத் தகப்பனாகிய தேவனும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிற எமக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது நிச்சயமான காரியம். ஒரு பிள்ளை தன் தகப்பனிடத்தில் கேட்பதைப் போல நாமும் நம் தகப்பனாகிய தேவனிடத்தில் கேட்க வேண்டும். எம் சுகத்திற்காக, எம் விடுதலைக்காக, எம் வெற்றிக்கா மேலும் எம் தேவைகள் அனைத்திற்காவும் நாமே அவரிடம் கேட்க வேண்டும். இன்றும் என்றும் எப்பொழுதும் நம் ஜெபத்தை கேட்க அவர் மிகவும் ஆவலோடு காத்திருக்கிறார்.

பா. ஜெனீட்டா- நாவலப்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.445

பரிசுக்குரிய கவிதை

### செய்தி

மிச்சம் மிகுதியின்றி
அழியுமோ உலகமென்ற
அச்சத்தின் சாயலை
உலக முகத்தில் வீசி
உச்சத்து கோபுரங்களை
தகர்த்தெறிந்து- யுத்த
எச்சத்தின் மூலம் - நீ
சொன்ன செய்தி எதுவோ.

இராம ஜெயபாலன்-
கொக்குவில்

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### கூறிவிடு!

போரிட்டது போதும்!
உயிர்கள் வீரிட்டதும் போதும்!
சோறிட்ட மந்தைகள்
பார் விட்டுப் போனதும் போதும்!
கூறி(விட்)டால் போதும்(நீ)
ஓய்ந்து விடும் பேரழிவு!

கை. ரமேஸ் பொத்துவில

### கோமாளி-ஏமாளி.

அம்மணமாக அலைந்தவர்கள்
மத்தியில் கோவணம் கட்டியவர்.
சர்வாதிகாரிகள் முன்னிலையில்?
இவர் ஓர் கோமாளி.
இவரை தேடுகின்றோர்?
உலகப் புகழ் பெற்ற ஏமாளி.

அஸ்ரின் அனிபா-கொழும்பு.



### கருகும் நெஞ்சங்கள்!

குற்றம் என்கிறது
ஒரு நெஞ்சு
சுத்தம் என்கிறது
ஒரு நெஞ்சு!
குற்றமோ சுத்தமோ
கருகிச் சாவதோ
பல நெஞ்சு!

லைலா அக்ஷியா
அக்ரம்-குருணாகல்.

### வல்லவன் ஆனாலும்....

வரைவிலக்கணப்படுத்த வல்லமையில்லை- ஆயினும்
அன்று வந்ததே ஒரு வாய்ச் சொல் -வல்லவன்
ஆனாலும் பொல்லாதவன்.

சி.சிந்துஜன்-கொழும்பு 15.

### ஆயத்தம்

"வல்லரசாம் அமெரிக்கா
வலைவீசி உனைத்தேட
அடடா நீயோ ....!
அடுத்த தாக்குதலுக்காய்
ஆலோசனை செய்கின்றாயோ?"

எஸ்.முக்கன் விஜயதீபன்-பசறை.

### ஒன்றே உலகம்!

ஒன்றே உலகம் என்று கூறுவோம்.
ஒருவனே தலைவன் என்று
பாடுவோம்.

ரி.ஜெ. பாரதி- பருத்தித்துறை.

### அதிபராய் பின்லேடன்.

சர்வதேச சண்டியனிற்கே சவுக்கடி கொடுத்து
ஆந்திரக்ஸால் அகிலமதை அதிர வைத்து.
நீ அமைதியை பேணுவது
நீ அதிபராகி விடவா? அமெரிக்காவில்.

த.தேவராஜா-மட்டக்களப்பு.

### என்ன?

அமெரிக்கா
அதிர்ந்தது
பயங்கரவாதமென்றால்
ஆப்கான் எரிந்தது
என்ன வாதம்.

ஏ.எச்.எம்.மொஜாஜ்-
தெல்தெனிய.

### பரிசு!

காதலித்துப் பார்- கவிதை எழுத வரும்
என்றார்கள்!
காதலித்தேன்- எனது அன்னை
பூமியை- வந்தது.
கவிதையல்ல!!
தீவிரவாதி எனும்
கிரீடம்!!!


எல். வசந்த மலர்-மாத்தளை.

### சீக்கிரம்!

இப்பொழுதெல்லாம்
நிராயுதபாணிகளுக்கு அடைக்கலம்
தருவதில்லை- அள்ளிஎடு
உன் ஆயுதக் கிடங்கை- இல்லை
கிள்ளி விடு உன்
மூளைக் கிடங்கை.

பெரியசாமி கோணேஸ்வரன்-பொகவந்தலாவ.

## கவிதைப் போட்டி இல.448



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.03.2002

கவிதைப் போட்டி இல.448
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பொறுத்திருந்து பார்ப்போம்!

பார்த்துப் பார்த்துக் கட்டிய
பார் போற்றும் கட்டிடம் பெண்டகனை
பத்தே நிமிடத்தில் தகர்த்தெறிந்து!
பகைமைகளை தேடிக் கொண்டு
அமெரிக்காவின் தலையெழுத்தை
மாற்றிட துடிக்கும் பின்லேடனே!
உனது எண்ணம் நிறைவேறுமா?

ஹப்புத்தளையூர் மனோ கோபாலன்.

### பின்லேடன்!

வல்லரசை
உரசிய
தீக்குச்சி!
உலகை
உறைய வைத்த
பனித்துளி!

நிகாஸ் நிஸ்மி-
பொத்துவில் 03.

## உங்கள் பக்கம்

### காயம் பட்ட இதயத்திலிருந்து...

அன்புடன் முரசு ஆசிரியர் அவர்களுக்கு!

எனக்கு நேர்ந்த இந்தக் கதி மற்றொரு பெண்ணுக்கு நிகழக் கூடாது என்பதற்காகவே இதனை தினமுரசு மூலம் அம்பலப்படுத்த முடிவு செய்தேன். தங்களது பெண் பிள்ளைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களை நம்பி லண்டன் ஜேர்மன் என்று அனுப்பி வைக்கும் சகல பெற்றோருக்கும் வெளிநாடு என்றவுடன் எதைப்பற்றியும் யோசிக்காமல் விமானத்தில் ஏறிவிடும் பெண்களுக்கும் இது ஒரு பாடமாக அமையட்டும்.

நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள் எனக்கு தற்போது இருபது வயது. ஒவ்வொரு யாழ்ப்பாணப் பெற்றோரினதும் கனவைப் போலவே லண்டன் மாப்பிள்ளைக்கு தம்பிள்ளையை கட்டிவைக்கும் கனவை எனது பெற்றோரும் கொண்டிருந்தனர். லண்டனில் திருமணம் நிச்சயிக்கப்பட்டு என்னை அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடாகியது. எனது கணவருக்கு விசா இல்லாததால் ஸ்பொன்ஸர் செய்ய முடியாத நிலையில் தனிப்பட்ட முகவர் ஒருவர் ஊடாக என்னை லண்டன் கொண்டு சேர்க்க ஏற்பாடாகியது. நானும் கையிலிருந்த பணம் அனைத்தையும் கொட்டி அங்கு செல்லத் தீர்மானித்தேன்.

சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த ஒரு முகவர் என்னை லண்டன் அனுப்ப ஒப்புக் கொண்டார். எனக்கு முன்னதாகவே இலங்கையை விட்டுச் சென்று விட்ட அந்த நபர் கொழும்பிலிருக்கும் அவரது மனைவி மூலம் என்னை கென்யா நாட்டின் தலைநகரான நைரோபிக்கு வரவழைத்தார். நைரோபி சென்றடைந்த என்னை அவர் வீடொன்றில் தங்க வைத்தார். அந்த வீட்டில் என்னைப் போலவே லண்டன் செல்லும் ஆசையில் வந்த மேலும் சில இலங்கைப் பெண்கள் இருந்தனர்.அவர்கள் கடந்த நான்கு மாதங்களாக அந்த வீட்டில் தான் இருக்கிறார்கள். ஒரு மாத காலம் என்னை அந்த வீட்டில் தங்கவைத்த நபர் திடீரென ஒரு நாள் பாஸ்போர் போட்டோ எடுக்க வெளியில் செல்ல வருமாறு அழைத்தார். ஸ்ருடியோவுக்கு எனக் கூறி அழைத்துச் சென்றவர் அங்கு செல்லாது ஹொட்டல் ஒன்றுக்கு கூட்டிக் கொண்டு போனார். ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள் என்று கேட்டதற்கு ரூமுக்கு ஸ்ருடியோக்காரர் வந்து போட்டோ எடுப்பார் நாம் வெளியில் சென்றால் பொலிஸில் சிக்க வேண்டிவரும் என்று கூறி என்னை ஹொட்டல் அறைக்குள் அழைத்துச் சென்றவர் அங்கு வைத்து தனது வக்கிர காம எண்ணத்திற்கு உடன்படுமாறு வற்புறுத்தினார். மறுத்தால் கொலை செய்வேன் அல்லது பொலிஸில் பிடித்துக் கொடுப்பேன் என்றும் கூறி மிரட்டினார். என்னை விட்டு விடும்படி கதறி அழுது இறுதியில் காலில் கூட விழுந்து கெஞ்சினேன். அப்படியிருந்தும் அவன் எனது கற்பை சூறையாடினான்.

எல்லாம் முடிந்த பின்னர் எதையும் வெளியில் சொல்லக்கூடாது என்று சர்வசாதாரணமாகக் கூறினான். லண்டன் சென்றும் யாரிடமாவது சொன்னால் கூட அங்கு வைத்து ஏதாவது செய்ய தன்னால் முடியும் என்றார். இந்த நிலைமை வேறொரு பெண்ணுக்கு ஏற்படக்கூடாது. இது சகல பெண்களுக்கும் ஒரு பாடமாக இருக்கட்டும்.

பாதிக்கப்பட்ட பெண் -லண்டனிலிருந்து.

## வாசக[ர்] சாலை

முத்தான முரசே!

முரசு 446 முற்றிலும் வித்தியாசமானது "இராணுவத்தில் புலிகள்" என்ற கட்டுரை சிறப்பானது, மகத்தானது, பல் வேறு கருத்துக்களை உள்ளடக்கியது, இந்துப் பாராட்டை இராஜதந்திரி அவருக்கு தெரிவிக்கவும். முரசே இன்னொரு விடயம் கவிதைப் போட்டிக்கு பிரசுரித்த படத்தைப் பார்த்ததும் கண் கலங்கியது பாராட்டுக்கள்.

கிருஸ்னன் சிவா-மஸ்கெலியா.

அன்பின் முரசே!

441வது முரசில் வந்த அனைத்து அம்சங்களும் மிகச் சிறந்தவை. கவிதைப் போட்டி அதிரடி அய்யாத்துரை சினிமா அனிதாவின் காதல்கள், என்னைக் கவர்ந்தவை.

எம்.பி.எம். உரூசைன்- கல்முனை.

அன்பின் ஆசிரியருக்கு!

தினமுரசு வார மலரின் நீண்ட கால அபிமானி நான். வாரம் ஒரு முறை பல்சுவை அம்சங்களுடன் வெளிவரும் முரசு அடுத்த சில வாரங்களில் அதிகப் பக்கங்களுடன் வெளிவரும் செய்தியைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

என். ஷர்மிளா- கொழும்பு 13.

என் அபிமான முரசே!

பேனா நட்புப் பகுதியில் எனக்கு பலரை நண்பனாக்கி விட்ட தினமுரசிற்கு பல கோடி வாழ்த்துக்கள். மற்றும் மன்னாதி மன்னன் பகுதி தனது 100 வது விழாவைக் கொண்டாட என் வாழ்த்துக்கள். என்றும் என் அன்பின் முரசே நீ தொடர்ந்து வெளிவர வேண்டும்.

நிதின்-யாழ்ப்பாணம்.



முத்தான முரசே!

உன் அத்தனை பக்கத்திலும் எத்தனை அம்சங்கள்! ஒவ்வொன்றாய் பாராட்ட என்னால் முடியாது. ஆசிய மத்திய கிழக்கு ஐரோப்பிய நாட்டில் கூட நீ அசைக்க முடியாத வெற்றிக் கொடி நாட்டி வீரநடை போடுகிறாய். உன் சேவை மேன் மேலும் வளர்ச்சி பெற என் வாழ்த்துக்கள்.

குருமண் வெளி ரவி-மாலைதீவ.

முரசே! தமிழ் பேசும் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த உன்னில் தவறுகள் இருக்கவே கூடாது. பலர் இவற்றை எனக்கு முன் சுட்டிக் காட்டிய போதும் ஏன் எழுத்துப் பிழைகள் தொடர்ந்தும் ஏற்படுகிறது. சினிமாப் பகுதியில் படங்களை ஏன் அரை குறையாகப் பிரசுரிக்கிறீர்கள். உதாரணமாக 444 முரசில் ரியாசென.

உனது புதிய அம்சமான சாதாரணன் எழுதுவது சூப்பர். மற்றைய அம்சங்கள் நல்லவையே இவற்றின் தரம் மங்காது தவறுகளையே தவிர்த்துக் கொள்ள வேண்டும் மன்னாதி மன்னனில் பிரசுரித்த பகுதியில் சிறு பகுதியை மீண்டும் ஏன் பிரசுரிக்கிறீர்கள் 'அனிதாவின் காதல்கள், 'கண்ணாமூச்சி ரே..ரே..' போன்று முடிந்த இடத்திலிருந்து தொடர வேண்டும். உன் பணி சிறப்புற்று மேலும் தொடரட்டும்.

ரி. நிபாஸ்கரன்- பளை.

மதிப்பிற்குரிய ஆசிரியர்க்கு!

முரசில் வரும் அத்தனை அம்சங்களும் சிறப்பானவை. குறிப்பாக 'லேடீஸ் ஸ்பெஷல்' பாப்பா முரசு, மன்னாதி மன்னன், தேன் கிண்ணம், உண்மைத் தொடர் மற்றும் கதைகள் என்னை மிகவும் கவர்ந்தவை நாங்களும் எமது குழந்தைகளும் முரசில் வரும் பரிசுப் போட்டிகளில் பங்கு பற்ற ஆவலாக உள்ளோம் (பரிசு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கும்) ஆனாலும் பத்திரிகை எம் கைகளில் வந்து சேரும் போது அனுப்ப வேண்டிய கடைசித் திகதி முடிவடைந்து விடுகிறது. முடிவுத் திகதியை நீடித்தால் மகிழ்ச்சியாக இருக்கும்.

சமைப்பது எப்படி என்று சமையல் குறிப்புகளையும் தந்தால் எம்போன்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இக்கருத்துக்களை ஆசிரியர் கவனத்தில் கொள்ளும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். ஜெ- ஜெமனி.

முத்தான முரசே!

உண்மைச் சம்பவங்களை உறுதியுடன் தருவது முரசுக்கு நிகர் முரசே தான் நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சூப்பர் அன்பின் முரசே தொடர்ந்து நாம் தரும் ஆக்கங்களை நீ பிரசுரிக்க வேண்டும்.

இராமையா ஸ்டாலின்-
கொட்டலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். "முரசு" அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல.:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# தீர்க்கமான முவுகளை எடுக்கத் தயங்கமாட்டேன்

## அரசாங்கம் உறுதியற்ற நிலையில் இருப்பதாகக் கூறுகிறார் ஜனாதிபதி

ஐ.தே.க.வை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக புலிகள் இயக்கம் பெரும் பங்களிப்பை வழங்கியது. அதற்கான நன்றிக் கடனை புலிகளுக்கு செலுத்தும் போது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாரிய பாதிப்பேற்பட வாய்பிருக்கிறது. அவ்வாறான தொரு நிலையில் தான் மக்களுக்காகவேண்டி தீர்க்கமானதொரு முடிவை மேற்கொள்ளவேண்டி வரும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் உறுதியற்ற நிலையில் காலம் தள்ளுவதாகவும் தலைவரின் தலைமைத்துவத்திற்கு எதிரான குழுவொன்று கட்சிக்குள்ளிருந்து செயற்படுவதாகவும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஹொறகொல்லையில் உள்ள தனதில்லத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததில் இருந்து தனக்கு மிகப்பெரும் பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் இப்போது நிலமை மாற்றமடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தற்போது எனக்கு தொழில் ஒன்றும் கிடையாது. வெறுமனே பதவி ஒன்று மாத்திரமே காணப்படுகின்றது. ஆதலால் கட்சி நடவடிக்கையில் கூடுதலான நேரத்தை செலவிட என்னால் முடியுமாயிருக்கிறது என்றும் திருமதி. குமாரதுங்க சொன்னார்.

எமது கட்சிக்குள் இருந்த சதிகாரர்கள் சிலரால் கட்சி நாசமாக்கப்பட்டது. எனக்கு அவை குறித்து கவனம் செலுத்த நேரம் இருக்கவில்லை.

கரு ஜெயசூரியாவுக்கு மின்சக்தி அமைச்சு வழங்கப்பட்டிருப்பது அவரை அரசியலிருந்து ஓரங்கட்டுவதற்காகத்தான். இந்த அரசாங்கத்தில் திறமையானவர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை.

தம்மை அதிகாரத்துக்குக் கொண்டுவர உதவிய புலிகளுக்கு ஐ.தே.க நன்றிக்கடன் பட்டிருக்கிறது. அந்த நன்றியை தீர்க்க நாட்டைப் புலிகளுக்கு வழங்க முயற்சிப்பார்களாயின் மக்களிடம் கூறிவிட்டு உறுதியானதொரு நடவடிக்கை எடுக்க நான் தள்ளப்படுவேன் எனவும் திருமதி குமார துங்க கூறினார்.

## ரத்வத்தை கைதாகலாம்!

மடவளையில் இடம்பெற்ற பத்து முஸ்லிம் இளைஞர்களின் கொலை தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கைதாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தற்போதைய சாட்சியங்களின் அடிப்படையில் ரத்வத்தையைக் கைது செய்யலாமா? எனச் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வினவியிருந்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்த பதிலில் ரத்வத்தையைக் கைது செய்யப்போதியளவு சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூரில் வைத்து குமரன் பத்மநாதனுடன்

## பிரதமர் ரணில் இரகசிய சந்திப்பு?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் சிங்கப்பூருக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர் கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை சந்தித்து ரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் எதிர்வரும் தினங்களில் கைச்சாத்திடப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெறும் சில அம்சங்கள் குறித்து பிரதமரும் குமரன் பத்மநாதனும் கலந்துரையாடியிருக்கலாமென நம்பப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதில் தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகள் தோன்றி வருகின்றன.

புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் சில நிபந்தனைகளை ஏற்பது தொடர்பில் அரசாங்கம் பலத்த சங்கடத்துக்குள்ளாகியிருக்கிறது. தடை நீக்கம் உள்ளிட்ட சில விடயங்களில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் தளர்வுப் போக்குக்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் புலிகள் சார்பாகவும் சில விட்டுக் கொடுப்புகள் இடம்பெறுவதாக நிரூபித்தால் அன்றி அரசாங்கத்தினால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்க முடியாத நிலை தோன்றலாம். இது தொடர்பாகவே பிரதமரும் கே.பியும் ஆராய்ந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கத்தில் மூன்றாவது முக்கியஸ்தர் எனக் கருதப்படும் குமரன் பத்மநாதன் இந்தியா தாய்லாந்து உட்பட பல நாடுகளால் தேடப்படும் பிரபல ஆயுத வர்த்தகர் ஆவார். பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்து தனது முகத்தை மாற்றி அமைத்திருப்பதுடன் பல நாடுகளின் கடவுச் சீட்டுக்களையும் வைத்திருக்கும் இவர் இறுதியாக நியூசிலாந்தில் காணப்பட்டார் என இன்டர் போல் தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## புலிகள் போருக்கு ஆள் திரட்டுவதாக

## அமெரிக்கத் தூதுவரிடம் படையினர் புகார்!

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து மாத்திரம் சுமார் 500 பேரை புலிகள் தமது கட்டாய போர் பயிற்சியில் இணைத்துக் கொண்டிருப்பதாக படையினர் அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைப் பிள்ளைகள் உள்ளிட்ட 450 க்கும் 500 இடைப்பட்ட எண்ணிக்கையானவர்கள் புலிகளால் போர்ப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸிடம் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தூதுவரின் இந்த விஜயத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக விளக்கமளித்த இராணுவத்தினர் புலிகளால் பயிற்சிக்கென அழைத்துச் செல்லப்பட்டிருப்பவர்களின் விபரங்களையும் கையளித்துள்ளனர்.

## ஆறுமுகன் தொண்டமான் கரிகாலனுடன் சந்திப்பு!

கொழும்பிலிருந்து விமானப் படை ஹெலிகொப்டரில் மட்டக்களப்புக்குச் சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அங்கிருந்து கொக்கட்டிச்சோலைக்குச் சென்று புலிகள் இயக்க முக்கியஸ்தர்களை சந்தித்து திரும்பியுள்ளார்.

கொக்கட்டிச்சோலையில் அமைச்சர் ஆறுமுகன் கரிகாலனையும் வேறு சில புலிகள் இயக்க முக்கியஸ்தர்களையும் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

கட்டுப்பாடற்ற பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தே பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரும் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அங்கு புலிகள் இயக்க முக்கியஸ்தர்களை சந்தித்து திரும்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக் கப்பலைக் கண்டால் முதலில் எச்சரிக்கை!

## பின்னர் தாக்குதல் என்கிறார் பாதுகாப்பு அமைச்சர்!

வடபகுதிக் கடலில் புலிகளின் நடமாட்டங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படி கடற்படையினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக கூறியிருக்கும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இதற்கு ஏதுவான ஏற்பாடொன்று புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் இடம்பெறுமென தெரிவித்துள்ளார்.

புலிகள் சிறுவர்களைக் கடத்துவதாகவும் ஆயுதக் கப்பல்களை தருவிப்பதாகவும் வெளியான அறிக்கைகளை அமைச்சர் மாரப்பன ஆதாரமற்றவையென நிராகரித்திருக்கிறார்.

புலிகள் ஆயுதங்களை இறக்குவதாக அறியப்பட்டால் முதலில் எச்சரித்து பின்னர் எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்து இறுதியில் தாக்குதல் நடத்த படையினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மாரப்பன தெரிவித்தார்.

கடந்த நாட்களில் முல்லைதீவுக்கு கிழக்காகவுள்ள கடற்பரப்பில் அதிவேக வள்ளங்கள் சிலவற்றின் நடமாட்டத்தை அவதானித்தபோதிலும் அவை புலிகளின் வள்ளங்கள் தானா என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

## முஸ்லிம் காங்கிரஸை

## தூய்மைப்படுத்த புதிய அமைப்பு!

நிந்தவூர் பகுதியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்மீது அதிருப்தி கொண்ட சிலர் 'நிந்தவூரில் தூய காங்கிரஸை ஏற்படுத்துவதற்கான அமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பொன்றை தோற்றுவித்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸின் முத்த உறுப்பினர் ஒருவர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த இயக்கம் தற்போதைய முஸ்லிம் காங்கிரஸிற்குள் நிலவும் பிரதேச வாத குடும்ப ஆதிக்க அரசியலிலிருந்து அந்த கட்சியை விடுவித்து தூய்மையான கட்சியொன்றை உருவாக்கும் நோக்கம் கொண்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு முழக்கமென்ற தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்றையும் விநியோகித்திருந்தது. எமது இலக்கை எந்த வகையிலும் அடைந்தே தீருவோம் அதுவரை ஓயமாட்டோமென் அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## அமைச்சருக்கு அனுமதி மறுப்பு!

இந்துக் கலாசார அமைச்சர் ரி.மகேஸ்வரன் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குச் செல்ல புலிகள் இயக்கத்திடம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் பலரும் அரசாங்க கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு தொடர்சியாக சென்றும் வரும் நிலையில் இவரும் அங்கு செல்ல கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறார். இவருக்கான அனுமதி புலிகளால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

## புலிகளின் தலையீடு அதிகரிப்பு!

மோதல் தவிர்ப்பு நிலவும் காலத்தில் கிழக்கில் அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இயங்கும் பல அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் புலிகளின் தலையீடு வெகுவாக அதிகரித்துள்ளது.

சகல நிருவாக செயற்பாடுகள் முடிவுகள் என்பவற்றிலும் புலிகள் தமது தலையீட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

## படையினர் கைதுசெய்த புலி உறுப்பினர்களுக்கு

## பொலிஸார் ராஜமரியாதை!

புலிகள் இயக்கத்திற்கு ஆட்சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த அந்த இயக்க உறுப்பினர்கள் சிலரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தபோது அந்த புலி உறுப்பினர்களை மிகுந்த மரியாதையுடனும் பாதுகாப்பாகவும் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்த சம்பவம் ஒன்று கடந்த 16ம் திகதி இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் புலிகள் தமது இயக்கத்திற்கு ஆள் திரட்டுவதாக இராணுவத்துக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அங்கு சென்ற படையினர் அவர்களை கைது செய்தனர். பின்னர் அவர்களை படையினர் ஏறாவூர் பொலிஸில் ஒப்படைத்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் அவர்கள் அனைவரையும் தகுந்த பாதுகாப்போடு அவர்களது பகுதிகளுக்கே பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

## தொடுகை சிகிச்சை நிபுணர் வருகை!

பிரபல தொடுகைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சசிகாந் ஷேத் இலங்கை வந்துள்ளார்.

ஆஸ்மா இதய நோய்கள் உட்பட பல நோய்களுக்கு தனது தொடுகை சிகிச்சை மூலம் நிவாரணம் அளித்து புகழ்பெற்ற இவர் அடுத்த ஒருவார காலத்திற்கு கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள கிறீன்லன்ஸ் ஹொட்டலில் தங்கியிருந்து சிகிச்சை அளிப்பார்.

# முரசம்

## முளையிலேயே முறியடிக்கப்பட வேண்டிய முறுகல்கள்!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

கிழக்கில் மீண்டும்
தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே
முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்
விரும்பத்தகாத விடயங்கள்
தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு
தீர்வுகாணும் முயற்சியாக
யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை
போன்ற சில முன்னெடுப்புகள்
ஆரம்பமாகவுள்ள ஒரு
முக்கியமான காலகட்டத்தில்-
நல்லெண்ணச் சூழ்நிலை
அத்தியாவசியமானதாகக் கருதப்படும்
இத்தகைய சந்தர்ப்பத்தில்
சிறுபான்மை சமூகங்களிடையே
முரண்பாடுகள் தலைதூக்குவது
முதலுக்கே மோசமாகிவிடும்,
இப்போக்குகள் பாரதூர
நிலைமைகளுக்கு
இட்டுச் சென்று,
கிடைத்திருக்கும் இந்தச்
சந்தர்ப்பத்தையும்
பாழாக்கி விடக்கூடும்.

ஒருபுறம் முஸ்லிம் மக்கள் மத்தியில்
கப்பம், வரி, நிதிவசூலிப்பு
போன்ற கெடுபிடிகளை நிறுத்தும்படி
எதிர்ப்புகள் கிளம்ப,
மறுபுறத்தே தமிழ் மக்கள்மீது சில
வன்முறைகள் நிகழ்த்தப்பட்டதான
வதந்திகலும் பரவி
முறுகல் நிலையைத்
தோற்றுவித்து வருகின்றன.

கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில்
பாதுகாப்பற்ற உணர்வைத் தூண்டி
நிதானமிழந்த செயற்பாடுகளுக்கு
உந்திவிடவும்,
தமிழ் சமூகத்தினரையும்
வதந்திகள் மூலம்
குழப்பமடையச் செய்யவும்
வெவ்வேறு விஷம சக்திகள்
இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த
முனைந்து நிற்கின்றன.

கிழக்கைப் பொறுத்தவரை
பன்னெடும் காலமாக
புரிந்துணர்வோடு சகவாழ்வு
நிகழ்த்திவந்த
இவ்விரு சமூகங்கள் மத்தியிலும்
இனப்பிரச்சினையின் தோற்றத்துடன்
பிரித்தாளும் தந்திரங்கள்
கையாளப்பட்டு
பகமை உணர்வுகள்
விதைக்கப்பட்டன.

இந்த சூழ்ச்சியைப்
பக்குவமாகக் கையாளத் தவறிய எம்
போராட்டப் போக்கில்
நிகழ்ந்தேறிய அசம்பாவிதங்கள்
பரஸ்பர சந்தேகங்களையும்
அச்ச உணர்வுகளையும்
தோற்றுவித்து,
வேறுபட்ட முகாம்களாகப்
பிரிந்து நிற்க வைத்தன.

இந்த நிலையை மாற்றி
மீண்டும் இச் சமூகங்கள்
நம்பிக்கையுடன் தம்மிடையே
சமூக பொருளாதார உறவுகளைக்
கட்டி வாழ்கின்ற சகவாழ்வு நிலை
ஏற்படுத்தப் படவேண்டும்.

அண்மைக் காலங்களாக
சீரடைந்து, மேம்பாடடைந்து வந்த
இந்த உறவுகளைச்
சிதைக்க முற்படும்
விஷமத்தனமான இந்த முயற்சிகள்
முளையிலேயே முறியடிக்கப்
படவேண்டும்.

இதற்கு இவ்விரு சமூகங்களின்
பிரமுகர்கள் அக்கறையுடன்
முன்முயற்சி எடுக்க வேண்டும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புரிந்துணர்வு உடன்படிக்கை
# கசிந்து வரும் சர்ச்சை!

நரன்

**எம்**.ஓ.யு - மெமரண்டம் ஒஃப் அண்டர்ஸ்டான்டிங் -அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம்! இன்று இலங்கையின் அரசியலின் பெருத்த எதிர்பார்ப்புக்கு உரிய விடயம் இது.

புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படப் போகிறது என்ற பரபரப்பே இன்றிருக்கும் உணர்வலை.

ஒருபுறம் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை என்ன என்ற மர்மம், இன்னொருபுறம் இது நிறைவேறிவிட்டால் சமாதானம் வந்துவிடுமென்ற அதீத எதிர்பார்ப்பு, மற்றொருபுறம் இது சர்வதேச சமூகத்துக்கு முன் புலிகளைக் கட்டிப்போடும் தந்திரமா என்ற சந்தேகம், மறுபுறம் இது புலிகள் கையில் இலங்கையின் இறைமையைத் தாரை வார்த்துக் கொடுத்துவிடுமா என்ற அச்சம்!

இவற்றுக்கு மத்தியில் எதிர்வரும் 24ம் திகதி இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்காகத் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆயினும் அது அன்று கைச்சாத்திடப்படுமா என்ற சந்தேகங்களும் வெளிக் கிளம்பத்தான் செய்கின்றன.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் புலிகள் மீதான தடையை நீக்காமல் பேச்சுக்கு இடமில்லையென இப்போது மறுபடியும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எனவே புரிந்துணர்வு ஒப்பத்த விவகாரத்தில் இத் தடை ஒரு தடையாக எழும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.

இத்தனைக்கும் மத்தியில் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருப்பது என்ன என்ற ஒரு கேள்விக்கும் விடைகாண வேண்டியதாகவுள்ளது.

இதில் தற்போது ஏற்பட்டுள்ள புதிய பூகம்பம் என்னவென்றால், "இதுதான் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நகல்", என்று ஒரு 7 பக்க ஆவணமொன்று வெளிவந்து கைமாறிக் கைமாறி அரசியல் வட்டாரங்களில் உலாவந்து கொண்டிருக்கிறது.



இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் மிக இரகசியமாகப் பேணப்பட்டு வந்தவை.

இதனைத் தயாரித்த நோர்வே ஏற்பாட்டுக் குழுவினர் இந் நகல் வெளிவந்ததுகுறித்து திகைப்புற்றுள்ளதுடன் அதிருப்தியடைந்துமுள்ளனர்.

ஜனாதிபதிக்குக்கூட முறைப்படி வழங்கப்படாத இந்த ஆவணம் ஒருசில முக்கிய அமைச்சர்களுக்குத்தான் தெரிந்திருந்தது.

இதன் வரைபு முழுமையாக பூர்த்தியடைந்து விட்டதாவென்றும் தெரியாத நிலையில் வெளிவந்துள்ள இவ் ஆவணத்தின் உள்ளடக்கங்கள் யாவுமே புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான இறுதியம்சங்களாகக் கொள்ளப்படவும் முடியாதது.

எனினும் வெளிவந்த இவ் ஆவணம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான பல விடயங்களைக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே இவ் ஆவணத்திலுள்ள சில சர்ச்கைக்குரிய அம்சங்கள் வெவ்வேறு தரப்பினரால் எவ்வாறு எடுத்துக் கொள்ளப்படப் போகிறது என்பதுதான் இப்போது ஏற்பட்டிருக்கும் பீதி.

இதில் முதலில் தொனிக்கும் விடயமென்னவென்றால் வெளிவந்த இவ் ஆவணத்தின் 7 பக்கங்களில் எதிலுமே புலிகளின் தடையை எடுப்பது குறித்து எவ்வித குறிப்பும் எழுதப்படவில்லை.

புலிகள் மீதான தடையை நீக்காவிட்டால் பேச்சுவார்த்தைக்கு வழியில்லையெனப் புலிகளின் ஆலோசகர் தற்போது வலியுறுத்தியுள்ளமையும் இதன் விளைவாகவா என்று கருதநேருகின்றது.

அவ்வாறானால் இவ் உடன்படிக்கை திட்டமிட்டதுபோல் இம்மாதம் 24ம் திகதி கைச்சாத்திடப்படுவது 'சந்தேகமென்ற நிலைமையே தோன்றியுள்ளது.

இதேவேளை இதன் சரத்துக்கள் குறித்த வேறு பல சர்ச்சைகளும் கிளம்புகின்றன.

இராணுவ நடவடிக்கைகளைக் குறிக்கும் 1.2ம் சரத்தில் இரு பகுதியினரும் எவ்வித தாக்குதல் இராணுவ நடவடிக்கைகளிலும்



ஈடுபடக்கூடாதென்றும் இதற்காக அ) நேரடி அல்லது மறைமுக ஆயுதங்களால் சுடுவது, தேடுதல் வேட்டை நடத்துவது, பதுங்கியிருந்து தாக்குவது, படுகொலைகளை மேற்கொள்வது, பணயக் கடத்தல், மக்களின் அல்லது இராணுவத்தின் சொத்துக்களை அழிப்பது, அழிவுகர நடவடிக்கைகள், தற்கொலைத் தாக்குதல்கள், ஊடுருவல் தாக்குதல்கள் ஆ) ஆகாயக் குண்டுத் தாக்குதல்கள், இ) கடற் தாக்குதல் நடவடிக்கைகள் போன்ற இராணுவ நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தவேண்டுமென்றும் கூறுகிறது.

இதில் கடற்படை தனது ரோந்து நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென புலிகள் வற்புறுத்தும் விடயம் ஏற்றுக்கொள்ளப்படாது கடற் தாக்குதல்களை நிறுத்துவதென்ற அளவிலேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை புலிகள் இராணுவத் தரப்பையன்றி தனது அரசியல் எதிரிகளை அல்லது காட்டிக்கொடுத்தோர், குற்றம் புரிந்தோர், துரோகிகள் என்று வகைப்படுத்துபவர்கள் மீது மேற்கொள்ளும் படுகொலைகள், அல்லது தண்டணைகள் நிறுத்தப்பட வேண்டுமென்பதும் மேலோட்டமாகவே தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய விடயத்தில் சர்ச்சைக்குரிய பகுதியாக அமைந்திருப்பது சரத்து 1.3 இல் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தே.

இங்கு இலங்கை ஆயுதப்படைகள் வெளிவாரியான படையெடுப்புகளிலிருந்து இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கும் தமது சட்டபூர்வ உரிமையைத் தொடர்ந்து செயற்படுத்தலாமென ஒரு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

இதில் வெளிவாரிப் படையெடுப்புகளை மட்டுமே குறிப்பிட்டுள்ளதானது உள்வாரியான கிளர்ச்சிகளை - அது ஒரு சிங்களத் தீவிரவாதக் கிளர்ச்சியாக இருந்தாற்கூட - கட்டுப்படுத்தும் உரிமையை நிராகரிப்பதாக அமைகிறதென்பதே இங்கு மாற்றுத் தரப்பினரின் வாதமாக உள்ளது.

அடுத்த பகுதியான படைகளின் பிரிவினை என்ற பகுதியில் புலிகளதும் அரச படைகளினதும் நிலைகள் மற்றும் எல்லைக் கோட்டைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

இதில் தெளிவான எல்லைகள் இல்லாத இடங்களில் அவ்வப் படைகள் தற்போது கட்டுப்படுத்தும் பகுதிகளிலேயே அவையவற்றின் ஆட்சிப் பகுதியாக எடுத்துக்கொள்ளப் படுமெனத் தெரிவிக்கப் படுகிறது.

இத்தகைய ஒரு எல்லை வகுப்பையிட்டு ஒருசில சிங்கள அரசியல் வட்டாரங்கள் இது நாட்டின் இறைமையை விட்டுக்கொடுக்கும், அரசியலமைப்புக்கு முரணான ஒப்பந்தமென எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

அவர்களைப் பொறுத்தவரை இவையிவை புலிகளின் பகுதிகள் என்று அரசாங்கமே சர்வதேச சமூகத்தின் முன் ஒப்புக்கொண்டு ஆவணத்தில் கைச்சாத்திடுவது இலங்கையின் இறைமையைத் தாரைவார்ப்பதாக உணர்கிறார்கள்.

அடுத்த பகுதியான ஆட்சேர்ப்பு பற்றிய பகுதி இன்னுமொரு சர்ச்சைக்குரியதாக ஆகியுள்ளது.

இதில் இருதரப்பும் தமது படைகளுக்கு ஆட்சேர்ப்பதும் பயிற்சியளிப்பதும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை 2001 டிசம்பர் 24ம் திகதியில் இவ் இருதரப்பு படையணிகளும் கொண்டிருந்த பலத்தையும் தகுதியையும் அவ்வாறே பேணுவதற்கு மட்டுமே போதுமான ஆட்சேர்ப்பும் பயிற்சியுமாக மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்ற ஒரு வரையறை இங்கு விதிக்கப்பட்டுள்ளது.

அரச படைகளைப் பொறுத்தவரை 2001 டிசம்பர் 24ம் திகதி கொண்டிருந்த பலமும் - எண்ணிக்கையும், தகுதியும் பற்றிய ஆவணரீதியான சான்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், மறுபுறம் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதையேதான் மத்தியஸ்தர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கும். இதனால் இந்த வரையறை அரச படைகளை மட்டுமே மட்டுப்படுத்துமேயன்றி புலிகளின் படைப் பெருக்கத்தையும் தரத்தையும் மட்டுப்படுத்தப் போவதில்லையென அவர்கள் குறைகாண்கிறார்கள்.

இதையடுத்த பகுதியாக வருவது "நடமாட்டத்துக்கான சுதந்திரம்" என்ற பகுதி.

இருபகுதியினரும் ஆரம்பத்தில் தத்தம் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தங்க வேண்டும்.

ஒப்பந்தம் அமுலுக்கு வந்து 60 நாட்களின் பின் ஏ9 கண்டிவீதி வழியாக அரச படைகள் எவ்வளவு தொகையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு வருவதற்கு அனுமதிக்கப் படுவர்.

ஒரு தரப்பின் தனித்தனி உறுப்பினர்கள் அத்தரப்பு படைத்தளபதியின் அனுமதியுடன் மறுதரப்பின் பிரதேசத்திலுள்ள தமது உறவினர்களிடம் ஆயுதமும் சீருடையுமின்றிச் சென்றுவர ஒன்றை விட்டு ஒரு மாதத்தில் 3 நாட்கள் அனுமதிக்கப் படுவர். புலிகள் இதற்கு யாழ்- கண்டி வீதியைப் பயன்படுத்தலாம். இதற்குப் புறம்பாக தமது உடனடி உறவினர்களின் மரணவீடு, திருமணம் போன்றவற்றிற்கு சீருடையும் ஆயுதமுமின்றி மறுதரப்பு பிரதேசங்களுக்குச் சென்றுவர அனுமதிக்கப் படுவர். இருதரப்பும் தத்தமது குறிப்பிட்ட இராணுவப் பிரதேசங்களுக்கு மறுதரப்பினர் பிரவேசிப்பதை மறுக்கும் உரிமையைக் கொண்டிருப்பர்.

ஒப்பந்தம் அமுலுக்கு வந்து 60 நாட்களின்பின் அரசியல் வேலைகளுக்காக ஆயுதம் தாங்காத புலிகள் அரச படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப் படுவர்.



இத்தகைய விடயங்களை உள்ளடக்கியிருக்கும் இந்தப் பகுதியும் நிறையவே சர்ச்சைக்கு ஆளாகியுள்ளது.

ஏ9- கண்டிவீதி வழியாக படையினர் யாழ்ப்பாணத்திலிருந்து எந்தத் தொகையிலும் தென்பகுதி வர அனுமதிக்கப்பட்டுள்ளதேயன்றி வந்தவர்கள் மீண்டும் அவ் வழியாக யாழ்ப்பாணம் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இது படையினரை யாழ்ப்பாணத்தில் வலுவிழக்கச் செய்யும் திசையில் மட்டுமே சித்தரிக்கப்பட்டுள்ளதாக சிங்கள அரசியல் வட்டாரங்கள் விசனிக்கின்றன.

இதேவேளை ஆயுதமற்ற புலிகள் அரசியல் வேலைகளுக்காக வடக்கு கிழக்கில் சுதந்திரமாக நடமாடலாமென்பது பாரிய ஊடுருவலுக்கு வழிகோலுமெனவும் அவர்கள் எதிர்க்கிறார்கள்.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்....)

# சாதாரணன் எழுதுவது...



தமிழ் உணர்வைத் தக்கவைத்திருக்க உதவும் வாராந்தரிக் கட்டுரையாளர்களுக்கு.

அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை கடைக்கு வந்த லெக்சரர் க. என்னட்டையே பேப்பரை வாங்கி மேய்ஞ்சு போட்டு சனத்தின்ரை மூளைக்குள்ளே நஞ்சூத்துறாங்கள் எண்டு சொல்லிப் பேப்பரை விசிறியடிச்சுப் போட்டு வெளிக்கிடேக்கதான்.... உந்த மாதிரி ஆக்களுக்கு விளங்காத உங்கட முக்கியத்துவம் என்னை உசுப்ப உடன இந்தக் கடிதத்தை எழுத எண்டு வெளிக்கிட்டனான்.

நாங்கள் இண்டைக்கும் தமிழன் எண்டு சொல்லி ஒரு கெப்பரோட நினைக்க முடியுதெண்டால் அது ஞாயிறுக்கு ஞாயிறு நீங்கள் எழுதுறதுகளைப் படிக்க முடியிறதாலைதான்!

என்ன ஒரு தெளிவு! என்ன ஒரு விளக்கம்! சிங்கள அரசாங்கம், சிங்களக் கட்சிகள், சிங்களப் பேப்பர்கள் எப்பிடியெல்லாம் எங்களைக் கிள்ளுக் கீரையாய் நினைச்சுக் கொண்டு ஆட்டம் போட வெளிக்கிடுகினம் எண்டு நீங்கள் எழுதேக்கை உடம்பெல்லாம் தீப்பத்துற மாதிரி வரும்.

எல்லாச் சிங்களவருக்கும் எங்கள் மேல பாயுறது தான் ஒரே சிந்தனை எண்டு தெரிஞ்சால் எப்பிடி நிம்மதியாய் இருக்கேலும் . ஆனால், நீங்கள் விடமாட்டியள்!

ஏதோ ஒரு கட்டுரைக்குள்ள அவைக்கு எச்சரிக்கை இருக்கும்.

"இந்த நாட்டில நீங்களும் நிம்மதியாய் வாழவேணுமெண்டால் முதல்ல நீங்கள் ஒற்றுமையாகி ஒண்டைத்தரவேணும். அதாவது, உங்களுக்குள்ளேயும் ஒரு ஏகப்பிரதிநிதி வேணும். ஒத்த முடிவோட எங்கட ஆள் கேக்கிறதைக் குடுக்க ரெடியாகோணும். இப்பிடி ஒரு தீர்வுக்கு நீங்கள் வராட்டில் இந்த நாடு சிதறிச் சின்னாபின்னமாகிச் சீரழிஞ்சு போறதை ஆராலும் தடுக்கேலாது...." எண்டு ஆணித்தரமாய் நீங்கள் புட்டுப் புட்டு வைக்கேக்க நெஞ்சு புல்லரிச்சுப் போகும்.

அதிலும், சிதறி... சின்னாபின்னமாகி... சீரழிஞ்சு... எண்டு வாசிச்சுக் கொண்டு வரேக்கையே ட்ரெயின் கவிழுறது, கோயிலுக்க குண்டு வெடிக்கிறது, சண்டை அங்காலைப்பக்கம் தானேஎண்டு சாமான் வாங்கக் கடைக்கு வேக்குகளோடை வந்தவையெல்லாம் சிதறி வெடிச்சு, பீஸ் பீஸாகிறதெல்லாம் கண்ணுக்குள்ள ஓடும்.

ஆ... இப்ப அவைக்கு வரிவாய் விளங்கும் எண்டு வலு திருப்தியாய் இருக்கும். இந்த அழிவுக்கெல்லாம் காரணம் ஆட்சியில இருக்கிறவை தான் எண்டது உங்கட எழுத்தில தெளிவாய் விளங்கும். பிறகு கொலைகளைப்பற்றி நமக்கென்ன குற்றவுணர்ச்சி? 'அந்த என்னம்பொண்டுத் தீர்வைக் குடுத்திட்டியள் எண்டால் இப்பிடியான ஆள் அழிவு, பொருளாதார அழிவு எல்லாம் நிண்டிடும் தானே! எண்டு எனக்கும் எழுதிற ஆக்களோடு சேர்ந்து கொக்கரிக்கத் தோணும்.

எங்கட லெக்சருக்குத் தான் ஒரு அறுப்பும் விளங்காது. கதை முடிஞ்ச பிறகு ராமர் சீதைக்கு என்ன முறை எண்டு கேட்ட மாதிரி, அப்ப என்ன தான் வேணுமெண்டிறாங்கள்? எண்டு கேட்டுக் கொண்டு நிக்கும் மனுசன்.

எனக்கு ஏறிக்கொண்டு வரும். நாங்கள் தனிநாடு கேட்டனாங்கள். தரேலாது எண்டால் என்ன தரப் போகினம் எண்டு அவைதானே சொல்ல வேணும்!.

இல்லைச் சாதாரணா! மத்திய அரசாங்கத்திடம் நாங்கள் பெறவேண்டியது அதிகாரங்கள்.... அதை எப்பிடிப் பகிர்ந்து கொள்ள போறம் எண்டது. இது சரி வராட்டில தனிநாடு தான் எண்டு தண்டு கொண்டு புறப்படுறது வேற கதை. அதிகாரங்கள் என்னென்ன வேணும். எப்படியெப்படி வேணும் என்பது பற்றி உன்ர கட்டுரையாளர்கள் என்ன சொல்லுகினம்?

"அதையெப்படி அவை சொல்லுறது? என்ன வேணும் எண்டு கேக்கிற உரிமை போராடுகிறவைக்குத் தானே இருக்கு."

"மக்கள், பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் இன்னுமின்னும் எல்லோரும் சேர்ந்து தானே விடுதலைக்குப் போராடுறம்...."

"அது சரி தான். எண்டாலும் சுயநிர்ணய உரிமைக்காக களப்பலி குடுத்துச் சிங்கள அரசாங்கத்தைப் பணிய வைக்கிறவைக்குத் தானே அதைக் கேக்கிற உரிமை இருக்கு."

"அப்ப நீங்கள் கேக்கிறது என்ன?"

"அவை கேக்கிறதைக் குடுங்கோ எண்டது தான்! "

"ஓஹோ! " எண்டு இழுத்துச் சொல்லி நிப்பாட்டிப் போட்டுது மனுசன். பிறகு கொஞ்ச நேரங்கழிச்சுச் சொல்லுறார் அவர். "ராசா மேடையில வந்து நிண்டால் சனத்துக்குத் தெரியுந்தானே! பபுன் ஏன் முன்னாலே நிண்டு கொண்டு ராசா வந்தாரே! ராசா வந்தாரே எண்டு பாடுவான்?

அதைப் பாடுறது பபுன் இல்லை. கட்டியங்காரன் எண்டன் நான்

"ஆரோ ஒருத்தர்.... அவர் தேவைதானா? களப்பலி குடுக்கிறவை கேட்கட்டும், விமானக் குண்டு போடுறவை குடுக்கட்டும்... எண்டால் இடையில இவை ஏன் நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லுறவை மாதிரி வேசங்கட்டி ஆடுகினம்?"

இப்ப என்ன தான் எழுதோணும் எண்டிறியள் சேர்?"

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்...)

# நிதிச் சிக்கலில் தமிழகம்

தமிழகத்தில் ஒரு சம்பிரதாயம் உண்டு. மறைந்த தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் அரசு சார்பில் கொண்டாடப் படும். அப்போது அத்தலைவர்களின் சிலைக ளுக்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் சென்று மாலை அணிவிப்பார்கள். ஆனால் இந்த ஆண்டு அதே போல் சிந்தனைச் சிற்பி என்று அழைக்கப்படும் தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் சிங்காரவேலரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்படமாட்டாது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. காரணம் என்ன தெரியுமா? அரசு கஜானாவில் பணம் இல்லையாம்.

இச்செய்தியை சாதாரணமானது தான் என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. எப்படிப் பட்ட நிதிச்சிக்கலில் தமிழக அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பது ஒரு எடுத்துக் காட்டு. அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கவே போதுமான நிதியில்லை. ஏன் இந்த நிலை.



கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க முன்வைத்த முழங்கங்களில முக்கியமானது என்னவென்றால் ஜெயலலிதா முதல்வரானால் தமிழகத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும் என்பதுதான். விற்பனையாகாத வீட்டுமனைகள் விற்பனையாகும். வியாபாரம் பல்கிப் பெருகும். தொழில் முன்னேற்றம் அடையும் என்றெல்லாம் பேசப்பட்டது. தமிழக மக்கள் இதை நிச்சயமாக நம்பினார்கள். தி.மு.க ஆட்சியானது மோசம் என்று யாரும் கூறமுடியாவிட்டாலும் அதிமுக ஆட்சி வந்தால்தான் தங்கள் கையில் காசு புழங்கும் என்று நம்பி ஜெயலலிதாவுக்குப் பெருவாரியாக வாக்களித்தார்கள். அ.தி.மு.க வெற்றியும் பெற்றது.

ஆனால், பதவியேற்பு முடிந்ததும் நிதியமைச்சர் சி.பொன்னையன் பத்திரிகையாளர்களை நட்பு முறையில் சந்தித்தார். அவர் முதலில் வெளியிட்ட தகவல் என்னவென்றால், தி.மு.க அரசு கஜானாவைக் காலியாக்கி விட்டுச் சென்றிருக்கிறது என்பதுதான். பல்வேறு சிக்கன நடவடிக்கைகளுக்குத் தயாராகவில்லையென்றால் அரசை நடத்துவதே கடினம் என்று அவர் தெரிவித்தார். அரசின் நிதி நிலை குறித்து ஒரு வெள்ளை அறிக்கையானது சட்டப்பேரவையின் முதற் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழக அரசின் பட்ஜெட் பற்றாக்குறையானது சுமார் 5,781 கோடியை எட்டியிருக்கிறது என்று அந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வெள்ளை அறிக்கையின் பின்னணியில் அரசியல் இல்லாமல் இல்லை. முந்தைய தி.மு.க அரசின் மீது ஒட்டுமொத்தமாக பழி சுமத்துவதே அதன் நோக்கம் என்பது விளங்கும்.

உதாரணமாக தமிழகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி திறன் என்பது 1991 முதல் 1996ம் ஆண்டுவரை 6.66 சதவீதமாக இருந்தது. இந்த உற்பத்தியானது 1996ல் இருந்து 2001 வரை தி.மு.க ஆட்சிக் காலத்தில் 6.00 சதவீதமாக குறைந்து விட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது. தொழில்துறை வளர்ச்சி என்பது 6.92 சதவீதத்தில் இருந்து 4.14 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது என்று அ.தி.மு.க அரசு கூறுகிறது. ஆனால் தி.மு.க ஆண்ட காலத்தில், தமிழகம் தொழில் துறையில் மகாராஷ்டிரத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் கூறியதில் உண்மையில்லை என்கிறார் ஜெயலலிதா.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதற்காக பல்வேறு நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய பணத்தொகை சுமார் ரூ.700 கோடி அளிக்கப்படவில்லை என்று அ.தி.மு.க அரசு சமர்ப்பித்த அந்த வெள்ளையறிக்கை மேலும் தெரிவித்தது.

பல்வேறு நிறுவனங்களில் இருந்து கடன் வாங்கினாலும் பிரச்சனை தீரவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அரசு வருவாயில் மிகப்பெரிய பங்கு அரசு ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியமும் வழங்குவதற்குப் போய் விடுகிறது. அரசின் மொத்த வருவாயில் 52 சதவீதமும், வரிமூலம் அரசுக்கு வரும் வருவாயில் 92 சதவீதமும் இவ்வாறு செலவளிக்கப் படுகிறது என்று அரசு தெரிவித்தது.

இது ஒருபுறமிருக்க மானியங்கள் என்ற பெயரில் பெருந்தொகை செலவிடப்படுகிறது. இந்தியாவிலேயே உணவுக்கென அதிக அளவில் மானியம் வழங்கும் மாநிலம் தமிழ்நாடுதான். 1991ம் ஆண்டு ரூ 616 கோடியாக இருந்த இந்த மானியம் பத்து ஆண்டுகளில் ரூ 1540 கோடியாக உயர்ந்துள்ளது. அதே சமயத்தில் விவசாயத்துறையில் உற்பத்தியானது 4.33 சதவீதத்தில் இருந்து 2.66 சதவீதமாகக் குறைந்து விட்டது.

மின்துறையை எடுத்துக் கொண்டால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு இதுவரை ஏற்பட்டுள்ள நஷ்டம் ரூ 4938 கோடியைத் தாண்டி விட்டது. மின்சாரத்தை விநியோகம் செய்யும் போது ஏற்படும் இழப்பீடு காரணமாக ரூ 2000 கோடியும் விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்குவதன் காரணமாக ரூ 3,208 கோடியும் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக சட்டப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது. இப்படி எல்லாத் துறைகளிலும் கடுமையான இழப்பு ஏற்பட்டுள்ளதாக அ.தி.மு.க தொடர்ந்து கூறி வருகிறது.

அது மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடந்து முடிந்து விட்ட நிலையில் அந்த அமைப்புகள் செயல்படுவதற்குப் போதுமான பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

பிரச்சனையைத் தீர்க்கும் முயற்சியாக சிக்கன நடவடிக்கைகளை அரசு தொடர ஆரம்பித்துள்ளது. முதல் நடவடிக்கையாக அரசு ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு என்ற திட்டத்தை அரசு செயல்படுத்த ஆரம்பித்தது. லாபத்தில் இயங்காத சில அரசு நிறுவனங்களை மூடுவதற்கான அரசாணைகள் பிறப்பிக்கப் பட்டன. தமிழ்நாடு விவசாய தொழில்துறை முன்னேற்றக் கழகம் மூடப்பட்டது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட பள்ளிகளை பொதுப் பள்ளிக்கூடங்களுடன் இணைக்கத் திட்டமிடப்பட்டது. பின்னர் எதிர்ப்புக் கிளம்பியதால் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்கள் செல்வதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

முக்கிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் குறைக்கப்பட்டன. தமிழகத்தில் மட்டும் பிரயாணம் செய்யும்போது அவர்கள் ரயிலில் சென்று வரவேண்டும் என்றும், வெளி மாநிலங்களுக்குச் செல்லும் போது மிகவும் தேவைப்பட்டாலன்றி விமானத்தில் செல்லக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்.....)

# GRAND COMPUTER SALE



**Intel Pentium I**
133MHz / 200MHz
2.0 GB HDD/ 32MB Ram
4MB VGA / 14' Color Monitor
CD ROM / Sound Card
340w Speaker (New)
Key Board/ Mouse (New)

Only 13,500/=

**A Gift for Children to Study & Play**
**Enjoy Audio, Video and Internet**

16MB Ram - 1400/=
56K Fax Modem (Int) - 1350/=
10/100 Network Card - 1250/=
Epson Stylus - C20SX - 7300/=

**FREE** : Internet & E-mail Connection
**FREE** : Installation of Windows, Ms Office, Sinhala/ Tamil Fonts, Games MP3 Songs & any more....

**Euro PC** No. 36, Station Road, Wellawatte, Col - 06. Hotline : 075 - 557419

## கம்பியூட்டர் டைப் செட்டிங் செய்யக் கூடியவர்கள் தேவை

நன்கு ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் வாரப்பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு கம்பியூட்டர் டைப்செட்டிங் செய்யக் கூடியவர்கள் உடனடியாக தேவை. APPLE COMPUTER ரில் தமிழ் மொழியில் வேகமாக டைப் செய்யக் கூடிய வர்களாக இருத்தல் வேண்டும். கொழும்பு பெரும்பாகத் துக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

சுய விபரக்கோவை அடங்கிய விண்ணப்பப்படிங்களை 28.02.2002 க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ஆசிரியர் தினமுரசு வாரமலர் 16A, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை கொழும்பு-06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

குறிப்பு: விண்ணப்பங்கள் தபால் மூலம் மாத்திரம் அனுப்பப்பட வேண்டும் நேரில் கையளிக்க முடியாது.

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் பெப்ரவரி 17 முதல் 23 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் பெப். 24 - 25 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் மார்ச் 02, 03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மார்ச் 09, 10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## ஓராண்டு நினைவஞ்சலி

முடிவில்லா ஒளியில் இளைப்பாறுக

மலர்வு 23 09 1938 — உதிர்வு 23 02 2001



**அமரர் ஐயம்பிள்ளை மரியாம்பிள்ளை**

உயிரைக்காக்க விலைபேசினோமையா!
முடியாமல்போய்விட்டது.
எம் கிட்னியைத் தர முனைந்தோமையா!
பொருந்தாமால் போய் விட்டது.
வெளியில் இருக்கும் செல்ல பிள்ளைகளை
பார்க்கத் துடித்தாயய்யா அதுவும்
முடியாமல் போய் விட்டது.
எங்களுக்கு எங்கள் ஐயா வேணும்.
அதுவும் முடியவில்லையே??
ஆறாத் துயரில் மூழ்கி நிற்கும் செல்வங்கள்.

திதி 23 02 2002

*அருமைச் சகோதரர் மாரிமுத்து நிக்கிலாஸ். அன்பு மனைவி ஆரோக்கியம்,* செல்வ மக்கள், மருமக்கள்: திரு. திருமதி எம்.எட்மன் (சுவிஸ்). திரு. திருமதி எஸ். யோன்( இலங்கை), திரு. திருமதி வி. குணலிங்கம் (ஜெர்மன்), திரு. திருமதி எம். பென்ஜமின் (இலண்டன்), திரு. திருமதி எம். றொபட்(இலண்டன்) மற்றும் பேரப்பிள்ளைகள் உறவினர். தெரிந்தவர்கள் அனைவரும்.

தகவல்: கடைசி செல்ல மகள் எம். மெற்றில்டா,பட்டனிச்சூர், மன்னார் வீதி. வவுனியா.

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 08 05 1940 — ஆண்டவன் அரவணைப்பில் 15 02 2002



**சுப்பையா அப்புத்துரை**

உரும்பராயை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா-அப்புத்துரை 15.02.2002 அன்று காலமானார். அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் அகிலன் (சுவிஸ்) அகல்யா (சுவிஸ்) அணிமொழி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரனின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம்.


தகவல்:- அகிலன் (மகன்), சுதா (மருமகன்)
தொடர்புகளுக்கு:- 01-8138293
மொபைல்:- 079-5855717, 078-8322560

S.Sutha
Flughafen str 12
8302 Kloten, Zurich, Switzerland.

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?. திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?. காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
**Dr.P.K.Saamy J.D.G.A. NL JP**
**Hon. Prof. (IUMA)**
**Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.**

கொழும்பில்: No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்: 33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

# விளம்பரப் பகுதி

## சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமணசேவை சிறந்த முறையிலும் சமய முறைப்படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மேலும் எங்கள் சேவைகளில் பதிவ திருமணம் தங்கும் இடவசதி போக்குவரத்து வசதியுடன் குறித்தநேரத்தில் சிறந்த முறையிலும் நிறைவான சேவைக்கு நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் நாணயம், நேர்மை, செயல் திறன் மிகுந்த துரித சேவைகளுக்கும் எங்களை அழைக்கவும்.
அரசாங்க அனுமதிபெற்ற எங்கள் சிங்கப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

S.மோகனதாஸ்-R.பரமசிவம்
LAVENDER WEDDING SERVICE
BLK-808 FRENCH ROAD
#01-159 SINGAPORE 200 808
TELEPHONE NO: (HP) 65-92714294
T.P &FAX 65-2946580
65-3720592
E-MAIL VS BOY @ HOT MAIL.COM.

எமது வாடிக்கையாளர்களுக்கான ஒரு சேவைகளை பூர்த்தி செய்கின்றோம். உலகில் அனைத்து பாகங்களில் இருந்து சிங்கைக்கு வருவதற்கான விமானபயண சீட்டுகளை பெற்று தருகின்றோம் கீழ்காணும் எங்கள் நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும்.

இலங்கை தொடர்புக்கு: **A.ரமேஸ்** (T.P) 01-259344

லண்டன் தொடர்புக்கு **திரு.சுரேஸ்குமார்** (HP) 44-77-63343591

கனடா தொடர்புக்கு: **திரு மோகன ராஜ்** (HP) 1416-8586413 (5.P.M) 1416-2867936

பிரான்ஸ் தொடர்புக்கு: **திரு ரவி** (HP) 33 623589520 331 536204787

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM SERVICES INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL

1960 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மலையாள மாந்திரீக வசிய சர்வதேச சமுக தெய்வீக சேவை. (Govt. Approved) கிரகதோஷம், காதல், (ஆண்-பெண்) பிரச்சனை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம், கல்வி தொழில் விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, கணவன்-மனைவி குடும்ப வாழ்க்கையில் சந்தோசமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை மருந்தீடு போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற எவ்வித பிரச்சனைகளானாலும் "காண்டம்" இறைசக்தியால் பிரச்சனைக்குரிய காரணத்தை கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளிக்கப்படுகின்றது. நேரில் வர முடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் அல்லது பக்ஸ் பண்ணிவிட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பூசை, தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

**டாக்டர். பாலுசோதிடர்** S.(A).M.P J.P (S.L)

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
SILPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

THEIVEEGAM-NTSF-BATTICALOA.
SRI LANKA
TEL/FAX: 065-24825
வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு
TEL/FAX: 0099465-24825.

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 20.02.2002-23.02.2002
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, **00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.**
**E.mail: Sakun @Singnet Com.Sg**

## சுவிஸ் பேர்ண் மாநகரில்.

**Suji Jewellery Works**

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
**T.P. 0041-31-8191837**

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

## ஆரோக்கிய வாழ்வுக்கோர் ஆயுர்வேத இயற்கை மருத்துவம்

சுவிஸ் நாட்டின் இயற்கை வைத்தியர் சங்கம் (NVS), மாற்றீட்டு மருத்துவர்கள் சங்கம் (EMR) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று பின்வரும் வைத்திய முறைகள் கீழுள்ள முகவரியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ★ ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள்
- ★ ஆயுர்வேத 'தெரப்பி' முறைகள்
- ★ ஏழுநிலை மசாஜ் (முதுகு வலி)
- ★ ஒற்றைத்தலைவலி மசாஜ்
- ★ பிராணசக்தி மூலம் சிகிச்சை
- ★ கிசு உப்பு மருத்துவம்
- ★ அதிர்வு முறையிலான சீன மருத்துவம் (அலர்ஜி)

அனேகமான மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் இவற்றுக்கான செலவினை ஏற்றுக்கொள்கின்றன. (பெண்களுக்கான தனி மருத்துவ பிரிவும் உண்டு)

தொடர்புகளுக்கு:- Dr.இளங்கோ ஏரம்பமூர்த்தி ( ஆயுர்வேத இயற்கை வைத்தியர்)
Dip.in Ayurvedischer Medizin, A.Mitglied NVS, Praxis Ayurveda Siddha, Bellevuestr.12
3095 Spiegel b.Bern, Switzerland

Tel.031 9742021 Nat.0764112021
Fax. 031 9742024

அலசுவது-இராஜதந்திரி

# முறிகண்டிப் பிள்ளையாருக்கு அரோகரா!

'முறிகண்டிப்பிள்ளை யாருக்கு அரோகரா' என்று கூறி சிரசின் மேல் கைகூப்பி வணங்க வேண்டுமென்ற எண்ணமே ஏ-9 கண்டி வீதி திறக்கப்படுகிறது என்ற செய்தி வெளியானதும் மனதில் தோன்றியது.

ஏ-9 என்ற இலக்கத்தைக் கொண்ட நெடுஞ்சாலை யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பினூடாக மத்திய மலைநாட்டின் கண்டி மாநகர் வரை நீண்டிருக்கிறது. இதன் காரணமாகவே இந்த நெடுஞ்சாலை கண்டிவீதி எனவும் அழைக்கப்படுகிறது.

சுமார் பத்து வருடகாலமாக இவ்வீதி யாழ்ப்பாணத்துடனான தரைவழித் தொடர்புகள் எதுவுமின்றி இருந்தது. இதனால் யாழ்குடா நாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் உட்பட அத்தியாவசிய சேவைகள், மற்றும் போக்குவரத்து என்பவை அனைத்துமே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

கடந்த இருபது வருட கால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அதிகளவிலான இராணுவ நடவடிக்கைகளைச் சந்தித்த ஒரு நெடுஞ்சாலையாகவே ஏ-9 கண்டிவீதி விளங்குகின்றது.

ஆனால், இப்பெரும் நெடுஞ்சாலை இராணுவக்கெடுபிடிக்குள்ளாகு முன்னர், இங்கே அனைத்து வாகனங்களும் தாமாகவே தரித்து நின்று பயபக்தியுடன் செல்லும் ஒரே ஒரு காவலரண் மட்டுமே இருந்தது.

இருபுறமும் காடுகளடர்ந்த முறிகண்டிப் பகுதியில் விசாலமான விருட்சமொன்றின்கீழ் ஓலைகளால் வேயப்பட்ட சிறு குடிசையொன்றில் கோயில் கொண்டிருந்த விநாயகர் ஆலயமே அந்தக் காவலரணாகும்.

தெற்கேயிருந்து வடக்கே செல்வோரும், வடக்கேயிருந்து தெற்கே செல்வோரும் தமது வாகனங்களை நிறுத்திக் கற்பூரம் கொளுத்தி தேங்காய்களைத் தரையில் அடித்து வழிபடும் முறிகண்டி விநாயகர், ஏ-9 கண்டிவீதியின் ஒரு காவல் தெய்வமாகவே கருதப்பட்டிருந்தார்.

ஆனால் காலப் போக்கில் இந்த விநாயகர் ஆலயத்தின் முன்பாகச் செல்லும் கண்டிவீதி யுத்தக் கெடுபிடி காரணமாக வெறிச்சோடியதுடன் வட பிரதேசம் முழுவதுமே சோபை இழக்கலாயிற்று.

கடந்த வாரம், இலங்கையின் அனைத்து ஊடகங்களிலும் இந்த ஏ-9 கண்டிவீதி திறக்கப்பட்டது குறித்தே விரிவான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஏ-9 கண்டிவீதி நெடுஞ்சாலை கடந்த பத்து வருடகாலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்தின் பல முக்கிய கட்டங்களைச்சந்தித்ததாகவே இருக்கின்றது.

வவுனியாவுக்கு வடக்கே ஏ-9 கண்டிவீதியில் இருந்த அனைத்து இராணுவ முகாம்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கியிருந்தனர். இறுதியாக இரு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நுழைவாயிலான ஆனையிறவில் பத்தாயிரத்துக்குமதிகமான துருப்புக்களைக் கொண்டிருந்த இராணுவத் தளமும் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

1996ம் ஆண்டு யாழ் குடாநாட்டினுள் 'சூரியக்கதிர்' எனப் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு இராணுவம் பிரவேசித்தது. இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வன்னிப் பெருநிலப்பரபிலேயே தனது இராணுவ, அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரித்துக்கொண்டது.



இதனையடுத்து வன்னிப் பெருநிலப்பரப்பையும் ஊடறுத்து தமிழீழ விடுதலைப் புலிகளை முழு அளவில் முறியடிக்க முன்னாள் பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த திட்டமிட்டார். இதன்பொருட்டு 'வெற்றி நிச்சயம்' எனத் தமிழில் அர்த்தப்படும் 'ஜயசிக்குறுய்' என்ற பெயரைக்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் அவரது ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதன்மூலம் வடக்கே யாழ்குடா நாட்டிலிருந்து தெற்கே கண்டி மாநகர் வரையிலான ஏ-9 வீதியை முழு அளவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதே படைத்தரப்பின் இலக்காக இருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் கிளிநொச்சிப் பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரை 'ஓயாத அலைகள்' எனப் பெயரிடப்பட்ட தமது தாக்குதல் நடவடிக்கையின் மூலம் கடுமையாகத் தாக்கி முறியடித்ததையடுத்து 'வெற்றி நிச்சயம்' படையெடுப்பு தோல்வியைத் தழுவியிருந்தது.

கடந்த பத்து வருடகாலத்தில் இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் மூலமாகவே ஏ-9 கண்டிவீதி பெரிதும் பிரபலமானதாக விளங்கியிருந்தது. ஆனால் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை நெடிதாக நீண்டிருந்த ஏ-9 கண்டிவீதி மிகவும் குறிப்பிடத்தக்கதாகவே விளங்கியிருந்தது.

இராணுவக் கெடுபிடிகளில் சிக்கிச் சின்னாபின்னமாகுமுன்னர் ஏ-9 கண்டிவீதிவழியாக வடக்குக்கும், தெற்கிற்குமிடையே தினமும் நூற்றுக்கணக்கான லொறி வண்டிகள் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி இறக்கின.

இந்தநெடுஞ்சாலையின் இரு புறமும் வளம்மிக்க விவசாய நிலங்களைக் கொண்டிருந்தன.

கிளிநொச்சிக்கப்பால் வடக்கே பரந்தன், ஆனையிறவுப் பிரதேசங்கள் ஏ-9 கண்டிவீதியை அண்டியவையாக பரந்து விரிந்த உப்பளங்களைக் கொண்டிருந்தன. இந்த உப்பளங்களில் அறுவடை செய்யப்படும் உப்பின் ரகம் மிகவும் தரமானதாக இருந்தது.

இது தவிர பரந்தனில் அமைந்திருந்த இரசாயனத் தொழிற்சாலை சிறப்பாகவே இயங்கியதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு வேலைவாய்ப்பையும் பெற்றிருந்தனர்.

ஏ-9 கண்டிவீதிக்குச் சமாந்தரமாக தெற்கிலிருந்து வடக்கே காங்கேசன் துறைவரை புகையிரதப் பாதையும் காணப்பட்டது. இப்புகையிரதப் பாதை யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துக்கு ஒருவரப் பிரசாதமாகவே விளங்கியிருந்தது. அத்துடன் இலங்கையின் புகையிரதத் திணைக்களத்துக்கு பெருவாரியான வருவாயை அள்ளிக்குவித்த ஒரு ரயில் பாதையாகவும் இது விளங்கியிருந்தது.

ஆனால் தற்போது இந்த ரயில் பாதை இருந்தமைக்கான அடிச்சுவடே இல்லாமலிருக்கின்றது. இப்புகையிரதப்பாதையில் காணப்பட்ட இரும்புத் தண்டவாளங்கள், மரத்தினாலான சிலிப்பர் கட்டைகள் என்பவை பதுங்கு குழிகள், காப்பரண்கள் என்பவற்றை அமைப்பதற்காக அகற்றப்பட்டவையாகவே இருக்கின்றன.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னர் ஆனையிலிருந்த இராணுவத் தளத்திலிருந்து 'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்ற இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே முன்பிருந்த பிரபல ரயில் சேவையின் பெயரே யாழ்தேவியாகும். இந்தப் பெயரைத் தாங்கியதாகவே அந்த ஆனையிறவு இராணுவ நடவடிக்கை வடக்கே தென்மராட்சி நோக்கி மேற்கொள்ளப்பட்டது. அண்மையில் காலமான இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியாகவிருந்த சிசில் வைத்யரத்ன இந்த யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை முன்னின்று நடத்தினார்.

ஆனால் ஆரம்பித்த வேகத்திலேயே ஒப்பரேஷன் 'யாழ்தேவி' இராணுவ நடிவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டிருந்தது. புலிகள் இந்த இராணுவ நடவடிக்கைமீது தொடுத்த எதிர்த்தாக்குதலை அன்று வடக்கே தங்கியிருந்த 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனும் அவரோடு சென்றிருந்த வேறு பத்திரிகையாளர்கள் சிலரும் நேரில் கண்டிருந்தனர்.

இந்த ஏ-9 கண்டி வீதியில் இறுதியாக நடந்தேறிய யுத்தமே 'அக்னிச்சுவாலை' இராணுவ நடவடிக்கையாகும். கடந்த ஆண்டின் முதற் பகுதியில் இடம்பெற்ற இந்த இராணுவ நடிவடிக்கைகூடப் படைத்தரப்புக்கு பலமான இழப்பையே கொடுத்திருந்தது.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய பாராளுமன்ற அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணும் விதத்தில் பல்வேறு நல்லெண்ண நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நல்லெண்ண நடவடிக்கைகளில் பிரதானமானதாகவே ஏ-9 கண்டிவீதியைத் திறப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்புக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு காணப்படுகிறது.

ஏ-9 கண்டிவீதியில் தத்தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இதுவரை காலமும் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகள், கண்ணிவெடிகள் என்பவற்றை இருசாராருமே தோண்டி எடுத்து பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழியமைத்துள்ளனர். இருப்பினும் கிளிநொச்சிக்கப்பால் யாழ்ப்பாணம் வரையிலான ஆனையிறவு, தென்மராட்சிப் பகுதியை உள்ளடக்கிய ஏ-9 கண்டிவீதி திறக்கப்படாமலேயே இருக்கின்றது. முற்றுமுழுதாக அபாயகரமான சூழலிலிருந்தும் விடுபடாமலிருப்பதே இவ்வீதிப் பிரதேசம் திறக்கப்படாமைக்கான முக்கிய காரணமாகவிருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக ஏற்பட்டுவரும் நடவடிக்கைகளில் முக்கியமானதாகவே ஏ-9 கண்டிவீதித்திறப்பு விளங்குகின்றது.

ஆயினும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குரிய அரசியல் தீர்வுக்கான பயணமென்பது மேலும் நீண்ட தூரம் செல்ல வேண்டியதொன்றாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்குமிடையே நிரந்தர யுத்த நிறுத்தமொன்றுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எல்.ரி.ரி.ஈ தரப்பும், அரசுத் தரப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கொண்டு வருவதில் தப்பெண்ணங்களுக்கு இடந்தராமல் இருக்கும் வகையில் ஒரு நகல் திட்டமொன்றைத் தயாரிக்கத் தயாராகவிருப்பதாகவும் நோர்வே அறிவித்துள்ளது.

சமரச நடவடிக்கைகள் தொடர்பாக எல்.ரி.ரி.ஈ.க்கும் பிரதமர் ரணிலின் அரசுக்குமிடையே ஏற்பட்டு வரும் நல்லெண்ணங்களின் அடிப்படையில் சமாதான சகவாழ்வு குறித்து முழு நாடுமே மிகுந்த எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளது.

இருந்த போதிலும் கடந்தகால அனுபவங்களை மனதில் நிறுத்தியுள்ள மக்களிடம் இலவுகாத்த கிளியின் கதை இனியும் தொடருமோ? என்ற எண்ணமும் தோன்றாமலில்லை.

ஒரு நிரந்தர சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்திவிடவேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நோர்வே அரசு கடுமையாகவே உழைக்கின்றது.

ஏறத்தாழ இதேபோன்ற பங்களிப்பை மேற்கொண்டே இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்குமிடையேயும் சமாதான ஒப்பந்தமொன்றை நோர்வே கொண்டு வந்திருந்தது. ஆனால் தற்போது இஸ்ரேல், பாலஸ்தீனத்துக்கிடையே மீளவும் கொடிய யுத்தம் மூண்டுள்ளது.

சமாதானத்துக்கான பாதை திறக்கப்படலாம்; அதில் இருக்கும் தடைக்கற்களும் அகற்றப்படலாம். ஆனால் அப்பாதை மீளவும் மூடப்படாமல், அதன் மீது புதிய தடைக் கற்களும் வந்து வீழ்ந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலமே ஓர் அர்த்தமுள்ள சமாதானப் பயணத்தை உறுதியுடன் மேற்கொள்ள முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**மகேஸ்வரருக்கு** சண்டே லீடர் வழங்கியிருந்த 'புகழ்மாலையை' வாசிக்க உடம்பெல்லாம் புல்லரிக்குது. எங்களுக்கே தெரியாமல் எங்களின்ர அமைச்சர் எத்தனை கெட்டித்தனங்களை செய்து போட்டார் எண்டு வியப்பாத்தான் கிடக்கு. என்ன இருந்தாலும் மண்ணெண்ணெய் பீப்பாய்க்குள் கோட்சூட்டோடு நம்ம அமைச்சரை இறக்கி வைக்கிற மாதிரி காட்டூன் கீறியிருக்கக் கூடாது! ரணிலின்ர தம்பியார் நடத்திற பேப்பரில யூ.என்.பி. அமைச்சர் ஒருவரை உந்தக் கிழிகிழிக்கினமெண்டால் எங்களின்ர அமைச்சர் மேல பிரதமருக்கு எத்தனை நல்லபிப்பிராயம் இருக்குமெண்டு புரிஞ்சுக்கலாமல்லே...

**அரசாங்கம்** அமைஞ்சு ரெண்டு.மாசம் கடக்க முன்னரே 'ரிசைன் அரசியல் 'சூடு பிடிக்க ஆரம்பிச்சிருச்சு. மகேஸ்வரர் முதலில் மிரட்டினவர். பிறகு சஜித் பிரேமதாசா, ஆறுமுகன், மகிந்த விஜேசேகரா என்று ஒவ்வொருத்தராய் ரணிலை மிரட்டத் தொடங்கிட்டினம். உப்பிடி எல்லோரும் ரிசைன் பண்ணித் தொலைச்சால் யார் அரசாங்கம் நடத்திறது.

**புனர்வாழ்வு** அமைச்சர் ஒரு தடவை யாழ்ப்பாணம் போய் வர சுமார் நாலரை இலட்சம் செலவாகுதாம். குடாநாட்டு மக்களுக்காக செலவழிக்கப்பட வேண்டிய நிதி உந்தமாதிரி பிளைட்டுக்கும், ஹோட்டலுக்கும் அள்ளி இறைக்கப்படுமெண்டால் சனத்தை யார் கவனிக்கிறது?

**உள்ளூராட்சி** சபைத் தேர்தல் முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏராளமான உள்வீட்டுப் பிணக்குகளுக்கு வழி சமச்சுப் போட்டுது. கட்சியின்ர செயலாளர் கையில வச்சிருந்த வேட்புமனுப் பத்திரங்களை ஒலுவில் கிராம மக்கள் பறிச்செடுத்து கிழிச்செறிஞ்சவையாம். ஆளுக்காள் வெட்டுக்கொத்து அதிகரிச்சுக்கொண்டு போகுது. மரம் சாய்ஞ்சிடாமல் இருந்தால் சரி.

**ரவூப் ஹக்கீம்** கல்முனை தனிமாவட்டத்தை கைவிட்டுட்டாரோ எண்டு அவரின்ர ஆதரவாளர் ஒருத்தரிட்ட வாய் தவறிக் கேட்டுப் போட்டன். அவர் சொன்ன பதில் "கப்பல் இருக்கும் போது 'கல்முனையை' கண்டுகொள்ள மாட்டார் கப்பலை பறிச்சால் உடனே தனிமாவட்டம் கேட்டு மிரட்டுவார்"

**ஆயுதக் கப்பல்** வராத நேரங்களில் கூட கப்பல் வருகுது, ஆள் சேர்க்கிறார்கள். என்றெல்லாம் சொல்லி புலிகளின் பெயரைக் கெடுக்க அரசாங்கம் பாடுபட்டது அந்தக் காலம். இப்ப நிலமை தலைகீழாய் மாறிப்போச்சு. புலிகள் ஆயுதம் வாங்கவும் இல்லை ஆள் பிடிக்கவுமில்லை எண்டு இலங்கை பாதுகாப்பு அமைச்சர் தன்வாயால சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கு.

**இவ்வாரப்** பொன்மொழி. மாவீரன் நெப்போலியன் சொன்னது.

**ஆண்களுக்கு ஆறு மணித்தியாலத் தூக்கம்.**
**பெண்களுக்கு ஏழு மணித்தியாலத் தூக்கம்**
**முட்டாள்களுக்கு எட்டு மணிதியாலத் தூக்கம்.**

# கடல் தாண்டிச் சென்று ஒரு கதறல் போராட்டம்!

உலகெங்கும் காதலர் தினம் அமர்க்களமாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால் காதலித்துக் கரம் பிடித்தவளைக் கதறக் கதறக் கொன்றிருக்கிறான் ஒரு காதலன். அதுவும் ஆறு மாதத்துக்கு முன்னால்! அந்தப் பாதகம் இப்போதுதான் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

கொலை செய்யப்பட்ட ஜானகி இலங்கை கொழும்பு நகரைச் சேர்ந்தவர். இவரது கணவர் உதயகுமாரும் இவர்களுக்கு கௌதம், கௌசிகன் என்ற துறுதுறுப்பான இரண்டு பையன்கள். இறந்துபோன ஜானகியின் சகோதரி சரஸ்வதியின் தீவிர முயற்சியால்தான் இப்போது உதயகுமாரும் அவரது சகோதரி குமுதவல்லியும் போலீசின் பிடியில்!



சகோதரியை இழந்து, அநாதைகளாக்கப்பட்டிருக்கும் அவரது இரண்டு குழந்தைகளுடன் இருந்த சரஸ்வதியைச் சந்தித்தபோது அழுதழுது வீங்கிய கண்கள், எந்த நிமிடமும் பொத்துக்கொண்டு உடையக் காத்திருக்கும் கண்ணீர், கௌதம், கௌசிகன் எதிர்காலம் குறித்த வேதனை படர்ந்த முகம், இப்படி இருந்த சரஸ்வதி பலவீனமான குரலில் பேச ஆரம்பித்தார்.

## இலங்கைப் பெண்ணுக்கு தமிழகத்தில் நடந்த கொடுமை!

"எம் புருஷனோட தம்பிதாங்க உதயகுமார். என் தங்கச்சியும் அவரும் காதலிச்சது தெரிந்ததும் திருமணம் செய்து வச்சோம். இரண்டு குழந்தைங்க. எல்லாம் சந்தோஷமாத்தான் இருந்தது. உதயகுமாரோட அக்கா குமுதவல்லி வந்த பிறகுதான் எல்லாமே கெட்டுப் போச்சு. குமுதவல்லியோட புருஷன் ரொம்ப வருஷமா லண்டன்ல இருக்காரு. அதனால உதவிக்குத் தன் தம்பிய குடும்பத்தோட வைத்துக்கொண்டார் குமுதவல்லி. வேலைக்கு எதுவும் போகாமல் உதயகுமாரும் சோம்பேறி ஆகிவிட்டார். அதோட குடிப்பழக்கம் வேறு. ஒன்றரை வருஷத்துக்கு முந்திதான் குமுதவல்லி சென்னையில் வந்து செட்டில் ஆனார். வந்த கொஞ்ச நாளில் உதயகுமார் குடும்பத்தையும் இங்கே கொண்டு வந்துட்டார். இங்கே வந்த பிறகு உதயகுமார் குடிச்சுட்டு ஜானகியையும் குழந்தைகளையும் அடித்துக் கொடுமைப்படுத்தறது வழக்கமாப் போச்சு. உன்னால தான் எம் புருஷன் கெட்டுட்டாருன்னு ஜானகி, குமுதவல்லியிடம் சண்டை போட்டிருக்கிறாள். அதற்காகவும் அடி, உதை. இதனால் என் தங்கச்சி இலங்கைக்கே திரும்ப வந்துட்டாள்.

ஆனா குழந்தைங்களைப் பார்க்காம அவளால இருக்க முடியலை. இதனால் கணவரையும், குழந்தைகளையும் கூட்டிட்டு வர்றதா சொல்லிட்டு மறுபடியும் சென்னைக்குப் போனாள். போனவ போனவதான். இப்ப பொணத்தக்கூட பார்க்க முடியலை...'' - சொல்லிவிட்டுக் கதறினார் சரஸ்வதி.

பெரியம்மாவின் அழுகைக்குக் காரணம் தெரியாமல் விழித்துக் கொண்டு நின்ற கௌதமிடமும், கௌசிக்கிடமும் பேச்சுக் கொடுத்தபோது, படு சுட்டியாய் இருந்த கௌசிக் படபடவென்று பொரிந்தான்.

"ஒருநாள் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சண்டை. அம்மாவை அப்பா அடிச்சிது. அம்மா மூக்குல ரத்தம் வந்தது. அப்பா எங்களை ஒரு ரூம்ல போட்டுப் பூட்டிட்டாரு. நாங்க அப்படியே தூங்கிட்டோம். காலைல அம்மாவைத் தேடினோம். காணலை. அப்பாட்ட கேட்டோம். அம்மா ஊருக்குப் போயிட்டான்னு சொன்னார். அம்மா, பெரிய சூட்கேசும் கொண்டு வந்திருந்தா. சின்ன சூட்கேசும் கொண்டு வந்திருந்தா. சின்ன சூட்கேசு மட்டும் இருந்தது. அதை எடுத்திட்டு வந்து. அம்மா சூட்கேஸ் இங்கே இருக்கு. அம்மா போகல, பொய் சொல்றேன்னு சொன்னேன். அதுக்கு அப்பா "அம்மா போகும்போது எனக்கு இதைக் கொடுத்திட்டுப் போயிட்டா'' என்றார். பிறகு பாத்ரூமல ரத்தம் கிடந்தது. அதுபற்றிக் கேட்டப்போ, ஹேர்-டை சிந்திச்சின்னு அப்பா சொன்னார். அப்பா சட்டை பாக்கெட்ல அம்மாவோட கம்மல் கிடக்கிறதைப் பார்த்தேன். ஆனா அது பற்றிக் கேட்கல. அம்மாவை ஏதோ பண்ணிட்டாங்கன்னு கௌதம்கிட்ட மட்டும் சொன்னேன். அதன் பிறகு அம்மாவைப் பார்க்கவே இல்லை''. இன்னும் அவன் குரலில் மழலை மாறவில்லை.

போலீஸ் என்ன சொல்கிறது? "சம்பவத்தன்று இருவருக்கும் தகராறு ஏற்பட்டு, அடிதடிவரை போயுள்ளது. பின்னர் ஜானகியை சமாதானப்படுத்தி இருக்கிறார் உதயகுமார். நானும் குழந்தைகளும் இலங்கைக்கு வந்து விடுகிறோம் என்று நயமாகப் பேசி ஒட்டலுக்கு அழைத்துப் போய் இருவரும் மது அருந்தியுள்ளனர். ஜானகிக்கு இலங்கையில் ஆனந்த் என்ற காதலன் இருப்பதால் அவருடன் சென்று வாழ அவர் விரும்பி இருக்கிறார். இதனால் ஆத்திரமான உதயகுமார் அவர் தூங்கும் போது கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டார். பின்னர் குமுதவல்லியின் துணையுடன் சூட்கேசில் பிணத்தை வைத்து. நாகபட்டினம் போவது போல, பஸ் நிலையத்துக்கு வந்து, பிணத்தைப் போட்டுவிட்டுத் தப்பிவிட்டனர்'' என்கிறார் போலீஸ் இணை கமிஷனர் சைலேந்திரபாபு.

இந்தக் கொலை எப்படி வெளியுலகுக்குத் தெரிந்தது? என்ற கேள்விக்கு மீண்டும் சரஸ்வதியே பேசினார்.

"ஜானகியிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாததால் என் அம்மாவோட சென்னைக்கு வந்தேன். குமுதவல்லி வீட்டுக்குப் போனால் அங்க யாரும் இல்லை. அதுக்குப் பிறகு ஒரு ஜவுளிக்கடைக்காரங்க மூலமா குமுதவல்லியோட புது வீட்டைக் கண்டு பிடிச்சேன். 'ஜானகி இலங்கைக்கு வந்துவிட்டாள்' என்று குமுதவல்லி சொன்னார். அது பொய். ஜானகியோட புருஷன் உதயகுமார்கிட்டையும் கேட்டேன். இந்தா கூட்டிட்டு வர்றேன்னு போனவர். பதினைந்து நாள் கழிச்சுத்தான் வந்தாரு. வந்தவர் கதவை சாத்திவிட்டு எங்க காலில் விழுந்து கோபத்தில் ஒரு நாள் ஜானகிய அடிச்சேன். செத்துட்டா. எங்களை மன்னிச்சிடுங்கன்னு சொல்லி அழுதார். போலீசுக்குப் போக வேண்டாம்னு ரெண்டு பேரும் கெஞ்சினாங்க.

திருவான்மியூர் ஸ்டேஷனில் புகார் செய்தேன். மறுநாள் வரச்சொன்னவங்க, திடீர்னு உன் தங்கச்சி இலங்கைக்கே போயிட்டாள் என்றனர். கதறி அழுது இலங்கைத் தூதரகத்தில் புகார் செய்தேன். அவங்க சி.பி.சி.ஐ.டிக்குப் போங்கன்னு சொன்னாங்க. அப்புறம் அங்க புகார் செய்த பிறகுதான் உதயகுமாரையும் குமுதவல்லியையும் அரெஸ்ட் செய்தாங்க. அப்புறம் ஆறு மாசத்துக்கு முன்னால் பஸ் ஸ்டாண்ட்ல இருந்த என் தங்கச்சியின் போட்டோ போட்டிருந்த பத்திரிகைகளைப் பார்த்தேன். நான் தைச்சுக் கொடுத்த சுடிதார்லதான் ஜானகி செத்துக் கிடந்தா. இப்ப இந்தக் குழந்தைகளை நினைச்சாத்தான் என்னால ஒண்ணுமே பண்ண முடியலை'' என்ற சரஸ்வதி மீண்டும் அழ ஆரம்பித்துவிட்டார்.

ஆனால் இந்த சோகங்கள் எதுவுமே தெரியாமல் கௌதமும், கௌசிக்கும் பிளாஸ்டிக் துப்பாக்கியை வைத்துக்கொண்டு திருடன்-போலீஸ் விளையாடிக் கொண்டிருந்தனர் அப்பாவிகளாக.




காதல் ஆப்பிள் என்று ஒரு பழத்தைக் குறிப்பிடுகின்றனர். அது என்ன தெரியுமா? தக்காளி பழத்துக்கு தான் காதல் ஆப்பிள் என்று பெயர்

பிரான்சை ஆண்ட நெப்போலியன் தன் காதலி ஜோசப்பைன் என்பவருக்கு எழுதிய எட்டு காதல் கடிதங்கள் லண்டனில் ஏலமிடப்பட்டன. எட்டுக் கடிதங்களும் ரூ.60 ஆயிரத்துக்கு ஏலம் போயின.

ஒரு காதலன் தன் காதலியின் நினைவாக எழுப்பிய கட்டடம் தாஜ் மஹால், ஒரு காதலி தன் காதலன் நினைவாக எழுப்பிய கட்டடம் எது தெரியுமா? பட்டத்தரசி மீகாபேகம் தன் கணவன் ஹிமாயூனின் கல்லறையின் மேல் ஒரு கட்டடத்தை எழுப்பினாள். இது டில்லியில் உள்ளது. இந்தியாவில் மொகலாய மன்னர்கள் கட்டிய கலை அழகு மிகுந்த முதல் கட்டடம் என்ற பெருமை பெற்ற இதுவே தாஜ்மஹாலின் முன்னோடி என்ற சிறப்புக்குரியது.

உலகிலேயே மிகப் பெரிய காதல் கடிதத்தை எழுதியவர் மார்ஷல் டி-லெக்லூர் என்ற பொர்ஷிய ஓவியர்தான். 1865-ம் ஆண்டில் அவர்தம் காதலியான மாலிக்டிவிலடோ என்பவருக்காக 56 லட்சத்து 25 ஆயிரம் சொற்கள் கொண்ட கடிதத்தை எழுதினார். அது சுமார் 70 நாவல்களை எழுதுவதற்கு வேண்டிய வார்த்தைகளாகும்.

காதல் என்பது என்டார்பின், டோபமின், நோரெபினெப்ரின் போன்ற ரசாயன பொருட்கள் மூளையில் செய்யும் சாகஸம் தான் என்று 1993ல் கண்டறியப்பட்டது. இருப்பினும் செக்ஸ் உணர்ச்சிகளுக்கு ஹைப்போதலாம்ஸ் தான் காரணம் என 1963லேயே கண்டுபிடித்து விட்டனர்.

இத்தாலி நாட்டிலுள்ள ரோபர்டோ என்பவர் அலெக்ஸான்ட்ரா எனும் பெண்ணைக் காதலித்தார். இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடக்கப் போகும் வேளையில் அலெக்ஸாண்ட்ராவுக்கு ரோபாடோ மீது திடீரென்று கோபம் ஏற்பட நிச்சயதார்த்தம் தடைப்பட்டது. இது நடந்தது 1994ம் ஆண்டு. அன்றைய தினத்திலிருந்து தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு ஒரு நாள்கூட தவறாமல் ரோஜா மலரை 1480 நாட்களுக்கு அனுப்பினார் ரோபர்டோ. அப்படியிருந்தும் அலெக்ஸாண்ட்ராவின் கோபம் தணியவில்லை.

ஷீசி தனது ஆறாவது வயதில் சீனாவின் அரசர் ஆனார். 17 வருடம் ஆண்ட பிறகு தமக்குப் பிடித்த பெண்ணை மணக்க அரச பதவி தடையாயிருக்கவே பதவியைத் துறந்து மடத்தில் சேர்ந்துவிட்டார். அவர் இறந்த பின் அவரின் உடலைப்பதப்படுத்தி அரச உடையில் சிம்மாசனத்தில் அமர்த்தி பாதுகாத்தனர். காதலுக்காக முடி துறந்த மன்னரை தரிசிக்க நாடெங்கிலுமிருந்து இப்போதும் காதலர்கள் வருகிறார்கள்.

தோமஸ் அல்வா எடிசன் மிகப்புகழ் பெற்ற விஞ்ஞானி, ஆனால், அவருக்கு காது கேட்காது. ஆகவே அவர் தன் காதலிக்கு தந்தி மொழியை கற்றுக் கொடுத்தார். தான் அவளை திருமணம் செய்து கொள்ள விரும்புவதை அவருடைய கையில் தான் விரல்களால் தந்தி தாளமிட்டு சொன்னார். அதைப் புரிந்து கொண்ட காதலி அவர் கரத்தில் தானும் தந்தி மொழியில் அவரை மணக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். காதலர் ஜோடி நாடகம் பார்க்கச் சென்றால், எடிசனின் காதலி கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களை தந்தி மொழியில் எடிசனின் தொடையில் தட்டி தெரிவிப்பாராம்.

காதல் கடிதங்களை எக் காரணம் கொண்டும் கறுப்பு மையினால் எழுதக்கூடாது. காதலி அல்லது காதலன் பெயரைக்கூட கறுப்புமையினால் எழுதக் கூடாது.

காதலனைப் பார்க்கக் கூடாது, அவனுடன் பேசக் கூடாது என்று கட்டளை விதித்தார் தந்தை, அப்படியானால் இனியாருவருடனும் பேசமாட்டேன் என சபதம் செய்தாள் மகள். 65 ஆண்டுகள் யாருடனும் பேசாமல் ஊமையாகவே வாழ்ந்து மடிந்தாள். அந்த அபாக்கியவதியின் பெயர் ஏதல்? உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு நாவல் ஆசிரியரான விக்டர் வியூகோவின் மகள். தன் 20ம் வயதில் ஆல்பர் டுபின் சென் என்ற இளைஞரைக் காதலித்தாள். 65 ஆண்டுகள் கழித்து (1915ல்) ஏதல் இறந்தாள். ஊமைபோலவே வாழ்ந்து, ஊமையாகவே செத்தாள். இவ்வளவு அதிக காலம், வாயிருந்தும் ஊமையாகவே வாழ்ந்தவர் வேறு யாருமில்லை. 1885-ல் விக்டர் ஹியூகோ இறந்தார். தந்தையின் பிணத்தைப் பார்த்து ஏதல் கண்ணீர் விட்டாளே தவிர அப்பொழுதும்கூட அவள் வாய் திறந்து பேசவில்லை.

முதன் முதலில் 1415ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் டியூக் ஆப் ஆர்லீன்ஸ் மன்னரானார், பிரான்சு நாட்டிலிருந்த தன் மனைவிக்கு தானே வாழ்த்து அட்டையை தயார்செய்து அதில் ஒரு காதல் கவிதையையும் எழுதி அனுப்பினார். இதுதான் முதல் காதலர் தின வாழ்த்து அட்டை.

காதலர் தினத்தன்று வாழ்த்து அட்டைகளைத் தாமே தயார் செய்துதான் முற்காலத்தில் அனுப்புவர். பிறகு ஃபிரான்ஸ் நாட்டில் இதய உருவத்தைப் பெரிதாக காகிதத்தில் செய்து அதன் மீது லேஸ் ஒட்டி வாழ்த்து அட்டைகளை தயார் செய்து விற்பனை செய்தனர். அதிலிருந்து காதலுக்கு இதய உருவம் அடையாளமாகி விட்டது.

பர்மாவிலுள்ள அமரபுரி கோயில் அலாதியான அமைப்புடன் கூடியது. இதன் கோபுரத்தின் வெளிப்புறம் ஏராளமான பிறைகள் இருக்கும். அவை ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய புத்தர் சிலை இருக்கும். இக்கோயில் போதவ்பாயா என்ற அரசனால் கட்டப்பட்டது. அரசனுடைய காதலி அம்மை நோய்வாய்ப் பட்டாள். அதிலிருந்து மீண்டு அவள் பிழைத்து விட்ட போதிலும், அம்மைத் தழும்புகள் அவருடைய அழகிய முகத்தை கோரமாகச் செய்து விட்டன. அதன் காரணமாக காதலியிடம் தனக்குள்ள அன்பு குறைந்து விடவில்லை என்பதை காட்டிக் கொள்ளவே இப்படிப்பட்ட அமைப்பில் அவன் ஆலயம் எழுப்பினான்.


கார்ல் வில்ஹெல்ம் என்பவர் ஜெர்மன் ராஜதந்திரி. கவிஞரான இவர். தன் கவிதையாற்றலை காதல் மனைவியின் புகழ்பாடவே பயன்படுத்தினார். ஒவ்வொரு நாளும் நூறு வரிகொண்ட கவிதையைத் தன் மனைவி மீது இயற்றி வந்தார். அவருக்கு ஆறு வருடங்கள் முன்னதாக மனைவி இறந்துவிட்டாள், ஆயினும், கவிதை எழுதுவதை நிறுத்தவில்லை. வழக்கப்படி நூறு வரி எழுதி கல்லறை மீது போட்டு வந்தார். மனைவியை அவர் இப்படிக் கவிதை எழுதியது எவ்வளவு காலம் தெரியுமா? 44 வருடங்கள்.

# முதலை வியாபாரம்

தண்ணீரில் தான் முதலையின் பலம். வெளியில் கொண்டுவந்து வாயைக் கட்டியதும் தோளில் அமைதியாக தொங்கிக்கொண்டிருக்கிறது பாருங்கள் பரகுவே நாட்டின் ஜெனரல் டயஸ் என்ற இடத்தில் கிளிக் செய்யப்பட்ட படம் இது. அங்கு நிலவும் அதிக வெப்பத்தாலும் தீவிரமாக அதிகரித்து வரும் குடியேற்றத் திட்டங்களாலும் நீர் வாழ் உயிரினங்கள் பலத்த அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. வற்றிப் போன பாரிய நீர்நிலை ஒன்றில் இருந்து பிடிக்கப்பட்ட முதலைகள் அருகில் உள்ள நகரங்களில் பணத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இங்கே பணம் கொடுத்து முதலை ஒன்றை வாங்கிச்செல்வதைத்தான் காண்கிறீர்கள்.





# நீ முன்னால் போ... நான் பின்னால் வருகிறேன்

வளைகுடா யுத்தத்தின்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஜோர்ஜ் புஷ். அமெரிக்க கன்ஸர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும் அவரே இருந்தார். அவருக்குப் பின்னர் கிளின்டன் இரு தடவைகள் அமெரிக்க ஜனாதிபதியாகினார். மீண்டும் புஷ் குடும்பத்தின் கைக்கு கடந்த ஆண்டு அமெரிக்காவின் ஆட்சி கிடைத்தது. பழைய புஷ்ஷுக்கல்ல. அவரது புதல்வரான ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஜனாதிபதியானார்.

மகனை ஜனாதிபதியாகக் கொண்டுவர தந்தை புஷ் பெரும் பாடுபட்டார். தேர்தல் உத்திகள் பிரசாரத் தந்திரங்கள், இராஜதந்திரம் என்று அத்தனையிலும் தனக்கிருந்த அனுபவத்தை மகனுக்குக் கற்றுக் கொடுத்து நாட்டின் தலைவராக்கினார்.

ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஜனாதிபதியாகியதன் பின்னர் அரசியலில் மட்டுமன்றி தனது அன்றாட வாழ்விலும் ஓய்வு நேரங்களை தந்தையுடன் களிக்கிறார். இங்கே நீங்கள் காண்பது தந்தையும் மகனும் கோல்ஃப் விளையாடிவிட்டு வருவதைத்தான்.

"நீ முன்னாலே போ, நான் பின்னால் வருகிறேன்" என்பதுபோல் இருக்கிறது அல்லவா இது.


# பனிமூட்டத்தில் அகப்பட்ட கார் பனிக்கட்டியாக...

அமெரிக்க கனேடிய எல்லையில் உள்ள பஃப்லோ நகரில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது. வீதி எங்கும் பனிமழை கொட்டி பனிக்கட்டிகளால் நிரம்பிக் காணப்படுகிறது.

வாகனங்களை வீதியோரத்தில் நிறுத்திவிட்டுச் சென்றால் சில மணி நேரங்களில் வந்து பார்க்கும்போது அவற்றின் பாதிக்கும் மேல் பனியால் மூடிக்கொள்கிறது.

அலுவலக ஊழியர் ஒருவர் தனது காரை வீதியோரத்தில் நிறுத்தி விட்டு காரியாலய நேரம் முடிந்து வெளியில் வந்து பார்த்தபோது அது முற்று முழுதாக பனியினால் மூடப்பட்டு கதவைக்கூட திறக்க முடியாத அளவு ஒரு பனிக்கட்டியாக கார் உருமாறியிருப்பதை கண்டார்.

இந்த நாடுகளில் குளிர் கால வெப்பநிலை -10° செல்சியஸையும் விடக் குறைந்து விடுகிறது. காலையில் பார்க்கும்போது கறுப்புநிற தார் வீதிகள் பெரும்பாலும் வெள்ளை நிறமாக மாறி பனித்துகள்களால் நிரம்பியிருக்கும்.



# தங்கம் ஏற்றும் ட்ரக்


தாக்குதலுக்குத் தயாராகிவிட்ட இராணுவ ட்ரக் வண்டி என்றா நினைக்கிறீர்கள். இல்லை. இது தங்கம் தோண்டப் புறப்பட்ட வாகனங்கள்.

தங்கச் சுரங்கங்களுக்குள் செல்ல முன்னர் அவற்றின் டயர்களை ஊழியர் ஒருவர் பரிசோதிப்பதையே காண்கிறீர்கள். அவுஸ்திரேலியாவின் மிகப்பெரும் தங்கச் சுரங்கமான 'கல் கூலி' சுறங்கப் பகுதிக்குள் செல்வதற்கே இந்த ட்ரக் வண்டிகள் தயாராகின்றன.

இந்த ஒரு ட்ரக்கின் விலை 15 இலட்சம் அமெரிக்க டொலர்கள். இவற்றில் பாவிக்கப்படும் ஒரு டயரின் பெறுமதி 13 ஆயிரம் டாலர்களாகும். 226 தொன் சேற்று மண்ணை சுரங்கத்துக்குள் இருந்து ஒரு டரக்கில் ஏற்றிவர முடியும்.

பேர்த் நகரிலிருந்து 500 கிலோ மீட்டர் கிழக்காக அமைந்திருக்கும் கல்கூலி பிரதேசத்தில் தங்கம் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதி 4 கிலோ மீட்டர் நீளமானது 1.5 கிலோ மீட்டர் அகலமானது. இந்தப் பகுதி தற்போது 650 மீட்டர் ஆழத்திற்கு தோண்டப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கிலிருந்தே தங்கம் கலந்த சேற்று மண் ட்ரக்குகள் மூலம் வெளியில் எடுத்துவரப் படுகிறது.

இங்கிருந்து வருடாந்தம் 8 இலட்சத்து 50 ஆயிரம் அவுண்ஸ் தங்கம் பெறப்படுகிறது. அடுத்த 16 வருட காலத்தில 300 தொன் தங்கத்தை இந்த சுரங்கங்களில் இருந்து பெறலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.



தகவல் பெட்டி

# சினி விசிட்


நவீன்-சிந்து

## 'டியூப்லைட்' நாயகனாக கனல் கண்ணன்

யூனிகார்ன் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'டியூப்லைட்'. இப்படத்தில் பிரபல ஸ்டண்ட் மாஸ்டரான கனல் கண்ணன் கதாநாயகனாக நடிக்கிறார். 'சேரன்-பாண்டியன்' படத்தில் ஸ்டண்ட் மாஸ்டராக அறிமுகமான கனல் கண்ணன் ரஜினிகாந்த், கமலஹாசன் உட்பட அனைத்து முன்னணி நடிகர்களுக்கும் ஸ்டண்ட் மாஸ்டராக பணியாற்றியவர்.

இவர் கதாநாயகனாக அறிமுகமாகும் இப் படத்தில் கதா நாயகியாக புதுமுகம் சந்தோஷி நடிக்கிறார்! மற்றும் எம்.எல். பாஸ்கர், புதுமுகம் பூர்ணிமா ஆகியோரும் நடிக்கிறார்கள்!

பழனிபாரதி, முத்து விஜயன் பாடல்களுக்கு புதிய இசை யமைப்பாளரான கலைவாணன் இசை யமைக்கிறார்.

கதை திரைக்கதை, எடிட்டிங் மற்றும் டைரக்ஷன் பொறுப்பேற்றிருப்பவர் கே.மகேஷ்குமார்.

யூனிர்கார்ன் படநிறுவனம் தயாரிக்கும் இப் படம் முழுக்க முழுக்க திரைப்படக் கல்லூரி மாணவர்களின் கூட்டு முயற்சியால் உருவாகிறது. வழக்கமான கதைகள் போன்று நாயகனுக்கு முக்கியம் கொடுக்கும் கதையாக இல்லாமல் முழுக்க முழுக்க நகைச்சுவை கலந்த வேடத்தில் நடிக்கிறார் கனல் கண்ணன்.

கிராமப்புற கலைகளில் ஒன்றான தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரன் போன்ற பாத்திரத்தில் நடிக்கிறார் கனல் கண்ணன்.


மனீஷா

## திரைப்படமாகின்றது சிவாஜியின் வரலாறு

நடிப்புலகின் இமயமாகத் திகழ்ந்து மறைந்துவிட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாற்றை படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது சிவாஜி பிலிம்ஸ்.

சிவாஜியின் புதல்வர்களான ராம்குமார், பிரபு ஆகியோர் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். சிவாஜி கணேசனின் பிறந்த இடம், அவர் நடித்த படங்கள், அவரைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்ற படங்கள் என அவரது வாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களும் படமாக்கப் படவுள்ளது.

## நடிகர் சங்க வெப்சைட்

தென் இந்திய ஒளிப்பதிவாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஒளி உத்சவ்' நிகழ்ச்சியில் தென்னிந்திய நடிகர் சங்க 'வெப்சைட்' ஒன்று ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது. நடிக நடிகையர் பற்றிய வெப்சைட்டை சங்கத் தலைவர் விஜயகாந்த் தொடங்கி வைத்தார். என்.எஸ். சந்திரன், நெப்போலியன் ஆகியோர் அவ்விழாவில் உரையாற்றினர். எஸ்.வி. சேகர் விழாவைத் தொகுத்து வழங்கினார்.

## திரையுலக மறுபக்கம் 226 — தந்தையிடம் கற்ற வித்தையை மகனுடன் பகிர்ந்து கொள்கிறார் நடிகை

கரும்பாட்டிலிருந்து மயன்

ஒரு காலத்தில், தனது துடிப்பான நடிப்பால் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர். ஸ்டுடியோவில் முடங்கிக் கிடந்த தமிழ் திரையுலகை கிராமப் புறத்திற்கு அழைத்து சென்ற பெருமைக்குரிய அந்த பழம் பெரும் இயக்குநரின் கைவண்ணத்தால் புடம் போடப்பட்ட நடிகை அவர். அந்தக் காலகட்டத்தில் இப் பழம் பெரும் இயக்குநருக்கு தனது உடல் பொருள் ஆவி அத்தனையையும் இரவு பகல் பாராது அர்ப்பணித்து, தனது செஞ்சோற்றுக் கடனை தீர்த்துக் கொண்டார் நடிகை. பருவ வயதில் இருந்த நடிகையின் வாளிப்பான உடலமைப்பில் மயங்கிய இயக்குநரும் தன்னுடைய ஆசாபாசங்களின் வடிகாலாக நடிகையை பயன்படுத்தினார். அது நடந்தது அந்தக் காலம்.

ஆனால் இன்று அந்த இயக்குநர் நடிக்கின்ற வயதை தாண்டிவிட்டார். நடிகையும் நடுத்தர வயதை அடைந்து திரைப்படக் கலைஞர் ஒருவருடன் இணைந்து வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

தற்போது தமிழ் திரையுலகம் வாரிசுகளின் கைகளுக்கு மாறிவருவதால் தனது வாரிசையும் களத்தில் இறக்க தீர்மானித்த அந்த பெரும் இயக்குநர் தனது மகனுக்காக தானே படம் ஒன்றை தயாரித்து இயக்கினார். அதில் மேற் குறிப்பிட்ட நடிகைக்கும் குடும்பப் பாங்கான பாத்திரம் ஒன்றை வழங்கி நடிகையைக் கௌரவித்தார். அந்த படத்தின் மூலம் அறிமுகமாகிக் கொண்ட நடிகையும் இயக்குநரின் வாரிசு நடிகரும் ஒருவரோடு ஒருவர் மிகவும் அந்நியோன்யமாக பழகினார்கள். சகோதரங்களாக ஆரம்பித்த இருவரினதும் உறவும் சகோதர சகோதரிகளினிடையே இருக்க வேண்டிய எல்லையையும் மீறிச் செல்ல ஆரம்பித்தது.

இந்த நிலையில் அண்மையில் ஆங்கிலப் படம் ஒன்றை இயக்குவதற்காக வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருந்தார் நடிகை. வேறு ஒரு காரணத்திற்காக தானும் அதே நாட்டுக்கு சென்றிருந்தார் அந்த வாரிசு நடிகர். இருவரும் அங்கு ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொண்டார்கள். தனிமையில் தவிப்பிலும் கடும் குளிரிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டமையால் பிறவிப் பயனை அடைந்தது போன்று மகிழ்ச்சிக் கடலில் குதூகலித்தனர். தாம் சந்தித்துக் கொண்ட உணவு விடுதியில் வைத்தே ஆயிரம் கண்கள் நோட்டமிட்டுக் கொண்டிருக்க ஒருவரை ஒருவர் கட்டித் தழுவினர். வெளிநாட்டுக் கலாச்சாரத்தில் தம்மை யாரும் கணக்கெடுக்க மாட்டார்கள் என்ற துணிவிலோ என்னவோ, ஒருவர் கைக்குள் இன்னொருவராக சிறைப்பட்டுக் கொண்ட நிலையில் இருவரும் ஒருவர் மேனியை மற்றவராக மாறி மாறி மோப்பம் பிடித்ததனால் நடிகையை சிறைப்பிடித்திருந்த நடிகரின் கரங்கள் நடிகையின் பின்புற மேனியில் வீணை வாசித்தது. நடிகையின் நரம்புகளை முறுக்கேற்றியது.

இவ்வாறு, பட்டப்பகலில் நடுத் தெருவில் மன்மத லீலையை அரங்கேற்றிய நடிகரும் நடிகையும் சற்று நேரத்தில் ஒருவர் முகத்தை மற்றவர் தோள்களுக்குள் புதைத்த படி வாடகைக்கு அமர்த்தப்பட்ட காரில் ஏறிப் பறந்தனர். எங்கு பறந்தார்கள்...? எதற்காக...?

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த புலம் பெயர்ந்திருக்கும் நம்ம ஜொள்ளுப் பார்ட்டி தொலைபேசி மூலம் எமக்கு தெரியப்படுத்தி தமது ஆதங்கத்தை வெளியிட்டது. ஹும்... வேறு என்ன செய்ய முடியும்.


மயூரா


## 'குருவம்மா' ஆக தேவயாணி

நாராயணன், டாக்டர் ஆசகந்தன இணைந்து ஓர்க் மீடியா பட நிறுவனத்தின் சார்பாக தயாரிக்கும் 'குருவம்மா' என்ற படத்தினை, பிரபல நாவலாசிரியரான தாமரை செந்தூர் பாண்டி இயக்குகின்றார்.

லிவிங்ஸ்டன்-தேவயாணி நடிக்கும் இப்படத்தில் மணிவண்ணன், செந்தில், ஆர் சுந்தர் ராஜன், வடிவுக்கரசி உட்பட பல முக்கிய துணை நடிகர் நடிகைகள் நடிக்கின்றனர்.

'தாம்பத்தியம் புனிதமானது அதை களங்கப்படுத்துவது தவறு' என்ற கொள்கையை உடைய குருவம்மா, தனது வாழ்க்கையில் சந்தர்ப்ப சூழ்நிலையால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு எவ்வாறு முகங் கொடுக்கின்றார் என்பதே 'குருவம்மா'வின் கதை. குருவம்மாவாக நடிக்கின்றார் நடிகை தேவயாணி.

திருமதியான பின்பும் தொடர்ந்தும் பிஸியாகவே இருக்கும் நடிகை கொடுத்துவைத்தவர். ஆனால் கரம்பிடித்த நாயகனோ கையில் படம் எதும் இல்லாமல் திண்டாடுகிறார்.


கார்த்திக்-சுவர்ணா

ரங்கள் கேட்கிறாராம். இத...

தமிழில் மார்க்கெட் இ... நடிகை அங்கு பிஸியாக ந... படம் ஒன்றில் பப்லு; தகை... கோபத்தில் நகைச் சுவைக...

தயாரிப்பு: ப. ராஜு
அர்ஹாம் பாரூக்

## நீயுமா அம்மா!

அம்மா உன்மைந்தன் -இந்த
ஐரோப்பாவின் குளிரில் இருந்து
புளுங்குவதை அறிவாயா அம்மா.

அப்போது எனக்காக அழுது
எனக்காக சிரித்து எனக்காக
வாழ்ந்த நீயுமா அம்மா மாறிவிட்டாய்!

இப்போதெல்லாம் அழுவதென்னமோ-
நானும்
என் ராத்திரிகளின்
கனவுகளும் தான்.

இந்தப்பனி, உறையவைக்கும் குளிர்
இரவு பகல் இவை எதையும் சட்டை
செய்யாமல் உங்களுக்காகவே
வாழ்ந்து கொண்டிருக்கும் - என்னை
அம்மா உன்னால் கூடவா புரிந்து
கொள்ளமுடியவில்லை

நானும் உணர்ச்சிகளுள்ள ஒரு ஜீவன் தான்
நானும் சராசரி கலவை ஜீவராசிதான்
எனக்கும் விருப்பு, வெறுப்பு, வேதனை
எல்லாமே உண்டு .
என் இதயம் வெடித்து சிதறுவதை
உன்னால் கூடவா அம்மா
புரிந்து கொள்ள முடியவில்லை!

அம்மா! ஊரிலிருக்கும் போது
மரமேறாதே அங்கு போகாதே
குப்பையில் விளையாடாதே என
ஆயிரம் கட்டளைகள் இடுவாயே
இப்போது உன் மகனின் சுவாசிப்புகள்
கூட இந்தக் குப்பைகளோடுதான்
உங்களுக்காக இவை எல்லாவற்றையும்
சகிக்கப் பழகிவிட்டேனம்மா!
இதெல்லாம் தெரிந்தும் நீ
ஏனம்மா மாறிவிட்டாய்
வெறும் பணத்திற்காக மட்டும் தானா
இந்தப் பிள்ளை!
உனது 'மகனே' எனும் வார்த்தைக்காக
எத்தனை ராத்திரி ஏங்கியிருப்பேன்
தொலை பேசியை தூக்கினால் - எவ்வளவு
காசு அனுப்பி உள்ளாய் எனக் கேட்கும்
சகோதரங்கள்

ஆயினும் இவர்களின் வார்த்தைகள் -என்னை
ஒரு போதுமே வலி செய்ததில்லை- அம்மா
நீ என்னிடம் எப்படியிருக்கிறாய் மகன்
என்று கேட்டு எவ்வளவு நாள் தெரியுமா!
உங்களது நோக்கிலேயே குறியாய் இருக்கிறீர்களே
என் உலகமே நீ தானே உனக்காகத் தானே
நான் இவ்வளவு துடிப்பதும் - அது தான்
நீ மாறியது தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை
உன்னால் கூடவா அம்மா என் வேதனைகளை....!

ஏ. தர்ஷினி, மட்டக்களப்பு

## கொடூர காண்டம்

எப்படிச் சொல்வேன் வாப்பா!
என் அன்னையிடம்
இதயத்தைப் பிய்த்து
இறப்பில் சொருகிய
அந்தப் படலத்தை
எப்படிச் சொல்வேன் வாப்பா
என் அன்னையிடம்.

உங்கள் நெற்றிப் பொட்டில்
அவர்கள் தோட்டாக் களிட்ட
அந்தக் கொடூர காண்டத்தை
எப்படிச் சொல்வேன் வாப்பா
என் அன்னையிடம்.

மரணக் குகையுள்
உங்கள் உயிர்
திக்கித் திக்கித்
தவழ்ந்து போவதனை
அதன் வாசலிலிருந்து
என் கண்ணீர் பார்த்திருந்த
அந்தக் கருக்கல் பொழுதை
எப்படிச் சொல்வேன் வாப்பா.
என் அன்னையிடம்.

விடுதலை வேட்கைக்கு
ஒரு கோப்பைத் தண்ணீர்
கொடுத்த தற்காய்-அவர்கள்
உங்கள் குருதியை
கொதிக்க வைத்த கோலத்தை
எப்படிச் சொல்வேன் வாப்பா
என் அன்னையிடம்

"என் கணவர்
ஆயுத மேந்திய
பயங்கரவாதி" என்று
கை நாட்டிட்டு
உங்களுடம்பை
உம்மா கையேற்கப் போவதை
எப்படிச் சொல்வேன் வாப்பா
என் அன்னையிடம்

ஆனாலுமொன்று
என் பிரிய தந்தையே
அன்னையிடம் நெருங்கி
அவள் கைகளை
என் கண்களில்
ஒற்றிச் சொல்வேன்

"தாயே என் நெற்றியில்
உன் பூவிதழ்களால் முத்தமிட்டு
என்னை ஆற்றுப் படுத்தி
அனுப்பி வை" என்று

மருதமுனை ஹசன்.

## காலச் சுழற்சியில்

அப்பா!
இல்லாது போன நாட்களையும்
சொல்லாது போன சேதிகளையும்
எங்ஙனம் யானுரைப்பேன்?

தவத்தின் பால் அருச்சுனராய்
நீங்கள்
வனமேகிய மேடைகளின்
சதங்கைச் சத்தத்தின்
நெடுங்காலத் தெறிப்பு
பனி மூட்டமாய்....

எல்லாம் மறந்து போனார்கள்.
வட்டக் கலரியை மட்டுமல்ல
நீங்கள்
காத்து நின்ற
கம்யூனிசியத்தின் கனதியையும் தான்.

பயமப்பிப் போகும் பயணங்களில்
தடங்களழிந்த
தாண்டியடியைக் கடக்கும் போது
யான்
ஒளிந்து விளையாடிய பரணின்
ஒற்றைத் தூண் நிலையும்
புதிர் கொடுக்கும் புதரும்
மட்டுமே
நம் வயலை அடையாளமிட்டது.
துக்கத்தை விடுங்கள்,
அது இப்போது நம்முடையதல்ல

புதுநெல் மணம் வீசும்
புதிர் நாளில் -நீங்கள்
பாலூற்றும் புற்றோடு
துளிர்த்து நின்ற மரமும்
எப்போது
பட்டுப் போனதோ?
அங்கே தொங்காத
தூக்கணாங்குருவிக் கூட்டுக்காக
என்னால்
அழாதிருக்க முடியவில்லை.

நேற்றைய பத்திரிகையில்
என் பெயர் வந்தது
நிர்வாகச் சேவையில் சித்தியென்று
விம்மியழுதேன்
என் ஏறுமுகங்களில்
தட்டிக் கொடுக்கவும்
இறங்கு முகங்களில்
தடவிக் கொடுக்கவும்
இல்லாது போன
உங்களின் கரங்ளையெண்ணி!
ஒரு சின்ன ஆறுதலாய்
வார்த்தைகள் தடக்க தடக்க
வாழ்த்துக் கூறினான்
பெரியண்ணா.
ஓடிச் சென்று
உறங்க வேண்டும் போலிருந்தது,
அவன் மடியில்
உங்களை நினைந்தபடியே.

மனோகவி-திருக்கோவில்.

## பேச முடியாத ஒரு இடத்திலிருந்து...

துயரங்களை எழுத முடியாத படி
கரங்கள் துண்டிக்கப்பட்டு
துடிக்கின்றன காண்,
எங்கோ ஒரு இடத்திலிருந்த
சொல்ல முடியாத படி
வார்த்தைகளாகி வார்த்தைகளாகி
குருதி கசிகிறது காண்.
கனவுகளும் எரிந்து தீய்ந்து போன
ஒருபயங்கரத்துள்
வீசப்பட்டுக் கிடக்கிறதே என் இதயம்.

•••

என் நினைவுகள் எதுவும் நுழையாதபடி
எவ்வளவு கவனமாக
தாள்பாள் போட்டுக் கொள்கின்றனர்
எல்லோரும்;
முகவரியைத் தொலைத்து விட்ட
என் இருப்பிடத்தை நோக்கி
எப்படி செய்திகள் வரும்.

•••

இச்சிறு பூச்சியை நோக்கி
'இழந்து போகக் கடவது
இச்சிறு நிழலும்'
எனச் சாபமிட்டுச் சென்றனர்
சில தபசுகள்.

•••

விமோசனம் தேடி
பர்ணசாலை முழுவதும்
அலைந்தாயிற்று.

•••

வேடமிடும் வித்தைகள் தெரியாத
இப்பிரகிருதிக்கு
வெகுளிகளும் உயிர்க்கும்
இம்-மேதினி எதற்கு.
யாருக்காக இந்தச் சிலுவை
யாருக்காக இந்த முள்முடி.
உயிர்க்காற்று உள்ள வரை
இதயச் சமுத்திரத்திலிருந்து
பீறிட்டெழும்
மாபெரும் அலைகளாகி
கரைகளை முட்டி மோதிக் கொண்டே
இருப்பேன்;
யாரையும் நோகாதபடி
எனக்கான என் தனிமைக்குள்-

கல்லூரன்.



## தேன் கிண்ணம்

## விட்டில்

உன்னைப் போன்ற
போலிகளின்
காதல் மனுக்கள் இன்னும்
ஏராளம் வந்துள்ளன.

**

எப்படி ஏற்றுக் கொள்வது?
நீ கொடுத்த
சோகத்தின் இலட்சணங்கள்
இதயம் முழுவதும் - ரணங்களாக
வியாபித்திருக்கையில்.....

**

எந்தன் இதயத்தின் வாசல்கள்
திறந்து கொண்டதும்
உன்னால் தான் - பின்
அறைந்து மூடப்பட்டதும்
உன்னால் தான்.
என் இதயக் கதவுகளை
தட்டும் விரல்களுக்கு
வலிக்கலாம்! ஆனால்
இடிகளையும்' பிரளயங்களையும்
தாங்கிய இதயத்திற்கு
ஏது வலி.

**

உன் காதல் விளக்கில்
வீழ்ந்து கொஞ்சம்
இறந்தும் இறவாமலும்
வாழும் இந்த விட்டில்
இனி எந்த விளக்குளையும்
நாடாது!

ஆர். ஜோதி, கடற்கரை சேனை-01

## பேனா நண்பர்கள்



பெயர்:
எம்.ஏ.எம். நபீல்
வயது: 19
முகவரி: இல.35,
லவ்லேன், தே.வீ.தி.,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பத்திரிகை,
கிரிக்கெட்.



பெயர்:
ஆர். சந்திரகலா
வயது: 21
முகவரி: யுனிற்-8,
நலன்புரிநிலையம்,
பூந்தோட்டம்,
வவுனியா.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்:
பிரபாகரன்
வயது: --
முகவரி: இல.61/3சி,
கெய்ஸர் வீதி,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
பத்திரிகை,
கிரிக்கெட்.




## வாய்ப்பு வெற்றியின் பூரிப்பு!

வாழ்க்கையில் தோற்று விட்டோம் என்று கருதி மனம் உடைந்தால் நிச்சயமாகத் தோற்று விடுவோம். நம்மால் ஒரு காரியத்தையும் செய்ய முடியாது என்று நினைப்போமானாலும் அக்காரியத்தை ஒரு நாளும் செய்ய முடியாது. நிச்சயம் வெற்றி பெறவும் இயலாது.

வாழ்க்கை பலவானுக்கோ' வேகமாகச் செல்பவனுக்கோ சரியாக அமைவதில்லை. சீக்கிரமோ தாமதித்தோ எப்படியும் வெற்றி பெறக்கூடியவன் யாரெனில் என்னால் முடியும் என்று எண்ணுகிறவன்தான் என்கிறார் டேல் கார்னகி.

தோல்வி வருமே என்று பார்க்காமல் மேலும் முயன்றால் நாமும் மற்ற அறிஞர்களின் சிறப்பிடத்தைப் பெற முடியும். அந்த நல்ல வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள இயலும்.

நமக்குக் கிடைக்கும் வாய்ப்பைப் பற்றி பிடித்துக் கொள்ள வேண்டும். சிறிய வாய்ப்புக்கூட சிலரை அறிஞர்களாக்கி இருக்கிறது. வாய்ப்பைப் பற்றி பிடித்துக் கொண்டபடியினால் வறியவர்களும் செல்வச் சீமான்களாகி இருக்கிறார்கள்.

சிறிய தீப்பொறி ஓரிடத்தில் பற்றிக் கொள்வதின் மூலம் ஏற்படும் நஷ்டம் அதிகமாக இருக்கும். இதைப் போலவே வாய்ப்பும் தொடக்கத்தில் சிறிதாக இருந்தாலும் போகப் போக பெரியதாக அமைந்து சிறப்பான இடத்தைப் பெற்றுத் தரும்.

இளம் எழுத்தாளரான லஸ்டிக்கன்ஸ் தன்னுடைய முதல் கதை அச்சானவுடன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். எழுதுவதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டார்.

கதை வெளிவந்தவுடன் அதையே வாய்ப்பாகப் பயன்படுத்தினார். அதை அவர் அலட்சியப் படுத்தியிருந்தால் உன்னத எழுத்தாளராக ஆகியிருக்க முடியுமா?

வாய்ப்பு மட்டும் சரியாக அமைந்திருந்தால் நான் இன்று பெரிய மனிதனாக ஆகியிருப்பேன் என்று பலர் அங்கலாய்ப்பதைக் கேட்கிறோம். வாய்ப்பு கிடைக்கும் பொழுது நாம் தான் அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர வாய்ப்பு தானே வந்து அமையாது.

நாம் தான் அதனைச் சரியான படி அமைத்துக் கொள்ள வேண்டும். வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்த நாம்தான் அதற்குத்தக்கபடி மாற்றிக் கொள்ள வேண்டும். வாய்ப்பை விட்டுவிட்டால் அதற்காகக் கவலைப் பட்டுக் கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யமால் சோர்ந்து உட்கார்ந்து விடக்கூடாது.

ஒரு முறை கிடைக்கும் வாய்ப்பை விட்டுவிடக்கூடாது. வாய்ப்பு தான் ஒரு மனிதனை உயர்வடைய வைக்கும். என்கிறார் ஷேம்ஸ் ஆலன். வாய்ப்பு நம்மிடம் வர பல வழிகளில் முயன்று கொண்டிருக்கிறது.

வாய்ப்பு வலிய வந்தாலும் நாம் அதனை உணர்ந்து கொள்வதில்லை. வாய்ப்பு நம்மைத் தேடி வரும் பொழுது அதனைக் கை நழுவ விட்ட பின்பு அதனைத் தேடி அலைகிறோம்.

துணிந்து செயல்படாமல் விதியின் மேல் பழியைப் போட்டு என்ன பயன். விதிக்கும் அஞ்சமால் செயலாற்றுவதுதான் விதியை வெற்றி கொள்ளும் வழி. விதியின் மேல் நொந்து கொண்டு பொன்னான நேரத்தையும் காலத்தையும் வீணாக்கி விடுகிறோம்.

சரியான பாதையில் சென்றால் தான் செல்லவேண்டிய ஊருக்குப் போய்ச் சேர முடியும். இல்லையென்றால் வழி தப்பிப் போன ஆடு மாதிரி தான் அலைய வேண்டும்.

வெற்றியும் தோல்வியும் நம்மிடத்தில் தான் இருக்கிறது. ஒரு முறை சரியாக அமையாவிட்டால் மறுமுறை சரியாக அமைய முயற்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

சில நமிடத்தில் அமையும் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டால் வாழ்வில் இன்பமலர்கள் பூத்துக் குலுங்கும் இல்லையென்றால் துயரமே நம்மைச் சூழ்ந்துவிடும். பல ஆண்டுகளை விட நிமிடங்கள் தான் முக்கியம்.

## இந்தவாரம் உங்கள் பலன்

24.02.2002 தொடங்கி 02.03.2002வரை

### மேடம்;

(அச்சுவினி 'பரணி' கார்த்திகை முதற்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பணவரவு திருப்தி தரும் பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தஸ்தர்கள் எதையும் நிதானித்து செய்வது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செய்வாய்
அதிஷ்ட இல: 01

### இடபம்;

(கார்த்திகை பின்முக்கால் ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை) தொழில் விடயங்களில் அவதானம் தேவை. பணக்கஷ்டம் உண்டாகும். வீண் பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ளவும் உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி குழப்பம் தீரும். விவசாயிகள் வியாபரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இல: 06.

### மிதுனம்;

(மிருகசீரிடத்து பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) பெரியோர் உதவியும் காரியானுகூலமும் ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோத்தில் மாற்றம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள்' வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: புதன்
அதிஷ்ட இல: 05.

### கர்க்கடகம்;

(புனர்பூசத்து நாலங்கால் பூசம் ஆயிலியம்.) புதிய முயற்ச்சிகளில் பலிதம் ஏற்படும். பொருள் வரவு சிறந்து விளங்கும். பெரியோர் பகை கொள்வர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இல: .04.

### சிங்கம்;

(மகம் பூரம் உத்திரத்து முதற்கால்) தொழில் நிலை சிறப்பும், பொருளாதார முன்னேற்றமும் உண்டாகும். கருமங்களில் வீண் தடை வார இறுதியில் ஏற்படும். உத்தியோஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியுயர்ச்சியுண்டு.

அதிஷ்ட நாள்: செவ்வாய்
அதிஷ்ட இல: 03

### கன்னி;

(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்குறை நீங்கி மகிழ்ச்சியுண்டாகும். பொருளாதார நன்மையுண்டாகும். வீண்பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்படைவர்.

அதிஷ்ட நாள் புதன்.
அதிஷ்ட இல 04.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்;

(சித்திரையின் பின்னரை, சுவாதி விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகஸ்தர்கள் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்படைவர். விவசாயிகள் வியாபாரிகள் நன்மையடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி
அதிஷ்ட இல: 06

### விருட்சிகம்;

விசாகத்து நாலாங்கால் அனுஷம் கேட்டை. தொழில் உயர்ச்சி' பொருள்வரவு' காரியானுகூலம் உண்டு. உத்தியோத்தில் உள்ளோர் நன்மை அடைவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் குறைவாகப் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செய்வாய்.
அதிஷ்ட இல: 02.

## கிரக நிலை

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன் |
| மீனம் | - வெள்ளி |
| மேடம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி, இராகு |
| மிதுனம் | - வியாழன் |
| விருட்சிகம் | - கேது. |

சந்திரன் மிதுனம், கர்க்கடம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு;

(மூலம், பூராடம் உத்தராடத்து முதற்கால் தொழிலில் கஷ்டங்கள் தோன்றும். பணவரவு சுமாராக அமையும் வெளியிட பிரயாணங்களில் அவதானம் தேவை. உத்தியோகத்தில் உள்ளோர் சிரமங்களை எதிர் நோக்குவர். மாணவர்கள் கல்வியில் ஊக்க மெடுப்பது நல்லது. விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இல: 01.

### மகரம்;

(உத்தராடத்து பின் முக்கால் திருவோணம் அவிட்டத்து முன்னரை. முயற்சிகளில் வெற்றியும் பொருள்வரவும் உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டு விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இல: 03.

### கும்பம்;

(அவிட்டத்து பின்னரை' சதயம் பூரட்டாதி முன்முக்கால் ' பெரியோர் உதவி பணவரவு கௌரம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்பாடும் மாண வர்களுக்கு கல்வித் தடை நீங்கும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இல: 07.

### மீனம்;

(பூரட்டாதி நாலங்கால் உத்தரட்டாதி ரேவதி. எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும் பணவரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் மாற்றத்தை சிலர் எதிர் நோக்குவர். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டு . விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இல: 05.

# லேடீஸ் ஸ்பெஷல் — சத்யா

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உயரமாகத் தோன்ற வேண்டுமா?

'பேஷன்' வருடத்திற்கு வருடம் மாறி வருகிறது. 'மாடல்கள்' போல் அழகாக தோன்ற முடியவில்லை என்று வருந்துகிறீர்களா? கவலையை விடுங்கள்.

நீங்கள் புத்திசாலித்தனமாக உங்களுக்கு பொருத்தமான உடையை தேர்ந்தெடுப்பதன் மூலம் அழகாக தோன்றலாம். நீங்கள் குள்ளமாகவோ, ஒல்லியாகவோ, குண்டாகவோ, உயரமாகவோ இருக்கிறீர்களா? கவலை வேண்டாம். உங்கள் உருவத்திற்கு ஏற்ப உடைகளை தேர்ந்தெடுத்தால் அழகாக தோன்றலாம். குள்ளமான பெண்கள் உயரமாகத் தோன்ற என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

★ கணுக்காலுக்கு கீழே 2 இஞ்ச் இருக்கும்படியாக நீள ஆடையை அணிய வேண்டும்.

★ மெல்லிய துணியை தேர்ந்தெடுங்கள்.

★ உங்களது ஆடை அதிகம் 'பிரிண்ட்' செய்யப்படாமல் இருப்பது நலம்.

★ சேலையின் 'பார்டர்' மெல்லியதாக இருக்க வேண்டும்.

★ உங்களது ஆடை ஒரே நிறத்தில் இருக்கும்படியாக பார்த்துக் கொள்ளுங்கள்.

★ அடர்வண்ணத்தை பயன்படுத்தினால், உடலின் மேல்பாதி அல்லது கீழ்பாதியில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

★ கோடு போட்ட ஆடை என்றால் கோடுகள் மேலிருந்து கீழே வருவது போல் ஆடையை தைத்துக் கொள்ள வேண்டும்.

★ உயரமான ஹீல்ஸ்களை கொண்ட காலணிகளையே பயன்படுத்த வேண்டும்.

★ எடை குறைவான மெல்லிய தகடுபோன்ற நகைகளே உங்களுக்கு அழகு தரும்.

★ உங்கள் நிறத்திற்கு பொருத்தமான நிறமுள்ள ஆடையை தேர்ந்தெடுங்கள்.

**தவிர்க்க வேண்டியவை:**

நீங்கள் உயரமாகத் தோன்ற எண்ணினால் கீழே தரப்பட்டுள்ளவற்றை தவிர்க்க வேண்டும்.

★ அடர் வண்ணம்கொண்ட உடைகளை அணிவது.

★ இடமிருந்து வலமாக கோடு போட்ட ஆடை.

★ ஜீன்ஸ் ஆடைகள்.

★ சமதளமான காலணிகள்.

★ அகலமான பார்டர்கொண்ட ஆடைகள்.

இப்போது யார் உங்களை குள்ளம் என்று சொல்கிறார்கள் என்று பாருங்களேன். ◻

## அவசியமான மருத்துவக் குறிப்புகள்

➡ தினமும் தேன், எலுமிச்சை சாறு குடித்து வந்தால், எந்த நோயும் வராது.

➡ கறிவேப்பிலை, தேங்காய், மிளகாய் மூன்றையும் அரைத்து துவையலாக சாப்பிட்டால் நன்றாக பசி எடுக்கும்.

➡ பச்சை வெந்தயத்தை நல்ல கெட்டித் தயிரில் போட்டு மென்று சாப்பிடுவது சூடு, வயிற்றுவலி, வயிற்றுப் புண் இவற்றிற்கு மிக நல்ல மருந்தாகும்.

➡ பாகற்காயை இடித்து சாறு பிழிந்து சொறி, சிரங்கு மீது தடவி வந்தால் குணமாகும்.

➡ வெற்றிலைக் கொழுந்தில் சுண்ணாம்பு தடவி, வெண்ணெய் போல் அரைத்து, நகச்சுற்றிற்கு வைத்து கட்டினால் குணமாகும்.

➡ காது வலிக்கிறதா? குப்பை மேனி இலையை கசாயமாக்கி 5 சொட்டு விடுங்கள். வலி மறைந்து விடும்.

➡ காலில் உள்ள பித்த வெடிப்புகள் நீங்க, சாறுபிழிந்து எலுமிச்சைத் தோலைத் தேய்க்க வேண்டும்.

➡ தலை வலி தீர நெற்றியில் வெற்றிலை ஒன்றை இரு பக்கமும், கசக்கி ஒட்டி விட்டால் தலை வலி நீங்கும். ■


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் H

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02- 03-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



இந்த வாரம் யாருக்கு சல்வார்?
நுவரெலியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

செல்வி யசோதா,
204, மகிந்த மாவத்தை, நுவரெலிய.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


அனிதா தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

"ஸாரி.."

வாசலில் கார் வந்து நிற்க, வைரவன் இறங்கி வந்து "அனிதா... என்ன டியர்.. உனக்கு ஒண்ணுமில்லையே?"

இன்ஸ்பெக்டர், வைரவனுக்கு சலாம் போட்டுவிட்டு "நான் போகலாமா சார்?" என்றார்.

"தாங்க்யூ இன்ஸ்பெக்டர்... நான் கமிஷனருக்கு போன் பண்ணிச் சொல்லிடறேன்...உங்க பேர் என்ன?"

"புருஷோத்தம்" என்றார்.

"இந்தப் பேரைக் கட்டாயம் ஞாபகம் வெச்சுக்கறேன். ஏதாவது ட்ரான்ஸ்ஃபர், கீன்ஸ்பர் வேணும்னா என்னை வந்து பாருங்க... இது என் கார்டு" என்று தன் விசிட்டிங் கார்டைக் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர் "நைஸ் மீட்டிங் யூ மிஸ்டர் வைரவன். உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன்... வேற ஏதாவது சர்வீஸ்?"

"தேவையில்லை... நீங்க போகலாம்."

டபாய்ச்சு ஆட்டோல ஏறிக்கிட்டு மாயமா மறைஞ்சு போனதைக் கேட்டதும் எனக்கு பேஜாராயிருச்சு. உன் மனசில என்ன வெச்சுக்கிட்டு இருக்கே அனிதா... ஆர் யு நாட் ஹாப்பி?"

அனிதா மௌனமாகவே இருந்தாள். 'இன்னும் இரண்டு நாளைக்கு வைரவனுடன் பேச வேண்டாம்' என்று தோன்றியது.

"பாரு... உன் பதிலுக்காக வெய்ட் பண்ணிக்கிட்டு இருக்க எனக்கு நேரமில்லை. ஜப்பான்காரங்க காத்திருக்காங்க. ஆனா, இதை மட்டும் தெரிஞ்சிக்க...என்னை விட்டு எங்கயும் போயிர முடியாது. உலகத்தில எந்த மூலையிலும் எனக்கு ஆளுங்க இருக்காங்க. தொள சிங்கப் பெருமாள் கோயில் தெருவிலிருந்து டாஸ்மோனியா வரைக்கும்.. தெரியுமா?"

அனிதா ஜன்னல் கதவை இறக்கிக் கொண்டு வெளியே பார்த்தாள்.

"பேசமாட்டியா?"

"....."

"யார் அந்த விசு.. சொல்லு?"

மௌனம்.

"டிரைவர் வீட்டுக்குப் போயிரு" என்றான்.

அனிதா, சாந்தோம் வீட்டுக்கு வந்து நேராகத் தன் அறைக்குப் போகாமல், வேலைக்காரங்களுக்கு வரிசையாகக் கட்டப்பட்டிருந்த வீடுகளுக்குச் சென்றாள். வேணி, சின்னக் கண்ணாடியில் தலைவாரி பவுடர் போட்டுக்கொண்டு இருந்தாள்.

"அம்மா நீங்களா..." என்று திடுக்கிட்டாள்.

"வேணி... உன் பாட புஸ்தகம் கேட்டேனே?"- அனிதா கேட்டாள்.

வேணியுடன் துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந்து அவளுக்குத் தமிழ் பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

"வியங்கோள் வினை முற்று... அப்படின்னா என்ன?"

"இதெல்லாம் எங்களுக்கு எதுக்கும்மா?" என்று வேணி கேட்டாள். பாடப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு "அம்மா... நீங்க சினிமா பாக்கறதுண்டா?" என்றாள்.

"எப்பவாவது... எங்கப்பா அழைச்சுக்கிட்டு போனா..."




அவர்போனதும் முகம் இறுகி, "சீதாராமன்... என்ன இது... எனக்கு ஒரு போன் போட்டிருக்கக் கூடாதா?" எல்லாருமா சேர்ந்து சதி பண்றீங்க. நான் இவளை எங்கெல்லாம் தேடறது... இந்த மாதிரி சந்துல... இந்த மாதிரி வீட்டில..." சுற்று முற்றும் பார்த்தான். அப்போதுதான் விஸ்வநாதனைக் கவனித்தான்.

விஸ்வநாதன், "ஹலோ... என்பேர் விசு. சீதாவுடைய ஃப்ரெண்டு" என்று அவன் நீட்டிய கையைக் குலுக்காமல், "வா அனிதா... போகலாம்" என்றான் வைரவன்.

"நான் அனிதாவைக் கேட்டேன் மாப்பிள்ளை... போன் பண்லாமானுட்டு! அவதான் வேண்டாம்னா!" சீதா சொன்னான்.

"இனிமே இங்க வந்தாள்னா உடனே தகவல் சொல்லிருங்க. இந்த மாதிரி லொள்ளு பண்ணாதீங்க, என்ன?" என்றான் வைரவன்.

"அனிதா... வா... அனிதா.. கம்.. நான் மீட்டிங்கை விட்டுட்டு வந்திருக்கேன்" என்றான்.

அனிதா அவர்கள் இருவரையும் பார்த்தபோது, மல்லிகாவின் கண்களில் அனுதாபம் இருந்தது.

விஸ்வநாதன், "நைஸ் மீட்டிங் யு அனிதா.. வர வெள்ளிக்கிழமை மியூஸிக் அகாடமியில எங்க க்ரூப்போட இசை நிகழ்ச்சி ஒண்ணு இருக்கு. இன்விடேஷன் கொண்டு தரேன்" என்றான்.

"வர வெள்ளிக்கிழமை நாங்க ஜப்பான்ல இருப்போம்" என்றான் வைரவன்.

"அனிதா 'ஆமாம்' என்பதுபோல் தலையை ஆட்டினாள். அவளுக்கு நெஞ்சை அடைத்தது. துக்கமாக இருந்தது. மூன்று மணி நேரம் கூடத் தனக்குச் சுதந்திரம் இல்லையென்பது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

கார் கதவின் கறுப்புக் கண்ணாடியை உயர்த்தி, சென்னைக் காட்சிகளை மறைத்து, "சேச்சே... இங்கல்லாம் வந்துக்கிட்டு... என்ன ஆச்சு உனக்கு?" வைரவன் கேட்டான்.

அனிதா மௌனமாக இருந்தாள்.

"யார் அந்த விசு?"

"..."

"பேசமாட்டியா? கோவமா?"

"..."

"எதுக்காக கோவம்னு சொல்லலாமா?"

மௌனம்.

"பாரு அனிதா... நீ கார்லருந்து



"சொல்லாட்டி என்ன... நான் கண்டு பிடிச்சுக்கறேன்"- ஹாஸ்யமில்லாமல் சிரித்தான். "என்ன ஒரு சிறுபிள்ளைத் தனமா ஆட்டோவில் எல்லாம் ஏறிட்டு... வீட்டில பதினெட்டு கார் இருக்குது!" என்றான்.

"என்ன கோவம்? சிதாரா கழுதை ஏதாவது சொல்லிச்சா?"- வைரவன் கேட்க,

"போட்டோ காமிச்சா" என்றாள் அனிதா முதன் முறையாக.

நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"ஓ... அதுவா விசயம்..." என்று அனிதாவின் கையைப் பற்றி, "நான் வந்து அப்புறம் எல்லாத்தையும் விவரமா சொல்றேன். இப்ப வீட்டுக்குப் போ... என்ன... வேணும்னா உங்க அப்பாம்மா கூட இருந்துட்டு வரியா... காஞ்சிபுரத்திலிருந்து வந்திருப்பாங்க."

ஆபீஸ் வந்துவிட, "என்னவோ செய்யி.. ஆனா, இந்தப் பைத்தியக்கார வேலை செய்யாதே. மெட்ராஸ் போலீஸே நம்ம கைல இருக்குது... தெரியுமில்லை..." என்று சொல்லிவிட்டு இறங்கி கார் கதவைச் சாத்தும்போது, முதன்முதலாக அவனால் சமாளிக்க முடியாத ஒரு பிரச்சனையைச் சந்தித்த குழப்பம் வைரவன் முகத்தில் இருந்தது.

"அபிசூட காஸெட்ல படம் எல்லாம் போடுவாங்கம்மா! சில படம் பார்த்திருக்கேன். முத்தம் கொடுக்கறதும், ரவிக்கையை உருவறதும்... அது என்னம்மா- ஆங்கிலத்தில அப்படிப் படம் எடுக்கறாங்க... சென்ஸார் கெடையாதா? ம்... என்ன சொல்லுங்க... 'திருவெளையாடல்' மாதிரி டாப்பான படம் கெடையாதும்மா. எட்டு வாட்டி பார்த்திருக்கேன், நாகேஸ் காமெடிக்கே..."

கொஞ்ச நேரம் பொறுத்து, "அம்மா நீங்க வீட்டுக்குப் போகலையா?"


"எந்த வீடு?"

"உங்களைத் தேடுவாங்கம்மா."

முழுவதும் இருட்டும்வரை அங்கேதான் அனிதா உட்கார்ந்திருந்தாள். பிறகு வேணி சமைக்க வேண்டும் என்பதால், அனிதா அந்த இடத்தை விட்டு நகர்ந்து, பெரிய வீட்டுக்குள் நுழைந்து மெள்ள தன் அறைக்கு வந்தாள்.

அறையில் இறைந்திருந்த புடைவைகள் எல்லாம் ஒழுங்காக மடித்து வைக்கப்பட்டு இஸ்திரி போடப்பட்டு இருந்தன. மேஜை மேல் மாலைப் பத்திரிகைகள் இருந்தன. 'வைரவனின் ஜப்பானிய விஜயம்' என்று கொட்டை எழுத்தில் ஒலித்தது'. 'மாலைக்குரல்' வைரவனின் பத்திரிகை! அதை எடுத்துப் பார்த்தாள் அனிதா. அதில் 'அனிதா ஸின்தெடிக்ஸ் என்னும் முழுவதும் ஏற்றுமதி நிறுவனத்தில் ஜப்பானிய நிறுவனம் முந்நூறு கோடி முதலீடு செய்ய இருக்கிறது என்றிருந்தது.

[அனிதா வருவாள்...]



## பாப்பா முரசு சிறுகதை

# நினைத்ததை முடிப்பவன் நான் நான்!

உணவைத் தேடியபடி ஒரு நரி காட்டில் அலைந்து திரிந்து எதுவும் கிடைக்காததால், ஆற்றங்கரைக்கு வந்தது.

ஆறு காட்டின் நடுவே சலசலத்து ஓடியது. பெரிய ஆறு அது. அதில் சுமாரான அளவில் நீர் ஓடிக் கொண்டிருந்தது.

நரி, ஏதாவது நீர்க் கோழி அகப்படுமா என்று ஆற்றைக் கண்களால் துளாவியது.

எதுவும் அகப்படவிலலை.

ஆனால் ஆற்றின் நடுவில் ஒரே ஒரு நாரை மட்டும் நின்று மீன்களைத் தேடிக் கொண்டிருப்பது அதன் பார்வையில் பட்டது.

சட்டென்று தன்னை கரையோரமிருந்த புதரில் மறைத்துக் கொண்டது.

'ஆஹா! கொழுத்த நாரை! புசிப்பதற்கு மிகவும் சுவையாக இருக்கும். ஆனால் ஆற்றின் நடுவில் நிற்கிறதே. எப்படிப் பிடிப்பது? சிறு சலனம் கேட்டாலும் பறந்து விடுமே. என்ன செய்வது?' என்று நினைத்து அவசரமாக யோசிக்கத் தொடங்கியது.

அது பதுங்கியிருந்தது கோரைப் புற்கள் அதிகம் வளர்ந்திருந்த புதர். கோரைப் புற்கள் மிகவும் நீளமாகவும், அடர்த்தியாகவும் வளர்ந்திருந்தன.

அந்தக் கோரைப் புற்களைப் பார்த்ததும் 'பளிச்'சென்று நரிக்கு ஒரு யோசனை தோன்றியது.

அது மேலும் மெல்லப் பதுங்கி கோரைப் புற்களை சத்தமில்லாமல் கடித்தது. நிறையக் கோரைப் புற்களைக் கடித்து சேகரித்து அவற்றை அகலமான ஒரு கற்றையாக்கியது. பிறகு அவற்றை ஒரு வலுவான கோரைப் புல்லினால் கட்டியது.

'மெத்'தென்று உருவாக்கிய அந்தக் கோரைப்புல் கற்றையை சிறிது கூட சத்தம் ஏற படாமல் நதி நீரில் மிதக்க விட்டது.

அந்தக் கோரைப்புல் கற்றை மெல்ல மிதந்து நாரை நின்று கொண்டிருந்த பக்கம் சென்றது. அது நாரையை நெருங்கி அதன் காலை உரச, சட்டென்று நாரை துள்ளி விலகியது. திகிலோடு அந்தக் கோரைக் கற்றையைப் பார்த்து. அது வெறும் கோரைக் கற்றைதான் என்று தெரிந்த பிறகு தான் நிம்மதி மூச்சு விட்டது. பிறகு மீனைத் தேடத் தொடங்கியது.

இதற்குள்-

புதரில் பதுங்கியிருந்த நரி, இரண்டாவது கோரைப்புல் கற்றையை தயார் செய்திருந்தது. உடனே அதை முன்பு போல் நதியில் ஓசையின்றி மிதக்க விட்டது.

இதனையும் நாரை அலற்சியப் படுத்திவிட்டு தனது வேலையைக் கவனித்தது.

அடுத்து நரி மூன்றாவது கோரைப்புல் கற்றையை நீரில் விட்டது.

இந்தமுறை அந்தக் கோரைக் கற்றை நாரையை உரசியும், நாரை பயப்படாமல், மீனைத் தேடுவதிலேயே கவனமாக இருந்தது.

இந்த சமயத்திற்காகவே காத்திருந்த நரி, தயாராய் செய்து வைத்திருந்த நான்காவது கற்றையை நீரில் வைத்து, அதன் மேல் ஏறி அமர்ந்த கொண்டது. நிறைய தண்டு கோரைப் புற்களை தன் மேல் போட்டு சற்று மறைத்துக் கொண்டது.

கோரைக் கற்றை நீரில் மிதந்து சென்றது. அது நாரையின் காலை உரசியபோது, நாரை பயப்படவே இல்லை.

ஆனாலும் அது "இன்று இந்தக் கோரைப் புற்களுக்கு என்னாகி விட்டது. கற்றைக் கற்றைக் கற்றையாக நீரில் மிதந்து செல்கிறது. காற்றடித்து முறிந்து முறிந்து நீரில் விழுகின்றனவோ? என்னவோ போகட்டும். ஆ அதோ ஒரு கொழுத்த மீன். ஒரு பிடி பிடிக்கிறேன்" என்று நினைத்த நாரை அந்தக் கொழுத்த மீனைப் பிடித்தது.

அதே சமயம்


கோரைக் கற்றையில் பதுங்கியிருந்த நரி, குபீரென்று பாய்ந்து நாரையின் கழுத்தைக் கவ்விப் பிடித்தது.

பாவம்! நாரையால் நரியின் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

அது விரைவில் நரியின் சுவையான உணவாகியது.


அன்புக் குழந்தைகளே! நாரையைப் பிடிக்க, நரி எவ்வளவு நேரம் பொறுமையுடன் காத்திருந்து, செயல்பட்டு, இறுதியில் வெற்றி பெற்றது பார்த்தீர்களா? சாதனையாளர்களின் செயல்களும் இது போன்றதுதான். நீங்களும் சாதனைகளை நிகழ்த்த வேண்டுமானால், நரியைப் போல் பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்!





எங்கே பறவை வெளியே செல்ல வழி காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.03.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **435**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 433

**பரிசுக்குரியவர்:**

செல்வன் மகேஸ்வரன் கனுஷாந், ஆஸ்பத்திரி வெளி வீதி, குடியிருப்பு, வவுனியா.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பாதிமா சன்ஹா, ஆஸ்பத்திரி வீதி, மாவனல்லை. | தெ.தட்ஷாயினி, பதுக்குளம்மகா வி., சாஸ்திரி குழங்குளம், வவுனியா. |
| ஆர். யாசீர், அல்-மின்ஹாஜ் தேசிய கல்லூரி, ஹபுகஸ்தலாவ. | செல்வன் க.செந்தூரன், அரூத்மாவத்தை வீதி, கொழும்பு-15. |
| ரி.எம். நிப்ராஸ், மடவள வீதி, கட்டுகஸ்தோட்டை. | பாதிமா நிஷ்மா நஜீம், இரத்தினபுர வீதி, பலாங்கொடை. |
| எம்.ஐ. நிப்கா, அல்-அக்ஷா முஸ்லிம் தேசிய கல்லூரி, கல்பிட்டி. | பாத்திமா மின்ஹாரா முஸாரிக், புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கண்டி. |
| ரம்யா தயாபரன், வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. | குமாரகுரு கௌதமி, டைக் வீதி, திருகோணமலை. |

## செய்து பாருங்கள்!

தேவையான பொருட்கள்:

அரை மீட்டர் தடித்த கம்பளித் துணி. கார்ட்போர்ட் அட்டை



ஒன்று, பசை, பென்சில், கத்திரிக் கோல், நான்கு மீட்டர் ரிப்பன்.

செய்முறை:

1. கார்ட் போர்ட்டில் உங்கள் கால்களை வைத்து வரைந்து அப்படியே வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.
2. வெட்டி எடுத்த கார்ட் போர்டடை கம்பளித் துணியில் வைத்து வரைந்து அதையும் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.
3. வெட்டிய கம்பளித் துணியை கார்ட் போர்டின் மேல் வைத்து ஒட்டும்போதே அதனுள் இந்த ரிப்பனை நுழைத்து ஒட்டிவிடுங்கள்.
4. இப்போது செருப்பு போடத் தேவை ஏற்படும்போது இப்படி முடிச்சியிட்டு போட்டுக் கொண்டு ஸ்டைலாக நடவுங்கள்!

## விடுகதையும் விடைகளும்

1. நெருப்பில் பிறந்தவனை பார்க்க முடியும். ஆனால் அவன் போகிற இடத்தைப் பார்க்க முடியாது அவன் யார்?
2. பவளக் கோட்டைக்கு பஞ்சு மிட்டாய் வாசல் அது என்ன?
3. அன்ன நடையில் அழகுப் பயணம் அது என்ன?
4. பற்கள் நூற்றுக்கு மேல் ஒன்று கூட கடிக்க உதவாது அது என்ன?
5. தண்ணீரில் இருந்தும் நனையாதவன் அவன் யார்?
6. ஒலி கொடுத்தால் வழி கிடைக்கும், ஒலி கொடுத்தால் உரையாடுவான் இவை என்ன?
7. பள்ளத்தில் பாய்ந்தவன் மேட்டில் திணறுகிறான் அவன் யார்?
8. ஓடுவான் பாடுவான் ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார்?
9. ஒருவர் எழுதியதை இன்னொருவர் படித்தார். அது என்ன?
10. மழைக்கு குடை பிடித்தார் அவர் யார்?

**விடைகள்**

1. புகை 2. பற்கள், உதடு
3. ஆமை 4. சீப்பு
5. தாமரை இலை
6. கார் ஹார்ன்-போன்
7. தண்ணீர் 8. கதவு
9. தபால் 10. காளான்.

**சத்யா**

"நட்பு புனிதமானது" என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் போலியானது என்பதை விதி எனக்கு வெகு சீக்கிரம் உணர்த்தியது. என்னுடைய ஒரே பொழுது போக்கு கவிதை எழுவது தான் அதுவே எனக்கு கிடைக்கும் மன ஆறுதல் கூட. பேனாவை தொட்டு எழுத ஆரம்பித்து விட்டால் குடும்பம், உறவுகள், உலகம் எல்லாம் மறந்து விடும் எழுதியதை திரும்பிப் படிக்கும் போது எனக்கே பிடிக்காத வற்றைத் தவிர ஏனையவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பி அவர்கள் வடிகட்டி பிரசுரமான கவிதைகள் ஏராளம் அப்படிப் பிரசுரமான சமயம் தான் பிரபா எனக்கு பாராட்டுக் கடிதம் அனுப்பி இருந்தார்.

பிரபா பிரபல சிறுகதை எழுத்தாளர். அவரின் பாராட்டு எனக்கு குருநாதர் வைரமுத்துவின் வாயால் வாழ்த்து பெற்றது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. மரியாதை நிமித்தம் அவருக்கு பதில் கடிதம் போட்டேன். அதற்கு பிறகு அவர் என் கவிதைகளையும் நான் அவர் கதைகளையும் விமர்சனம் செய்வதுண்டு. என் குடும்பத்தைப் பற்றி விபரமாக எழுதியிருந்தேன். அதே போல என் காதலைப்பற்றியும் எழுதியிருந்தேன். இரண்டு வருடங்களாய் ஒருத்தியை உயிருக்கு உயிராக நேசிப்பதையும் என் காதலை அவள் ஏற்றுக் கொள்ளாமல் என்னை உதாசீனப்படுத்துவதையும் அவ்வப்போது பிரபாவிற்குப் போடும் கடிதங்களில் எழுதி வந்தேன்.

அதே போல் பிரபாவின் கடிதங்களும் என் மனதிற்கு ஆறுதல் அளிக்கும் வகையில் இருக்கும். நாங்கள் ஒருவரையொருவர் நேரில் சந்திக்காவிட்டாலும் கடிதங்கள் உரையாடுவது போலத்தான் இருக்கும். அத்தனை விரிவாக உரிமையும் அன்பும் கலந்தது தான் எம் நட்பு.

அப்படி இருக்கும் போது என் கனவுகளையும் கற்பனைகளையும் ஒடித்துவிட்டு வேறு ஒருவருடன் ஓடிப்போனாள் நான் உயிருக்கும் மேலாக நேசித்த என் அன்புக் காதலி.

உடனே பிரபாவிற்கு கடிதம் போட்டேன். நிச்சயமாக நேரில் வந்து தோள் மீது கைவைத்து ஆறுதல் கூறுவார் என எதிர்பார்த்தேன். கடிதம் கூடப் போடவில்லை. அதன் பிறகு நிதானமாக ஒரு மடல் வந்தது.

"உங்கள் காதலி உங்களை விட்டுப் போனதற்காக வருத்தப்பட தேவையில்லை. இந்த இழப்பு ஒரு நஷ்டமே இல்லை. இறைவன் உங்களுக்கு அருளிய வரம் அல்லது பாக்கியம் என்று தான் சொல்ல வேண்டும்." இது உபதேசமா அல்லது ஆறுதல் கடிதமா? என்பதில் எனக்குக் குழப்பம்.

உயிருக்கு உயிராக நேசித்தவள் என்னை உதாசீனப்படுத்திவிட்டுப் போனது எவ்வளவு பெரிய வேதனை. காதலியைத் தொலைத்துத் தவிக்கும் காதலனுக்கு இறைவன் கொடுத்த வரமா இது. அதற்குப் பிறகு கடிதம் போடுவதை நிறுத்திக் கொண்டேன். இரண்டு மூன்று கடிதங்கள் வந்தன. ஆனால் பதில் போடவில்லை. அவரின் கதைகள் பல பிரசுரமாயின படிக்காமல் பக்கங்களைப் புரட்டிப் போனேன். என் கவிதைகள் பலவும் பிரசுரமாயின. அதிலெல்லாம் என் காதல் துயரின் வெளிப்பாடுகள் நிறையவே இருந்தன. வழக்கம் போல குறைகளை சுட்டிக்காட்டி கடிதம் எழுதியிருந்தார். முன்பு நியாயமாகப் பட்டது. இப்பொழுது கசந்தது. நான் பேசாமல் இருந்த போது எத்தனை நாட்கள் அவர் எழுதுவார் கடிதத் தொடர்பை முறித்துக் கொண்டார். திடீரென்று தொடங்கியது போல நின்று விட்டது எம் நட்பு.

அப்போது எதிர்பாராமல் என் கவிதைக்கு இலக்கிய அரங்கு பரிசு அறிவித்தது. அதற்கு இளம் எழுத்தாளர் பிரபா தலைமை தாங்குவார் என அறிவித்திருந்தார்கள் போக மனமில்லையென்றாலும் என்னை மதித்து கௌரவிப்பவர்களின் நேய விருப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டியது என் கடமை அல்லவா? நான் போனேன்.

பிரபா தலைமை தாங்கி அற்புதமாகப் பேசினார். என் கவிதைகளை இப்படிக் கூட பார்க்க முடியுமா என நானே வியக்கும் வகையில் அபாரமாகப் பேசினார்.

விழா முடிந்தது. இன்று என்னுடன் தங்கி விட்டுதான் போக வேண்டும் என்றார் பிரபா. இது அன்புக் கட்டளை என்றதும் எவ்வித சலனமும் காட்டாமல் காரில் அமர்ந்து கொண்டேன். வீடும் வந்தது. ஹாலில் என்னை உட்கார வைத்து விட்டு உள்ளே போனார். பத்து நிமிடத்தில் என்னைச் சாப்பிட அழைத்தார். நானும் அவரும்தான், மாரியாதை நிமித்தம் "மனைவி ஊரில் இல்லையா" எனக் கேட்டேன். அவர் அதைக் காதில் வாங்கிக் கொண்டாதாக இல்லை.

சாப்பாட்டை முடித்துக் கொண்ட என்னை ஓய்வெடுக்க மாடிக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு அறையில் கைகள் கட்டப்பட்டு பெண்ணொருத்தி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். "என்ன பார்க்கிறீங்க? இவதான் என் மனைவி காவ்யா. துடிப்பான இளமைப் பருவம் நான் இவள் மீது கொண்டிருந்த தீவிர காதல். என்னோட காதல் ஜெயிக்கணும் என்ற வெறி எல்லாம் என் வாழ்க்கையை சூன்யமாக்கி விட்டது. வேறு ஒருவனை நேசிக்கிறாள் என்று தெரிந்தும் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். விளைவு இன்று இவளொரு மன நோயாளி இவள் குணமடைவாள் என்று டாக்டர் நம்பிக்கை தர வில்லை.

ஆண்டவனை அதைக் கொடு இதைத் தா என்று நான் வேண்டுவதில்லை. கேட்பது ஒன்று தான் எனக்கு முன் இவளை எடுத்துக் கொள் என்பது தான். அந்த வகையில் நீங்கள் ரொம்ப பாக்கியம் பண்ணி இருக்கீங்க இல்லைனா என்னைப் போல....." என்று வார்த்தைகள் வராமல் அழுதார் பிரபா.

எனக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. கண்கள் நிரம்பி வழிகின்றது. அது பிரபாவின் பாதங்களையும் நனைக்கிறது. ■



எஸ். மனோகரன் ஸ்ரீபாதவியற் கல்லூரி

# நமக்கே நமக்காய்.....

ஆர்ப்பரிக்கும் அலை நுரையில் கால் புதைய அவர்கள் நடந்தார்கள். மடிப்பு மடிப்பாய் அலைகளின் வீச்சோடு அவள் கூந்தலின் நளினத்தை ஒப்பிட்டுப்பார்த்தான். ஓங்கி ஓங்கியடிக்கும் கடலின் இரைச்சலை விட அவன் மனதினுள் இரைச்சல். உருத்தெரியாமல் ஏராளமான சிள் வண்டுகள் ஒலியெழுப்புவதாய்.

"கல்யாணி."

"என்ன."

"ஏதாவது பேசேன்."

"எதைப்பேச."

"இந்தக் கடலைப்பற்றி, அதன் சுறுசுறுப்பைப் பற்றி, ஒரு சிறு அழுக்கைக்கூட அடித்துத் துரத்துகிற அதன் கொள்கையின் உறுதி பற்றி... ஏன் இன்றைய நாளைப் பற்றி. நாளின் விசேடம் பற்றி.... ஏதாவது பேசேன்..."

"எனக்கு இன்றைய நாளும் நேற்றைப் போல் தான் இருக்கின்றது. விசேடமாய் எதுவும் தோன்றவில்லை."

"காதலுக்கு நீ கொடுக்கும் முக்கியம் அவ்வளவுதானா?"

"எவ்வளவு."

"அதுதான் இன்றைய நாளையும் வழமைபோல் அலட்சியமாய்ப் பார்க்கும் அளவு."

"நான் உங்களை ஒன்று கேட்கலாமா?"

"கேளேன்."

"நீங்கள் என்னை நேசிக்கின்றீர்களா? காதலை நேசிக்கின்றீர்களா?"

"இது என்ன மடத்தனமான கேள்வி? உன்னை நேசிப்பதன் மூலம் காதலை கௌரவிக்கின்றேன்."

"அப்போ வேறு யாரையும் நேசித்திருந்தால்...."

"இந்த "இல்" விகுதி எல்லாம் வேண்டாமே. நடந்தது என்னவோ நடப்பது என்னவோ நடக்கப்போவது என்னவோ. அதை மட்டுமே பேசுவோமே."



-சுபா-கொட்டாஞ்சேனை

"தத்துவத்தை விட்டுவிட்டு கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்."

"சரி சொல்கின்றேன். வேறு யாரையும் நேசித்திருந்தால் கூட அதன்மூலம் நான் காதலைக் கௌரவப்படுத்தித்தான் இருப்பேன்."

"ஆக உங்களின் ஆழ் மனதில் காதலின் மீதான பற்றுதலே அதிகம். காதலி மீதானதல்ல அப்படித் தானே?"

"இதென்ன விதண்டாவாதம். காதல் வேறு காதலி வேறா?"

"நிச்சயமாக! காதல் மீது நீங்கள் கொண்ட பற்றினால் தான் இன்றைய நாள் உங்களுக்கு விசேடமாகத் தெரிகின்றது. காதலியின் முக்கியம் அதிகம் என்றால் எல்லா நாளும் போல்தான் இன்றும் இருந்திருக்கும்..."

"புரியவில்லை கல்யாணி."

"உணர்வுள் உறைந்து மின் வெட்டாய் ஏதோ ஒரு கணப்பொழுதில் உணரப்படவேண்டிய விடயங்களை வெண்கட்டி எடுத்து விளங்கப்படுத்த முடியாது. சுருக்கமாய் கேட்கிறேன். இன்றைய பொழுது கழிந்தவுடன் நாளை நீங்கள் என்னை நேசிக்கப் போவது இல்லையா? நேற்று என்னோடு கைகோர்த்து நடந்தபோது நீங்கள் நெகிழவில்லையா?"

"அதுவேறு. இதுவேறு. நமது பிறந்த தினங்களை நாம் உணர்ச்சிப் பெருக்குடன் தானே கொண்டாடி முடித்தோம். அப்போதெல்லாம் இந்தத் தத்துவ விசாரம் கிளம்ப வில்லையே."

"பிறந்ததினம் நமக்கே நமக்கு உரித்தான பிரத்யேக நாட்கள். என்னைப் பூமிக்குத் தந்ததற்காக நீங்களும் உங்களைப் பூமிக்குத் தந்ததற்காக நானும் நன்றியோடு இறைவனைப் பார்க்கும் நாட்கள். ஆனால், இது அப்படி இல்லை... யாரோ நிர்ணயித்த திகதியில் மட்டும் காதலின் உணர்வுகளை மொத்தமாக கொட்டிவிடலாமா? இந்தத் திகதியில் காதலி, இந்தத் திகதியில் பரிசுகொடு, இப்படி... உணர்வுகளை திகதிகளுக்குள் திணித்துக்கொள்வது ஒரு போலியாய்த் தெரியவில்லையா?"

"அதை ஏன் நீ போலியாகப் பார்க்கிறாய்? சொல்ல முடியாது விழுங்கிக்கொண்டு, குரல்வளை வரை வந்து அடைத்து நிற்கும் மௌன விஷயங்களை மடை திறந்து கொட்டிட அனுமதிக்கப்பட்ட ஒரு நாளாகக் கருதிடலாமே. எத்தனை நெஞ்சங்கள் மடித்து வைத்த மனசைத் திறந்து காட்ட இந்த நாளுக்காய் காத்திருக்கின்றார்கள் தெரியுமா?"

"ஏன் இந்த நாளில் மட்டும்?"

"இது. அதற்கான நாள்தானே. பதில் சந்தோசப்படும்படியாய் இல்லாவிட்டாலும் கேட்கப்பட்டதற்கான எதிர்ப்பு கோரமானதாய் இருக்காது."

"மொத்தத்தில் கோழைகளுக்கு உதவும் நாள் என்று சொல்லுங்கள். பாவம் இன்றைக்கும் குரல்வளைக் கதவு திறக்கவில்லையென்றால் இன்னும் ஒருவருடம் காத்திருக்க வேண்டும்."

அதன்பின் நீண்ட நேரம் அவன் எதுவுமே பேசவில்லை. இறுக்கமாய் இருந்தான். புரியாத சஞ்சலத்தின் வெளிப்பாடாய் முகத்தில் தசைகள் சுருங்கின. அமர்ந்தார்கள். அவனின் தலையை இழுத்து மடியில் கிடத்தினாள். முக்கைப் பிடித்திழுத்தாள். கன்னங்களில் கிள்ளினாள்.

"போலிகள் வேண்டாம் சிவா. நமக்கு நாமே வகுத்துக்கொண்ட பாதையில் போவோம். அலையின் போக்கில் அடிபட்டுச் செல்லும் மரக்கட்டையல்ல நாம். உணர்வும் உயிரும் நிறைந்த கருத்துள்ள மனித பிண்டங்கள். நல்லது கெட்டதுக் கப்பால் நம்மை நாமே தீர்மானிப்போம். நம்மை நாமே ஆகர்ஷிப்போம். நம்மை நாமே எடுத்துக் கொள்வோம் நமக்காகவே" சொல்லிக் கொண்டே மிகமிக ஆவேசமாய் அவன் இதழ்களைக் கௌவினாள். அவன் உடம்பு என்றுமில்லாதவாறு தகித்தது. பரவத்தொடங்கிய உணர்வுகளின் பரிசாய்.

"அம்மாடி உன் மௌனம் பயங்கரமானது. உன் பேச்சும் பயங்கரமானது. அதைவிட, அதைவிட, உன்... உன்... மகா பயங்கரமானது" என்று அவள் காதில் கிசுகிசுத்தான்.

பேசி என்னைக் கலைத்து விடாதே என்பதுபோல் அவனை இன்னும் இறுக்கமாய் இறுக்கினாள். ஓங்கி, ஓங்கி அடிக்கும் அலையின் மடிக்குள் ஒரு மோகத் தாண்டவம் மோனதாண்டவம், மோகனத் தாண்டவம், அரங்கேறிக்கொண்டிருந்தது. ■

# கண்ணாமூச்சி ரே... ரே... 13

## பட்டுக்கோட்டை பிரபாகர்



நடிகர், நடிகைகள், டைரக்டர்கள், பாடலாசிரியர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் சினிமாவைச் சேர்ந்த டெக்னிகல் மனிதர்கள் பெரிய பெரிய மலர் மாலைகளுடன் வந்த வண்ணம் இருந்தார்கள். ரசிகர்கள், ரசிகைகள் கண்ணீர் மல்க வந்தார்கள்.

அத்தனையையும் இரண்டு வீடியோ காமிராக்களும், ஒரு சினிமா காமிராவும் படம் எடுத்துக் கொண்டிருந்தன.

சங்கரதாசும் ஒரு மாலையுடன் வந்து சோகமாய் துர்க்காவின் உடலின் கால் பகுதியில் போட்டுவிட்டு தனியாய் நின்ற சித்தியிடம் வந்து, "இத்தனை சின்ன வயசில இப்படி ஒரு சாவு அநியாயம்மா. என்கிட்டே மனசு விட்டு எத்தனையோ தடவை சொல்லியிருக்கா மது-சினிமால என்ன என்ன சாதனைகள் உண்டோ அத்தனையையும் சாதிச்சிக் காட்டணும்னு.." என்று தொண்டை கரகரக்கப் பேசினான்.

மாலையில் ஊர்வலம்.

கறுப்பு பேட்ச் குத்திக் கொண்டு ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

மத தொடர்பான சடங்குகள் ஒன்றும் குறையில்லாமல் நடத்தப்பட்டு... துர்க்காவின் உடல் இருந்த சவப் பெட்டியின் முடியைப் பொருத்தி, ஆணிகள் அடித்து உள்ளே இறக்கி... மண்போட்டு... பாதிரியாரின் ஜெபத்திற்குப் பிறகு..

முற்றிலும் மூடப்பட்டு...

தயாராய் இருந்த கொத்தனார்கள் கல்லறை எழுப்பும் பணிகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

***

**செ**ன்னை தொலைக்காட்சியில் செய்தியாகவும் படிக்கப்பட்டாள் மதுலதா.

ஊர்வலத்தில் ஒரு 'பிட்'டும், மதுலதாவின் மாலை போட்ட புகைப்படமும் ஒரு வினாடி காட்டினார்கள்.

டி.வி. பெட்டியின் எதிரே டின் விஸ்கி குடித்துக் கொண்டிருந்த சங்கரதாஸ் சைடில் திரும்பி சுதிரிடம் "அய்யோ! பாவம்" என்றான்.

"ஏன் தாஸ், இதை மதுலதாவுக்குக் காட்டினா எப்படி இருக்கும்?"

"காரணமாதான் அவளுக்கு காட்டலை. சுதிர், இப்போ மதுலதாவைப் பொறுத்தவரைக்கும் தான் ஒரு கும்பலால கடத்தப்பட்டு இருபது லட்சம் ரூபாய்க்காக பணயமா வைக்கப்பட்டிருக்கோம்னு மட்டும் தான் தெரியும். சிங்கப்பூர் ஊசி இன்னிக்குத்தான் ரெண்டாவது போட்ருக்கோம். இன்னும் நாலஞ்சு போனதும் பாரு ..."

"சரி. இப்ப அடுத்த நடவடிக்கை என்ன தாஸ்?"

"போலீஸ் உட்பட கோடானு கோடி மக்களை திறமையா நம்ப வச்சாச்சு சுதிர். மதுலதா செத்துப் போயாச்சு. துர்க்காவை மதுலதாவாக்கித் தீர்த்தாச்சு. இப்போ மதுலதாவை துர்க்காவாக்கப் போறேன். இதென்ன தெரியுமா?"

தாஸ் தன் கைப்பையில் இருந்து

> "தாஸ், நீ ஒரு பயங்கமான ஸாடிஸ்ட்."
> "என்ன பேர் வேணாலும் சொல்லிக்கோ என்னால துரோகம் தாங்க முடியாது. கொஞ்சம் நம்ம மூளை குறுக்கு வேலை பார்க்கக் கூடியது. அதனாலதான் இப்படி வித்தியாசமான தண்டனை."

நூறு மில்லி பாட்டில் ஒன்றை எடுத்துக் காட்டினான். அதில் ஏதோ திரவம் ஆடியது.

"என்ன அது?"

"அமிலம். இங்கிலீஷ்ல ஆசிட்ன்னு சொல்வாங்க. சரியா சொல்லணும்னா கந்தக அமிலம், ஃபுல் கான்சென்ட்ரேட்டட், ஒரு டிராப் உள்ளங்கையில வச்சா புறங்கை வழியா வெளியே வந்துடும் சுதிர்."

"இதை வச்சி என்ன செய்யப் போறே தாஸ்?"

"இவ துர்க்கா இல்லை. மதுலதான்னு சொல்றது முகம்தான் சுதிர். உடம்பு அளவு ரெண்டுபேருக்கும் ஒண்ணுதான். முகத்தில் ரெண்டு பேருக்கும் முக்கியமான வித்தியாசம் மூக்குதான் அப்புறம் மதுலதாவுக்குன்னு இருக்கிற ரெண்டு விசேஷ மச்சங்கள். அந்த நிரந்தர அடையாளங்களை மாத்தறதுக்கும், மூக்கை மாத்தறதுக்கும் இந்த பாட்டில்ல உள்ளதில பத்து சதவீதம் போதும் சுதிர். லேசா தெளிச்சாப் போதும். தெளிச்சிட்டு சேதுவைவிட்டு தூக்கிட்டுப் போகச் சொல்லி ஒரு பிரைவேட் நர்சிங் ஹோம்ல அட்மிட் பண்ணச் சொல்றோம். சேதுவே ட்ரீட்மெண்ட்டுக்கு ஏற்பாடு செஞ்சி பக்கத்திலேயே இருந்து கவனிச்சுக்குவான். தவிர சிங்கப்பூர் ஊசியை தினம் ஒண்ணா ரகசியமா போடுவான். மதுலதா பாதி பைத்தியமாய்டுவா. தன் அடையாளமும் மாறிப் போய்டுவா. அதுக்கப்புறம் அவ விவரம் தெரிஞ்சி தான்தான் மதுலதான்னு சொல்லவும் முடியாது. சொன்னா யாரும் நம்பவும் போறதில்லை. நம்ப வைக்க எந்த ஆதாரங்களும் இல்லை. காலம் பூரா பைத்தியக்கார துர்க்காவா வாழ்வா. நம்ம சேது அவள் பைத்தியம்ங்கிறதாலே தன்னால அவளோட குடும்பம் நடத்த முடியாதுன்னு சொல்லி அம்மா வீட்ல விட்டுட்டு கட் பண்ணிக்கிட்டு வந்துடுவான். நான் மதுலதாவைப் பார்த்துப் பார்த்து சிரிப்பேன் தினமும்."

சுதிர் சிலிர்த்துப் போனான்.

"தாஸ், நீ ஒரு பயங்கரமான ஸாடிஸ்ட்."

"என்ன பேர் வேணாலும் சொல்லிக்கோ என்னால துரோகம் தாங்க முடியாது. கொஞ்சம் நம்ம மூளை குறுக்கு வேலை பார்க்கக் கூடியது. அதனாலதான் இப்படி வித்தியாசமான தண்டனை."

"அதெல்லாம் சரி. சேதுவை எவ்வளவு தூரம் நம்பறது தாஸ்?"

"சேது பணத்துக்கு இளிக்கிற ஆசாமி. மூச்சுவிட மாட்டான் வெளியே. ஏன்னா ஆரம்பத்திலேர்ந்து அவன் இதிலே சம்பந்தப் பட்டிருக்கான். மூண்ட முடியாது. காட்டிக் கொடுக்கணும்னு நினைச்சா அவனும் தீர்ந்தான். சதியில அவன் பங்கும் பெரிசு. அதனால அப்படி ஒரு விபரீத புத்தி வராது."

"போலீஸ் எந்த விதத்திலயும் நம்மை நெருங்கிட முடியாதில்லே தாஸ்?"

"சுதிர், கண்ணாமூச்சி விளையாட்டு எனக்கு ரொம்ப பிடிக்கும். என்னைக்கும் தோத்ததில்லை அதில. பயப்படாதே.

தாஸ் ஆசிட் பாட்டிலை பைக்குள் வைத்துக்கொண்டு, "இன்னைக்கு ராத்திரி சேது வந்ததும் திட்டத்தை விவரமா பேசிட்டு இதை உபயோகிச்சி நான் சொன்னபடி மதுலதாவை துர்க்காவா மாத்திடலாம்.." என்றான் கொஞசம்கூட கலக்கமோ, தயக்கமோ இல்லாமல்.

***

**த**மிழகத்தின் குற்றப் பிரிவிற்கான டி.ஜி.பியின் அறையில் உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டத்தில் உதவி கமிஷனர் மார்த்தாண்டனும் இருந்தார்.

பல பிரச்சனைகளைப் பற்றிப் பேசும்போது நடிகை மதுலதா கொலை வழக்கு பற்றி வருகையில் சொன்னார்:

"முழு வேகத்தில் ஈடுபட்டுக்கிட்டுத் தான் இருக்கோம். எத்தனை கோணங்கள் உண்டோ அத்தனையிலும் அணுகுறோம். இதுவரைக்கும் ஒரு க்ளு கிடைக்கலை. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் உதவும்னு பார்த்தோம். அதுவும் உதவலை. எப்படியும் சீக்கிரம்..."

ஒரு வாரம் கழித்து...

அந்தபிரைவேட் ஆஸ்பத்திரியில்... தனி வார்டில்...

முக்கால் வாசி முகம் தோல் பிய்ந்து ஒரே கோரமாக....ரணகளமாக... அதற்கான மருந்து போடப்பட்ட நிலையில் துர்க்கா வாக்கப்பட்ட மதுலதா, "டேய் இங்க வாடா டாக்டரு! என்னோட விலை எவ்வளவு தெரியுமாடா? இருபது லட்சம்டா. நீ தர்றியா? தர்றியா சொல்லு சீக்கிரம்?" என்று டாக்டரின் சட்டையைப் பிடித்தாள்.

"இந்த கண்றாவி எல்லாம் பார்க்கணுமா? நான் போய் சேர்ந்துடக் கூடாதா? என்று அழுது கொண்டிருந்தாள் துர்க்காவின் அம்மா.

"வரவர இந்த சனியனோட தொல்லை அதிகமாப் போச்சி! ச்சை" என்று அலுத்துக் கொண்டு சேது.

"ஆசிட் வீசப்பட்ட அதிர்ச்சியில மூளை பாதிக்கப்பட்டிருக்கு. முகத்துக்காக சிகிச்சை முடிஞ்சதும் நானே சிபாரிசு பண்றேன். மெண்ட்டல் ஹாஸ்பிடல்ல சேர்த்து தீவிரமா சிகிச்சை கொடுக்கணும்" என்றார் பொறுமையாய் சாருஹாசன் சாயலில் டாக்டர்.

***

**ம**துலதாவின் சித்தி வக்கீலைப் பார்த்துச் சொத்துக்களை பெயர் மாற்ற ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோது...

திடீரென்று முளைத்தான் ஜோசப். "ரோஸ்லினுக்கு பெரியப்பாவின் பையன் முறையில் அண்ணன் முறை வேண்டும். நான்தான் நெருங்கின சொந்தம். சொத்து முழுக்க எனக்குத் தான் சேர வேண்டும்" என்றான் வக்கீல் மூலமாய்.

கோர்ட் பங்களாவில் இருந்து சித்தி, சித்தப்பாவை வெளியேற்றி சீல் வைத்து, மதுலதாவின் சொத்துக்கள் அனைத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பை வழக்கு முடியும்வரை கோர்ட்டே ஏற்கும் என்று நபர் நியமித்தது.

*(கண்ணாமூச்சி தொடரும்)*

# "தூக்கில் தொங்குவதைவிட மனித வெடிகுண்டாக மரணிக்கவே விரும்புகின்றேன்" தீவிரவாதி சேக் அதீல்

**"எ**ங்களை தூக்கில் போடாதீர்கள். இந்தியாவுக்கு மனித வெடிகுண்டாக அனுப்பி வையுங்கள்" என்று அமெரிக்க நிருபர் கடத்தல் தொடர்பாக பாகிஸ்தானில் கைதான தீவிரவாதிகள் புலம்புகின்றனர்.

### நிருபர் கடத்தல்

அமெரிக்க நிருபர் டேனியல் பேர்ல் பாகிஸ்தானில் வைத்து கடந்த மாதம் கடத்தப்பட்டார். அவரை உயிருடன் மீட்க அமெரிக்கா, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இதுவரை அவர் விடுவிக்கப்படவில்லை.

இந்தக்கடத்தல் சம்பவம் தொடர்பாக முக்கிய தீவிரவாதி ஷேக் உமர் சயீத் மற்றும் சேக் அதீல், சல்மான் சாகிப் உட்பட பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

### மனித வெடிகுண்டு

சேக் அதீலிடம் நடந்த விசாரணையில் அவர் தன்னை தூக்கில் போட்டு மரண தண்டனை நிறைவேற்றுவதை விட இந்தியாவில் மனித வெடி குண்டாக வந்து இன்னும் ஏராளமானவர்களைக் கொன்று தானும் இறப்பதையே பெருமையாக தெரிவித்து உள்ளார். விசாரணை நடத்திய போலீஸ் அதிகாரிகளிடம் அவர் கூறும் போது, "அமெரிக்க நிருபரை கடத்தியதற்காக என்னை தூக்கில் போட்டு கொன்று விடாதீர்கள். அதற்கு பதிலாக என்னை வெடிகுண்டு மனிதனாக இந்தியாவுக்கு அனுப்பி வையுங்கள். இந்தியாவின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் அனுப்பி வையுங்கள். அங்கு சென்று நான் எனது கடமையை நிறைவேற்றுகிறேன்" என்று திரும்பத் திரும்ப புலம்பி உள்ளார்.

# அறுபது கடந்த நடிகையின் ஐந்தாவது கணவர்

**இ**ங்கிலாந்து நடிகை (68 வயது) ஜோன் காலின்சின் 5 வது திருமணம் லண்டனில் உள்ள கிளாரிட்ஜ் ஓட்டலில் நடந்தது. கணவர் 36 வயது பெர்சி கிப்சன். காலின்ஸ் சினிமா மற்றும் நாடகங்களில் நடித்து புகழ் பெற்றவர். காதல் கடிதங்கள் என்ற நாடகத்தில் நடித்தபோது ஜோன் காலின்ஸ் மனதில் இடம் பிடித்து விட்டார் கிப்சன்.

### அவர்கள் திருமணத்தில்

180 பேர் கலந்து கொண்டார்கள். இவர்களில் ஜேம்ஸ்பாண்ட் நடிகர் ரோஜர் மூரும் ஒருவர். மணமக்களை வாழ்த்தியவர்களில் காலின்சின் முன்னாள் கணவர்களுக்கு பிறந்த 3 குழந்தைகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

காலின்சின் முதல் கணவர் நடிகர் மாக்ஸ்வெல்ரீட். 1952ம் ஆண்டு நடந்த இவர்கள் திருமணம் சில ஆண்டுகள் நீடித்தது. 2வதாக 1963ம் ஆண்டு பாடகர் அந்தோனி நிலியை மணந்தார். அதுவும் முறிந்தது. பீட்டில்ஸ் இசை கம்பெனி நிர்வாகி ரோனல்டு காஸ் 3வது கணவர். இந்தத் திருமணம் 12 ஆண்டுகள் நீடித்தது. 1984ம் ஆண்டு விவாகரத்து செய்து கொண்டார்கள். சுவீடன் நாட்டு பாப் இசைக் கலைஞர் பீட்டர் ஹோம் 4வது கணவர். 1987ம் ஆண்டு விவாகரத்து செய்தபின் இப்போது 5வது கணவரை மணந்து இருக்கிறார், ஜோன் காலின்ஸ்.

# முத்தம் தவிர்க்க சிப்பாய்களுக்கு ஆலோசனை

**ரோ**மன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடு பிலிப்பைன்ஸ். இங்கு நாட்டின் தென்பகுதியில் அதிகம் வசிக்கும் முஸ்லிம்கள் தனி நாடு கேட்டு கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். அபுசய்யப் என்று அழைக்கப்படும் கொரில்லா இயக்கம் இதற்கு தலைமை வகிக்கிறது.

ஆகவே அந்த தீவிரவாதிகளை அடக்க பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்கு உதவுவதற்காக அமெரிக்க சிப்பாய்கள் போய் இருக்கிறார்கள்.

கலகம் நடக்கும் பசிலன் தீவுக்கு புறப்பட்டுச் சென்ற அமெரிக்க சிப்பாய்களுக்கு அங்குள்ள முஸ்லிம் மக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று யோசனை கூறப்பட்டு இருக்கிறது.

பொது இடங்களில் யாருக்கும் முத்தம் கொடுக்கக்கூடாது. முஸ்லிம் பெண்கள் அவர்களாக விரும்பினால் தவிர கை குலுக்கக்கூடாது என்று சிப்பாய்களுக்கு கருத்தரங்கு நடத்தி ஆலோசனைகள் கூறப்பட்டு இருக்கின்றன. பசிலன் தீவில் அமெரிக்க சிப்பாய்கள் 6 மாதம் தங்கி இருப்பார்கள்.

அங்கு 1 லட்சம் முஸ்லிம்களும், 65 ஆயிரம் கிறிஸ்தவர்களும் வசிக்கிறார்கள்.

# உயரவாலிபரின் ருசிகர பிரச்சனைகள்

**போ**ரால் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியா நாட்டைச் சேர்ந்தவர் ஹுசைன் பிசாத். இவர் அங்கிருந்து தப்பி ஓடி வடக்கு லண்டனில் வசித்து வருகிறார்.

27 வயதான இந்த வாலிபரின் உயரம் 7 அடி 9 அங்குலம்.

இவரது எடை 210 கிலோ ஆகும். இவரது ஷூ அளவு எண் 26 ஆகும். இதனால் இவர் தாய்லாந்து நாட்டில் இருந்து தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படும் 'ஷூக்களையே வாங்கி அணிகிறார். இதன் விலை ரூ.40 ஆயிரம்.

ஹுசைன் பிசாத் ஒரு நாளைக்கு 4 முறை சாப்பிடுகிறார். இடை இடையே "நொறுக்குத்தீனி". நாள் ஒன்றுக்கு 15 லீட்டர் தண்ணீர் குடிக்கிறார். 9 அடி கட்டிலில் தூங்குகிறார்.

### 'உயர்ந்த மனிதன்'

ஹுசைன் பிசாத் 1999ம் ஆண்டு சோமாலியாவில் இருந்தபோது 7 அடி 7 அங்குலம் உயரம் கொண்டவராக இருந்தார். அப்போது அவர் 'சோமாலியாவின் உயரமான மனிதராக' வர்ணிக்கப்பட்டார்.

நாளுக்கு நாள் அவரது உயரத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. புகலிடம் தேடி இங்கிலாந்து வந்த அவர் 7 அடி 9 அங்குல உயரத்தை அடைந்தார். தற்போதைய உலக சாதனையான 7 அடி 8 அங்குலத்தை முறியடித்து உலகத்திலேயே 'உயர்ந்த மனிதன்' ஆகிவிட்டார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி.....)

"அப்பிடி வா சனத்துக்கு இப்ப என்ன வேணும் எண்டதை சண்டைபிடிக்கிற இரண்டு பக்கமும் எடுத்துச் சொல்லவும், எதைக் கேட்டுச் சனம் அணிதிரள வேணும் எண்டு காட்டவும் தான் இவையின்ர எழுத்து இருக்க வேணும்...."

"விசர்க்கதையெல்லே சேர் கதைக்கிறியள். அவங்கள் இரத்தம் சிந்திப் போராடுறாங்கள். இவை இடையில நொண்ணை சொல்லப் போகேலுமே? அவங்களுக்கு எப்பப்ப என்னென்ன எழுதோணுமோ அதை வடிவாய் எழுதிக் கொண்டிருந்தால் காணும். எல்லாம் அவங்கள் எடுத்துத் தருவாங்கள். இவையின்ர கருத்தொண்டும் அவங்களுக்கு வேண்டாம். இப்ப உங்களையெல்லாம் எழுத விட்டிருந்தால் இந்தளவுக்குச் சமாதானச் சூழல் கனிஞ்சிருக்குமோ...?

அவை எழுதிறது தான் சரி. மாற்றுக் கருத்து ஜனநாயகச் சூழல் எண்டு நீங்கள் அலம்பிக்கொண்டு திரியாதையுங்கோ. முதல்ல பேரினவாத அரசாங்கத்திட்டயிருந்து அதிகாரங்களைக் கழட்டுற வழியைப் பாக்கோணும். பிறகு தான் மிச்சம்... எண்டு ஒரே போடாய் போட்டன். ஆள் அடங்கிப் போனார்.

அந்தாளுக்கு விளங்காமலிருக்கலாம். அல்லது விதண்டாவாதத்துக்கு நிக்கலாம். எனக்கு வடிவாய் விளங்குது. நீங்கள் இப்ப எழுதிற மாதிரி எழுதாமல் வேறை என்னத்துக்கு எழுதிறது. உயிரைக் குடுத்துக் களத்தில நிக்கிறவங்கள் சும்மா விடுவாங்களே!

லெக்சரருக்கு ஏதேனும் துரோகக் கும்பலோட கனெக்சன் இருக்கலாம். அது தான் குழப்பம். பிறகு அவையெல்லாம் எப்பிடி இதுக்குள்ள இருக்கிறது எண்டு இப்பவே யோசிக்க ஆரம்பிச்சிட்டினம் போல கிடக்கு. அவைக்குத் தான் நாளைக்கு என்ன நடக்கும் எண்ட கேள்வியள் வரும்.

நீங்கள் எழுதுங்கோ

ஒவ்வொரு ஞாயிறும் பேப்பர் பாத்துத் தான் நாங்கள் உசாரேத்திக்கொள்ள வேணும்.

நீங்கள் உயிரோடயும் இருக்க வேணும்!

*அன்புடன், சாதாரணன்.*



அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் கரிகாலனை சந்தித்தபோது....



கொக்கட்டிச் சோலையில் உள்ள புலிகளின் முகாமில் பல மணி நேரம் தங்கியிருந்த ஆறுமுகன் தொண்டமான் அங்கு மதிய உணவு அருந்திவிட்டு தானே சுயமாக வாகனத்தைச் செலுத்திக் கொண்டு வலையிறவுப் பாலத்தினூடாக மட்டக்களப்புக்கு வந்தார்.



(4ம் பக்கத் தொடர்ச்சி.....)

# புரிந்துணர்வு உடன்படிக்கை....

உறவினர்களைச் சந்திக்க மறுதரப்பின் பிரதேசங்களுக்கு செல்லும் அனுமதியைப் பொறுத்தவரை படையினருக்கு இவ்வகையில் புலிகளின் பிரதேசங்களுக்குச் செல்லும் தேவை இருக்கப் போவதில்லையென்பதால் இச் சலுகை தமக்கு உபயோகமற்றதும் புலிகளுக்கே பயனளிக்கக் கூடியதுமென அவர்கள் நிராகரிக்கிறார்கள்.

இவ் ஆவணமானது 4 பிரிவுகளைக் கொண்டது.

மேற்கூறியவை அதன் முதலாவது பிரிவில் அடங்குகின்றன. இரண்டாவது பிரிவு "நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள்" என்ற தலைப்பிலமைகின்றது.

அதில்: பொதுமக்கள் மீதான பகை நடவடிக்கைகளான சித்திரவதை, பணம்பறித்தல், ஆட்கடத்தல், பலவந்த நிதிவசூலித்தல், தொல்லைக்குள்ளாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ளாதிருத்தல்,

வணக்க ஸ்தலங்கள் திறந்துவிடப்படல், நிலைகொண்டுள்ள பாடசாலைகளிலிருந்து விலகி அவற்றை மீள இயங்க வகைசெய்தல், பொதுமக்களின் கட்டடங்களை மீளக் கையளித்தல் சனத்தொகை செறிந்த நகரங்களிலுள்ள சோதனை முறைகளை தொல்லையற்ற முறையில் மாற்றியமைத்தல்,

இராணுவம் சாராத பொருட்களை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தங்குதடையின்றி கொண்டு செல்லவும் எடுத்துவரவும் வகைசெய்தல், இதற்கு உகந்ததாக தத்தம் பகுதிகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தல்,

திருகோணமலை-ஹபறண வீதியை 24 மணி நேரமும் திறத்தல்; யாழ்-கண்டி ஏ9 வீதியைத் திறத்தல்,

மீன்பிடிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான தேடுதல் நடவடிக்கைகள், கைதுகள் யாவும் நிறுத்தப்படல், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் சந்திக்க அனுமதித்தல் போன்ற விடயங்கள் அடங்குகின்றன.

இப் பிரிவுகுறித்து பெருமளவு சர்ச்சைகள் இல்லாவிட்டாலும் மூன்றாவது பிரிவாக அமைந்திருக்கும் "கண்காணிப்புப் பணி" என்ற பகுதியில் மற்றொரு சர்ச்சைக்குரிய விடயம் தோன்றியுள்ளது.

இப் பகுதியில் எவ்வாறு கண்காணிப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்களெனவும் அவர்கள் எவ்வெவ் பகுதிகளில் எப்படி கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கென்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக அமையும் இக் கண்காணிப்பு குழுக்களின் தலைமைகளை நேர்வே அரசாங்கம் நியமிக்கும்.

இதில் சர்ச்சைக்குரிய விடயம் எங்கு புலப்படுகிறதென்றால், இக் கண்காணிப்புக் குழுக்கள் ஆறு பிரிவுகளாக அமைக்கப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பணியிலீடுபடுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதில் முல்லைத்தீவு மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டமும் சேர்க்கப்படவில்லை.

ஏன் அவை தவிர்க்கப்பட்டன என்பதே இவர்களின் சந்தேகத்தைக் கிளப்பிவிட்ட மற்றைய விடயம்.

அடுத்ததாக இறுதிப் பிரிவாக அமைந்துள்ளது "உடன்படிக்கை செய்தலும், திருத்துதலும், ரத்தாக்கலும்" என்ற பிரிவு.

இதில் இவ் உடன்படிக்கையில் இருபகுதிகள் சார்பில் யார் கையெழுத்திடுவது என்பது ஒரு பிரச்சினைக்குரியதாகிறது.

புலிகளின் தலைவர் கைச்சாத்திடுவதானால் மறுபுறம் நாட்டின் தலைவராக ஜனாதிபதி கைச்சாத்திட வேண்டியதாகிறது. இதற்கு ஜனாதிபதி உடன்படுவாரா என்பது கேள்வி.

இதேவேளை பிரதமரான ரணில் கைச்சாத்திட்டால் அதே மட்டத்தில் மறுபுறம் பிரபாகரன் கைச்சாத்திட முன்வருவாரா என்பது கேள்வி.

ஆனால் பிரபாகரனன்றி அடுத்த ஒரு புலிகள் தலைவர் கைச்சாத்திடுவதானால் அதில் ரணில் கைச்சாத்திடுவாரா என்பதும் கேள்வி.

ஆக, கௌரவம் என்பது இதில் சம மட்டங்கள் எவை என்ற ஒரு சர்ச்சையாக இங்கு உருவெடுக்கிறது.

எனினும் ஒருவேளை ரணிலும் பிரபாகரனும் கைச்சாத்திட்டால், அவ் உடன்படிக்கை ஜனாதிபதியை, அவரின் தலைமையிலான படைகளைக் கட்டுப்படுத்துவதாக அமையும் சட்டபூர்வ அதிகாரத்தைக் கொண்டிருக்கிறதா என்பதும் இன்னொரு கேள்வி.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை இரு நாடுகளுக்கிடையிலான ஒரு ஒப்பந்தத்திலேயே அவர் கைச்சாத்திடலாம் என்ற ஒரு வாதம் முன்வைக்கப் படுகிறது.

அவ்வாறானால் உள்நாட்டு போராளி அமைப்பு ஒன்றுடனான ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திடும் அவசியம் இல்லையென்றாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை இவ்வகையில் இரு ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கிடையேயே நிகழ்ந்துள்ளன.

முதலாவது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்.- இது இந்திய வம்சாவழியினர் பிரச்சினை தொடர்பாக அன்றைய இலங்கைப் பிரதமர் சிறீமாவோ இந்தியப் பிரதமர் சாஸ்திரியுடன் செய்துகொண்டது.

மற்றையது இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் செய்துகொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம்.

இவற்றில் உள்நாட்டுத் தலைவர்களன்றி வெளிநாட்டுத் தலைவர்களுடனேயே இந்த ஒப்பந்தங்கள் நாட்டுத் தலைவர்களால் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறன்றி பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் போன்ற உள்நாட்டுத் தலைவர்களுடன் இனப் பிரச்சினை தொடர்பாக செய்துகொண்ட ஒப்பந்தங்களும் உண்டு.

எனவே இதில் விதண்டாவாதம் அவசியமற்றது.

சமாதானத்துக்கு எது உகந்த மார்க்கமோ அதை முதன்மைப் படுத்தி சிந்திப்பதே அவசியம்.

எனினும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள சர்ச்சைகள், நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறாத வகையிலும் புலிகளைத் திருப்தி செய்யும் வகையிலும் கையாளப்பட்டு எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றது என்பதே சமாதானப் பேச்சுக்களுக்கான அடுத்த கதவைத் திறக்க வாய்ப்பளிக்கும்.

இப்போது வெளிவந்திருக்கும் ஆவணம் வெறும் நகல்தான். நிஜம் வெளியாகும்போதே உண்மை நிலை தெரியும். - காத்திருப்போம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி.....)

# நிதிச் சிக்கலில்.....

போனஸ் விவகாரத்தில் பிரச்சனை சூடு பிடித்தது! 8.33 சதவீதத்துக்கு மேல் போனஸ் வழங்க இயலாது என்று திட்டவட்டமாக அரசு மறுத்து விட்டது. சுமார் 15 நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போக்குவரத்துத் தொழிலாளர்கள் இறுதியாக போராட்டத்தைக் கைவிட வேண்டியிருந்தது.

அதைத் தொடர்ந்து அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தத் திட்டமிட்டனர். பொங்கலுக்கு போனஸ் வாங்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையைத் தமிழக அரசு நிராகரித்துவிட்டது. நிதி நிலமை சீரானவுடன் வழக்கம் போல போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்படி சில கோரிக்கைகள் ஒப்புக் கொள்ளப்பட்டதையடுத்து வேலை நிறுத்தத் திட்டத்தை அரசு ஊழியர் சங்கங்கள் கைவிட்டன. ஆனால் பிரச்சனை இத்துடன் முடிந்து விடும் என்பதில்லை.

ஒரு கட்டத்தில் கள் மற்றும் சாராயக் கடைகளைத் திறந்து விட்டால் அதன் மூலம் வருவாய் பெருகும் என்று அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால் பெண்களில் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்பதால் அது கைவிடப்பட்டது. பின்னர் மலிவு விலை மது என்ற பெயரில் ரூ 15 விலைக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானம் விற்பனைக்கு வந்தது. தற்போது நகர்ப்புறங்களில் மட்டும் வழங்கப்பட்டு வரும் இந்த மதுபானம் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டது. பின்னர் எதிர்ப்புகள் எழுந்ததும் கைவிடப்பட்டது.

இப்படிப் பிரச்சனைகள் ஒரு புறமிருக்க நிதிச் சீர்திருத்தத்தில் தமிழக அரசு முழு மூச்சுடன் இறங்கியிருக்கிறது. இந்த விஷ யத்தில் அரசுக்கு அறிவுரை வழங்கவும், என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளவும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியும் நிதித் துறை முன்னாள் செயலருமான ஏ.எம் சுவாமிநாதன் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தது. அக்கமிட்டியும் தன்னுடைய இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஆனால் அதன் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

சுவாமி நாதன் கமிட்டி தன்னுடைய அறிக்கையை ஆறுமாத காலத்துக்குள் சமர்ப்பிக்கும் என்ற அரசு அறிவித்துள்ளது. அதன் பிறகு அந்த அறிக்கை சட்டப்பேரவையில் வைக்கப்பட்டு விவாதம் நடைபெறும். அதன் முக்கிய அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க அரசு முனையும். தனியார்மயம் என்ற சொல் தமிழக வரலாற்றில் மிகப்பெரிய அளவில் தலையெடுக்கும். கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்காக பணம் ஒதுக்காமல் அரசு மெதுவாக அவற்றை தனியார் வசம் ஒப்படைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற் சங்கங்கள் வலுவிழந்து போய் விட்ட நிலையில் தான் நினைப்பதை மெதுவாக அரசு சாதித்து விடும் என்கிறார்கள். இதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# ஸ்போர்ட்ஸ்

## ஆசிய கிரிக்கெட் சபைகள்

## ஐ.ஸி.ஸி.யிற்கு எதிராக போர்க்கொடி!



ஆசியாவில் உள்ள டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் இணைந்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் பாதகமான முடிவுகளை எதிர்த்து போர்க் கொடி உயர்த்த முடிவு செய்துள்ளன.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் மற்றும் ஆசிய கிரிக்கெட் பவுண்டேசன் ஆலோசனைக் கூட்டம் கடந்தவாரம் சார்ஜாவில் நடந்தது.

இந்த கூட்டத்தில் ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி ஆசிய கிரிக்கெட் கவுன்சில் மற்றும் பாகிஸ் தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தாகிர் ஜியா, ஆசிய கிரிக்கெட் பவுண் டேசன் மற்றும் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் ஜக்மோகன் டால்மியா ஆகியோர் நிருபர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்

"சமீப காலமாக பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி பல்வேறு நாடுகள் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை ரத்து செய்து உள்ளன. இதனால்பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆசியக் கண்டத்தில் உள்ள நாடுகளுக்கு வர சம்மதம் தெரிவித்து விட்டு பயணத்தை ரத்து செய்யும் நாடுகளுக்கு ஆசியாவில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள நாடுகளின் அணிகள் செல்லாமல் பயணத்தை ரத்து செய்ய முடிவு செய்யப் பட்டு உள்ளது.

அணிகளின் சுற்றுப் பயணம் ரத்து செய்யப்படுவதால் இழப்பை சந்திக்கும் கிரிக்கெட் சபைகளுக்கு உதவி செய்ய சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் போதிய நிதியை உருவாக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பப்பட்டிருக் கிறது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே விரைவில் கிரிக்கெட் போட்டி நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்போது தான் ஆசியாவில் கிரிக்கெட் வளர்ச்சி அடையும்.

இதேவேளை இந்திய கிரிக்கெட் வீரர்கள் சச்சின் டெண்டுல்கர் உட்பட 6 பேருக்கு தண்டனை அளித்த போட்டி நடுவர் மைக்டேன்னெஸ் தீர்ப்பு குறித்து ஐ.சி.சி. கமிஷன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது.

நியுசிலாந்து அணி ஏற்கனவே ஒப்புக் கொண்ட (ஏப்ரல் மாதம்) பாகிஸ்தான் பயணத்தை ரத்து செய் தால் இந்திய கிரிக்கெட் அணி டிசம்பர் மாதத்தில் செல்ல உள்ள நியுசிலாந்து சுற்றுப் பயணத்தை ரத்து செய்யும்." என்றும் கூறியுள்ளது.

### மோதல் முற்றுகிறது

ஆசியாகண்டத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், இலங்கை வங்காளதேசம் ஆகிய நாடுகளின் கிரிக்கெட் சபைகள் ஒன்றாக இணைந்து சர்வதேச கிரிக் கெட் கவுன்சிலின் பாதகமான முடிவு களை எதிர்க்க முடிவு செய்துள்ளன. அதோடு மே.இ.தீவுகள் தென் ஆபிரிக்கா, ஸிம்பாப்வே நாடுகளின் கிரிக்கெட் சங்க ஆதரவையும் கேட்டு இருக்கின்றன. இங்கிலாந்து, ஆஸ்திரே லியா, நியுசிலாந்து அணிகள் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் பின்னால் அணிவகுக்கும். இதனால் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுடனான மோதல் முற்றுகிறது.

# எப்போது வருவான்

இலக்கிய நயம்

தருவது சிற்பி

இழுத்து இழுத்து
கட்டிவைத்தாலும் மனசு
அடங்காமல் திணறிக்
கொண்டிருந்தது,
திவ்யாவிற்கு, ஆடைக்குள்
கள்ளத்தனமாய் நுழைந்த
காற்று அவன் தொட்டுப்
பார்க்காமல் விட்டுப்போன
இடங்களிலெல்லாம் இதமாய்ப்
பரவி அவன் கரங்களின்
ஸ்பரிசத்திற்காக இன்னும்
இன்னுமாய் ஏங்க வைத்தது.
முற்றத்தில் காய்ந்திருந்த
முழுநிலவில் கிரணங்களில் அவன்
இறங்கி வருவதாய், இறங்கி
வரவேண்டும் என்பதாய் ஒரு
வெப்பப் பெருமூச்சு.

நேற்றைக்கெல்லாம் இந்நிலவை
இரசித்தபடியே அவள் மடியில்
அவன் கிடந்தான். சேஷ்டைகள்
புரிந்த கைகளை சிறைப்படுத்தி
கட்டுக்குள் வைத்திருப்பதே
பெரும்பாடாய்ப் போயிற்று. ஏதோ
ஒன்றை மிக லாவகமாகச்
சொல்லி அவளின்
முழுக்கவனத்தையும் பேச்சில்
திசை திருப்பிவிட்டு
மெதுமெதுவாய் அவன் அத்து
மீறல்கள் அரங்கேறும்.
குறிப்பிட்ட எல்லை வரை அவனை
அனுமதித்துவிட்டு பின் "ஏய்" என
அவள் எச்சரிக்கையில்

"கதையின் சுவாரசியத்தில்
கரங்களின் நகர்வுகளைக்
கவனிக்க மறந்துவிட்டேன்.
ஆனாலுமென்ன நீதான் இயல்புப்
பயணத்திற்கு இடையூறாக
அங்கங்கே காவலரண்கள்
வைத்திருக்கின்றாயே, பிறகு ஏன்
அஞ்சுகின்றாய்" என பண்டிதத்
தமிழில் கிண்டலடிப்பான்.

"காவலரண்களா என்ன
உளறுகின்றீர்கள். அடிக்கடி
பயணம் செய்து செய்து உங்கள்
எண்ணமெல்லாம் காவலர
ண்களிலேயே தங்கி நிற்கின்றது."

"ஆமாம். ஆமாம்
அதுவென்றால் உண்மைதான்.
சதா காலமெல்லாம் என்
எண்ணங்கள் காவலரண்களைக்
கடப்பதிலேயே சுற்றி வருகின்றது."

"இப்போதுதான் அதைப்
பெருமளவு குறைத்து
விட்டார்களே"

"அவர்கள் குறைத்துவிட்டார்கள்.
ஆனால் நீ இன்னும்..." எனச்
சொல்லிவிட்டு ஒன்றும்
தெரியாதவன்போல் நிலாவைப்
பார்ப்பான். அவன் கூறியதன்
முழு அர்த்தத்தையும் புரிந்து
கொண்டு அவள்
வெட்கப்படுவதற்கு சில நிமிடங்கள்
பிடிக்கும்.

"ச்சீ, போங்க உங்களுக்கு எப்ப
பார்த்தாலும்..."

"என்ன, எப்ப பார்த்தாலும்..."

"எப்ப பார்த்தாலும் அதே
நினைப்புத்தான்.."

சொல்வதற்கே
வெட்கப்பட்டுக்கொண்டு அவனின்
முகம் பார்க்கும் கூச்சத்தில்
முகத்தை மடியினுள் புதைத்துக்
கொள்வாள். காதுகள் இன்னும்
கூர்மையாக இப்படி ஏதாவது



பேசேன், பேசேன் என
நீண்டுகொண்டிருக்கும். அவனோ
அவளின் உள்ளத்தை ஊடுருவிப்
பார்த்தவன் போல் வேண்டும்
என்றே மௌனம் காப்பான்.

"என்ன ஏதோ தடைகள்
என்றீர்கள், காவலரண்கள்
என்றீர்கள், இந்தத் தடைகளையும்
காவலரண்களையும் தகர்க்கும்
புஜவலிமை தங்களுக்கில்லையோ"

"ஏன் இல்லாமல் கனியும் முன்னே
தட்டிப்பறித்தல் தக்கதல்ல
என்னும் ஆத்ம பலத்தில் என்
புஜபலம் பூஜ்யமாய் இருக்கின்றது
கண்ணே"

"முட்டாள்களுக்கேது ஆத்ம பலம்"
அவன் காதினுள்
முணுமுணுத்தாள்.

"என்ன, என்ன, யாரைப் பார்த்து
முட்டாள் என்கின்றாய்" அவன்
உறுமினான்.

"பின்ன என்னவாம், கனிந்து
விழுந்த பழத்தைப்
பொறுக்கியெடுப்பதை
தட்டிப்பறிப்பதென்று தப்புக்
கணக்குப் போடுபவர்களை
அறிவீலிகள் என்று கூறாமல்
என்ன அறிவுச் சுடரென்றா
கூறுவார்கள்?"

"எங்கே, எங்கே நீ பெரிய
புத்திசாலியென்றால் என்
விவேகத்தைச் சோதித்துப் பார்."

"சோதிக்கின்றேன். நான் கூறும்
புதிரை விடுவியுங்கள்
பார்க்கலாம்."

"அஹ்கஹ்கா" அவன்
ஆணவமாய்ச் சிரித்தான்.

"என்ன கொஹ்கஹ்கா" அவள்
பழிப்புக்காட்டினாள்.

"புதிருக்கே புதிரா, எங்கே
எடுத்துவிடு உன் புதிரை. அதை
விடுத்து பொடிப்பொடியாய்
உடைத்து, எழுகின்ற தூசுகளை
உன் முகத்தில் ஊதிவிடுகின்றேன்"

"கேளுங்கள்,

**மந்திக்கு வால்நான்கு**
**மதகரிக்கு கால் எட்டுண்டு**
**மங்கைக்கு தனம் இல்லை**
**முயலுக்குக் கொம்பு"**

இதுதான் புதிர். இதனை
விளக்குங்கள் பார்க்கலாம்.

அவன் ஆழ்ந்து சிந்திப்பவன்
போல் சிறிது நேரம் பாசாங்கு
செய்தான். பின் ஏதோ
ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டது
போன்ற பொய்யான
மகிழ்ச்சியுடன் அவள் காதில்
கிசுகிசுத்தான்.

"பெண்ணே உன் புதிரில் ஒரு
வழு இருக்கின்றது"

"என்ன வழு"

"தனம் என வருமிடத்தில்
வரவேண்டியது ஒரு
விளையாட்டின் பெயர்."

"இல்லை. அப்படியில்லை.
அதுதான் புதிர்"

"சரி. புதிர் அதுவாய் இருக்கலாம்.
இருந்தாலும் அவ்விடத்தில்
"பூப்பந்து" என்று பொருத்திப்
பார். இன்னும் சிறப்பாய்
இருக்கும்" எனக் கூறிவிட்டு அவன்
உதிர்த்த விஷமப் புன்னகை,
இப்போதும் திவ்யாவை என்னவோ
செய்தது.

இனி எப்போது வருவான்
அவளோடு "பூப்பந்து" விளையாட?

**ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல்;**
**மற்றவர்**

**நீங்கின் அரிதால் புணர்வு.**

(குறள்: 1155)

# சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா! காதலர் தினத்தன்று தொலைக்காட்சி பார்த்தீர்களா?**

வள்ளிரவி, கொழும்பு-13.

பார்த்தேன். பொங்கல், தீபாவளி, சிவராத்திரி போல காலையில் சமயப் பெரியவரின் அருளுரை, அதன் பிறகு நாதஸ்வரம், பட்டி மன்றம், அந்தப் பண்டிகையின் முக்கியத்துவம் உணர்த்தும் திரைப்படம் ஏதாவது இருந்தால் அது... என்று வீட்டிற் குள்ளேயே குடும்பத்தினரோடு வைத்த கண்வாங்காமல் அந்தச் சின்னத் திரைப் பெட்டிக்கு முன்னால்தான் எங்கள் பண்டிகைகள் என்றாகிவிட்டது. இந்த வருடத்திலிருந்து காதலையும் தொலைத்துவிட முடிவெடுத்தாயிற்று.

1kl

**★ எழுத்து, பேச்சு எதற்கு வலிமை அதிகம்?**

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை-01.

எதுவாக இருந்தாலும் பயன் படுத்துகிறவரைப் பொறுத்தது. சில ருக்கு இரண்டும் வேண்டாம். பார் வையே போதும்.

1kl

**★ அவரவர் வாழ்க்கை அவரவர் கையில் என்பதற்கு என்ன அர்த்தம்?**

சி.மயூரன், மட்டக்களப்பு.

உங்கள் கைகளால் பள்ளமும் தோண்டிக் கொள்ளலாம்; படிக்கட்டும் கட்டிக் கொள்ளலாம் என்பது.

1kl

**★ பிரபாகரன் எடுக்கும் முடிவுகளுக்கு தொண்டனாக இருந்து செயற்படுவேன் என்கிறாரே சிவசிதம்பரம்?**

என். முருகவேல், கொழும்பு-06.

சூடு கண்ட பூனை.

1kl

**★ உயிருக்குயிராகப் பழகிய நண்பன் ஒருவன் திடீர் என்று பிரிவது ஏன்? நண்பர்கள் என்றால் எப்படி இருக்க வேண்டும்?**

ரட்ணசபாபதி ரமேஷ்-கல்லோயா.

திருக்குறள் சுருக்கமான உரை யுடன் கூடிய நூலை எடுங்கள். 79 முதல் 83 வரையான ஐந்து அதிகா ரங்களையும் ஒரு மூச்சுப் படித்து விடுங்கள். மீண்டும் பின்வரும் ஆறு குறள்களையும் இந்த வரிசைப்படியே படியுங்கள்: 812, 814, 798, 799, 790, 810 இதன் பிறகு நட்புக் குறித்து வரும் கேள்விகளை உங்களுக்கு அனுப்பி வைத்தால் நீங்களே தெளிவான பதில் களைத் தர ஆரம்பித்து விடுவீர்கள்.

1kl

**★ சிந்தியா, பாடசாலைகளுக்கெல்லாம் கலர் ரீ.வி. கொடுக்கப்படும் என்று அமைச்சர் ஒருவர் கூறியுள்ளாரே?**

ஈ.ஜி. ஆனந்த், கல்முனை.

வீட்டில் படிப்பைக் குழப்பும் ரீ.வி. யிலிருந்து அவர்களை விலகி ஓடும்படி செய்ய அது நல்ல ஐடியாதான்!

1kl

**★ மனவலிமையை அதிகரிக்க வழி என்ன?**

ப.லிங்கேஸ்வரன், துறைநீலாவணை.

எண்ணித் துணிதலும், துணிந்தபின் எண்ணிக் குழம்பாதிருத்தலும்.

1kl

**★ குழந்தையின் முத்தம், குமரியின் முத்தம்?**

சுதாஸ் சுதாகரன், பூண்டுலோயா.

ஒன்று மெய் மறக்கும், மற்றதற்கு மெய் சிலிர்க்கும்.

1kl

**★ விஜய்யின் ஷாஜகான் எப்படி?**

வி.தாஸ், களுவாஞ்சிக்குடி.

தன் காதலைச் சொல்லத் தெரியா மல், மற்றவர்கள் காதலையே சேர்த்து வைக்க ஓடுபவர் எப்படி 'ஷாஜகான்' ஆனார்?

1kl



**★ திருமணமான பிறகும் கஜோலுக்கு சிறந்த நடிகை விருது கிடைத்திருக் கிறதே?**

எம்.அருள்விஜய், கண்டி.

காஜல் (இதுதான் சரியான உச்சரிப் பாம்!) நடித்த 'கபி குஷி கபி கம்' (சில சமயம் சந்தோஷம் சில சமயம் துக்கம்) படத்திற்காக அவருக்கு Filmfare விருது கிடைத்திருக்கிறது. அந்தப் படம் ஒரு முக்கியமான சங்கதியை மிகுந்த உணர்ச்சிகரமாகச் சொல்கிறது. வய தில் மூத்தவர்களும்கூட சிறியவர்கள் மனம் புண்ணாகும்படி பேச உரிமை யில்லை என்பது அது.

வழக்கமாக தமிழ், ஹிந்தி சினிமாக்களில் ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையில், பெற்றோர்க்கும் பிள்ளைக ளுக்குமிடையில் பிரச்சனை ஏற்பட்டால், கதை முடிவில் பெண்ணோ பிள் ளைகளோதான் முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாக வேண்டும். இப்படத்தில் ஷாருக்கானும், ஜெய பாதுரியும் "நீங்கள் எங்கள் கடவுளுக்குச் சமமானவராய் இருந்தாலும் எங்கள் மனமுடையும்படி நடந்துகொள்ள உங்க ளுக்கு எந்த உரிமையுமில்லை" என்றே கடைசிவரை சொல்கிறார்கள். அமி தாப்பே இறங்கி வருகிறார். முடிவு எழுந்து நிற்கிறது.

**★ எழுத்தாளர்களின் எழுத்தாளர் என்று சொல்கிறார்களே அது என்ன சிந்தியா?**

ரி.ரூபிணி, ஹட்டன்.

எழுத்தாளர் நகுலனின் ஒரு வரி: "சுசீலாவின் சிறப்பு சுசீலாவிடம் இல்லை."

இந்த வரி என்ன சொல்கிறது என்று யோசியுங்கள். அப்போ அந்தச் சிறப்பு யாரிடம் இருக்கிறது? சுசீலா யார்? சுசீலாவிடம் சிறப்பு இருப்பதாகச் சொல்பவர் எதைச் சொல்கிறார்? இவருக்குச் சிறப்பாகத் தெரிவது உண்மையில் சுசீலாவினுடையது இல்லையா? இதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கும் உங்கள் சிறப்புக்களை எல்லோரும் ஒரே மாதிரிதான் புரிந்து வைத்திருக்கிறார்களா?.... இப்படியே யோசிப்பதை (மண்டை கவனம்) நீடித் துக்கொண்டே இதைப்பற்றி ஏதாவது எழுதத் தோன்றுகிறதா என்று பாருங்கள். நீங்கள் எழுத்தாளர் என் றால் நகுலன் எழுத்தாளர்களின் எழுத்தாளர். என்னை விட்டு விடுங்கள்.

# மன்னாதி மன்னன்

94

## தங்கமாபுரியில் மன்னாதி மன்னன்

நரமாமிச பட்சணிகளான ஏழு முனிவர்களுக்கும் உணவாகி அம்முனிவர்களின் வழமையான முறைப்படி உயிர் பெற்றெழுந்தார் மன்னர் விக்கிரமாதித்தன். முனிவர்களை வணங்கிய பின்னர் அவர்களிடம் தங்கமாபுரி பற்றிய விவரங்களைக் கூறுமாறு கேட்டார். தங்கமாபுரி பற்றி அறிவதற்காகவே கொதிக்கும் நெய்க் கொப்பரையில் தான் விழுந்து அவர்களுக்கே உணவானதாக மன்னர் மேலும் கூறினார்.

முனிவர்கள் எவரும் தங்கமாபுரி பற்றி அறிந்திருக்கவில்லை. எனவே அங்கிருந்து வடக்கே இருபது காத தூரம் சென்றால் ஓர் அடர்ந்த கானகத்தின் நடுவே உள்ள ஒரு குன்றின் மேல் இருந்து தவம் செய்து கொண்டிருக்கும் அவர்களுடைய குருவிடம் வினவினால், தங்கமாபுரி பற்றி அறிந்து கொள்ளலாம், என்று அவர்கள் மன்னர் விக்கிரமாதித்தனிடம் கூறினார்கள்.

விக்கிரமாதித்தன் வேதாளத்தின் தோள் மீது அமர்ந்து அந்த ஏழு முனிவர்களும் குறிப்பிட்ட கானகத்தை அடைந்து குன்றின் மீதேறி அம்முனி சிரேஸ்டரைக் கண்டு வணங்கி நின்றார். நிஷ்டை கலைந்து கண் திறந்த முனிவர் தன் முன்னே நிற்பவர் மாமன்னர் விக்கிரமாதித்தன்தான் என்பதை அறிந்து கொண்டார். மன்னர் தன்னை எதற்காக நாடி வந்திருக்கிறார் என்பதையும் தெரிந்து கொண்டு "விக்கிரமாதித்த மன்னரே பிறருடைய துன்பங்களை உமது துன்பங்களாகவே கருதி அவற்றைக் களைய முற்படும் பரோபகார சிந்தையுடைய உமது கோரிக்கை என்ன என்பது எமக்கு நன்கு தெரிகிறது. இருப்பினும் நீர் காணவிரும்பும் தங்கமாபுரி மன்னருக்கு ராஜரிஷி கொடுத்திருக்கும் சாபத்தில் எத்தகைய பங்கையும் எம்மால் ஏற்க முடியாது. ஆனால், உமது கோரிக்கைக்கு வேறு வகையில் ஓர் உதவி செய்யலாம். தங்கமாபுரி செல்லும் வழி எனக்குத் தெரிந்த போதிலும் அதற்கான மார்க்கத்தை எம் வாயால் கூற முடியாதிருக்கிறது." என்று கூறிவிட்டு மாற்று வழி ஒன்றையும் மன்னருக்குத் தெரிவித்தார்.

"இங்கிருந்து வடக்கே சிறிது தூரம் சென்றால் ஓர் ஆறு பிரவகித்து ஓடுகிறது. அந்த ஆற்றின் அக்கரையில் உள்ள மிக உயரமான ஆலமரத்தில் அண்டரண்டப் பட்சிகள் வாழ்ந்து வருகின்றன. அவை பல கடல்களையும் கடந்து தூர இடங்களுக்கும் பறந்து செல்ல வல்லமை பொருந்தியவை. அப்பறவைகளிடம் சென்றால் உமது எண்ணம் கைகூடும். ஆகவே அந்தப் பட்சிகளை இன்று மாலையில் சென்று பார்த்தால் பலன் கிடைக்கும்" என்று முனிவர் கூறினார்.

முனிவருடைய நல்லாசிகளைப் பெற்றுக் கொண்டு மன்னர் விக்கிரமாதித்தன் வேதாளத்தின் உதவியுடன் முனிவர் குறிப்பிட்ட ஆலமரத்தை அன்று மாலை சென்றடைந்தார். அப்போது அண்டரண்டப் பட்சிகள் எவையும் மரத்துக்குத் திரும்பவில்லை.

மன்னர் விக்கிரமாதித்தன் அண்டரண்டப் பட்சிகள் வந்து சேரும்போது சுய உருவத்துடன் இருக்கவிரும்பவில்லை. ஒரு பொன் வண்டு போன்ற உருவம் எடுத்து ஆலிலை ஒன்றின் மீது மறைந்திருந்தார்.

சற்று நேரத்தில் அண்டரண்டப் பட்சிகள் யாவும் ஆலமரத்தின் மீது வந்து அமர்ந்து கொண்டன. தங்கள் அன்றாடப் பயணங்களைப் பற்றி இப்பட்சிகள் தங்கள் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் பழக்கமுடையவை. இப்பட்சிகளில் ஒன்று அன்றையப் பயணத்தின் போது தான் தங்கமாபுரி சென்று வந்த கதையை மற்றுமொரு பட்சியிடம் கூறத் தொடங்கியது. மன்னர் விக்கிரமாதித்தனுக்கு பட்சிகள், மிருகங்கள் மற்றும் பிற உயிரினங்கள் பேசும் மொழிகள் யாவும் தெரியும் என்பதனால் தங்கமாபுரி பற்றியகருத்தைக் கூறிய பட்சியின் கூற்றைக் கவனமாகக் கேட்டார்.

தங்கமாபுரி பற்றி ஒரு பட்சி கூறியதகவல்களைக் கேட்ட அடுத்த பட்சி அடுத்த நாட்காலையில் தானும் அந் நகருக்குப் போய்ப் பார்த்து வர விரும்புவதால் அங்கு செல்லும் மார்க்கத்தையும் விளக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொண்டது.

மன்னர் விக்கிரமாதித்தன், அடுத்த நாட்காலையில் தங்கமாபுரி செல்லும் பறவையுடன் தானும் சென்று வரலாம் என்று கருதி விடிவதற்கு முன்னரே அதே பட்சியின் இறக்கையில் வண்டுருவிலேயே போய் ஒட்டிக் கொண்டார்.

பொழுது புலர்வதற்கு முன்னரே அண்டரண்டப் பட்சி தங்கமாபுரி நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கியது. அதன் இறக்கையில் வண்டின் உருவிலிருந்த மன்னர் விக்கிரமாதித்தனும் சென்றார். பல கடல்களையும் கடந்து அப்பட்சி தங்கமாபுரியை அடையும் நேரத்தில் பொழுது சாயத் தொடங்கிவிட்டது.

அண்டரண்டப் பட்சி தங்கமாபுரியை பல தடவைகள் சுற்றிச் சுற்றி வந்தது. சில முக்கியமான வீதிகளில் தாழ்வாகப் பறந்து சென்றது. இதனால் வண்டுருவில் இருந்த மன்னர் விக்கிரமாதித்தன் அந்நகரத்தின் தோற்றத்தை தெளிவாகக் கண்டு கொண்டார். தங்கமாபுரி நகரின் கட்டடங்கள் யாவும் வெகு நேர்த்தியாகக் காணப்பட்டன. இருப்பினும் அந்நகரத்தில் மக்கள் நடமாட்டத்தை அறவே காணமுடியவில்லை. வீதிகளிலும் வீடு வாசல் கதவோரங்களிலும் மக்கள் தரையில் படுத்தபடி கிடப்பதையும் மன்னர் பார்த்து வியப்படைந்தார்.

அன்றிரவு பொழுதைக் கழிப்பதற்காக அண்டரண்டப் பட்சி அந்நகர் நடுவே இருந்த பெரிய மரமொன்றில் ஏறி அமர்ந்து கொண்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விக்கிரமாதித்த மன்னர் பட்சியின் இறக்கையிலிருந்து இறங்கி தரையில் குதித்தார். சற்று மறைவான ஓரிடத்தில் சென்று தன்சுய உருவம் பெற்றுக் கொண்டு கால் நடையாக அந்நகர வீதிகளில் வலம் வந்தார். ஆங்காங்கே தரையில் கிடந்த மனிதர்களைத் தொட்டும் அசைத்தும் பார்த்தார். எவரும் உயிருடன் கிடந்ததாகத் தெரியவில்லை. அவர்களிடம் சுவாசமே இருக்கவில்லை. இருப்பினும் உடம்புகள் எவையும் பழுது படாமல் கிடந்தன.

சுற்றுச் சூழலை அவதானித்த போது அம்மனிதர்கள் யாவரும் பல வருடங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்க வேண்டும் என்பதை மன்னர் உணர்ந்தார்.

நகரத்தின் எல்லையில் ஓர் ஆலயம் இருப்பதைக் கண்டு அங்கு சென்று இரவுப் பொழுதைக் கழிக்கக் கருதி மன்னர் விக்கிரமாதித்தன் அங்கு சென்றார். ஆலயத்தில் தூண்டாமணி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மலர்களும் பூமாலைகளும் மூர்த்திகளுக்குச் சூட்டப்படிருந்தன. ஆனால் அங்கும் மனித நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை.

ஆலயத்தில் தரிசனையை முடித்துக் கொண்டு ஒரு புறமாக அமர்ந்து கொண்ட மன்னருக்கு அடுத்து நடந்த சம்பவம் பெருவியப்பை ஏற்படுத்தியது. வானிலிருந்து ஒரு குதிரை பறந்து வந்து ஆலயத்தின் முன்புறம் இறங்கியது. அதிலிருந்து அரச அணிமணிகளுடன் இளம் பெண் ஒருத்தி இறங்கி வந்து ஆலயத்துக்குள் சென்று பிரார்த்தனையிலீடுபட்டாள். தான் அங்கிருப்பதை அந்தப் பெண் கண்டு கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதற்காக மன்னர் ஆடாமல் அசையாமல் அமர்ந்து நடைபெறும் சம்பவங்களை அவதானித்துக் கொண்டிருந்தார்.



இராஜகுமாரன்

(மன்னன் வருவான்...)

## அரசியல் நைனாரின் பாட்டுக்குப் பாட்டு



சந்திரன வானொலி மற்றும் பெரிய அரசர்கள் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையோடு நடைபெறும் அரசியல் நைனாரின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை தொகுத்தளிக்கிறார் உலக அறிவிப்பாளர் திரு. பி. எச். அவர்கள்.

**பி.எச்:** வணக்கம் அன்பு நெஞ்சங்களே.... நீங்கள் ஆவலோடு எதிர்ப்பார்த்திருக்கும் அரசியல் நைனாரின் பாட்டுக்குப் பாட்டு...... இன்னும் சற்று வேளையில் ஆரம்பமாகவுள்ளது. இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பல அரசியல் பிரமுகர்கள் ஆவலாக வந்திருக்கிறார்கள். அவர்களில் முதலில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் யாரென்று பார்ப்போம். ஆம்.... முதலில் யாழ்ப்பாணம் பெரிய புளியடி 3ம் குறுக்குத் தெருவில் இருந்து வந்திருக்கும் பிரேமச்சந்திரன். அவரோடு போட்டியிட வந்திருப்பவர் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் இலக்கம் 103 இல் இருந்து வந்திருக்கும் மகேசன். இவ்விரண்டு போட்டியாளர்களையும் அன்போடு மேடைக்கு அழைக்கின்றோம். ஆம். மகேசன் முதலில் போட்டியை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்படுகிறது. எங்கே ஆரம்பியுங்கள்.

**மகேசன்:** நன்றி(சபையை நோக்கி கும்பிடுகிறார்.)

போட்டியில்லாத பிஸ்னஸ் கேட்டேன்.
தடையே இல்லாத ஒயில் கேட்டேன்.
கட்டுப்பாடு இல்லாத
மண்ணெண்ணைய் கேட்டேன்.
வாடகை இல்லாத கப்பல் கேட்டேன்
இத்தனை கேட்டும் கிடைக்கவில்லை.
வேண்டாம் வேண்டாம் பிஸ்னஸ்
-வேண்டாம்
அரசியலுக்கு வந்து விட்டேன்......

**பி.எச்:** நன்றி மகேசன் நன்றி. அடுத்த சந்தர்ப்பம் பிரேமச்சந்திரனுக்கு. உங்களுக்கு மணியடித்திருப்பது 'எ' அல்லது 'ஏ' இரண்டு எழுத்துக்களில் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. 'எ' குறில் அல்லது 'ஏ' நெடில்.

**பிரேமச்சந்திரன்:**

எந்த சீற்றிலும் இல்லாத
ஒன்று - ஏதோ அது ஏதோ
எம். பி. சீற்றில் இருக்கிறது-
அதை அறியாமல்
விட மாட்டேன்- அதுவரை
அரசியலை விட்டு
போகமாட்டேன்- எந்த....

பி.எச்: நன்றி, நன்றி. அதுவரை என்ற சொல்லை உச்சரித்த வேளையிலே மணி அடித்தமையினால், மகேசன் உங்களுக்கு வழங்கப்படும் எழுத்து 'வ' ஓர் எழுத்தில் மாத்திரமே சந்தர்ப்பம் 'வ' குறில்.

மகேசன்:

வந்தேன்டா மண்ணெண்ணைய்க்
காரன். ஓ.... ஓ...
மண்ணெண்ணைய்யைப் பற்றி
பாடப்போறன்.
தன் ரத்தத்தில் ஒரு பாதி பாலா
கப் பிரிப்பது பசுவோட வேலை
யப்பா-
ஆனால் மண்ணெண்ணையில்
ஒயிலைக் கலப்பது என்னோட
முளையப்பா.

**பி.எச்:** ஆம் இப்போது மணியடித்திருப்பது 'ய' எனவே பிரேமச்சந்திரன் உங்களுக்கு வழங்கப் படும் எழுத்து 'ய' குறில் அல்லது நெடில்.

**பிரேமச்சந்திரன்:**

யாழ்ப்பாணத்துக்குப் போகாம
சனத்தோட கதைக்காம
பிரச்சாரம் செய்யாம
தேர்தலில் நான் வெல்ல
வேணும் பிள்ளையாரே.
அதற்கு உனக்கு எத்தனை
தேங்காய் வேணும்

**பி.எச்:** சபாஷ் போட்டி கடுமையாக இருக்கின்றது. இப்போது மகேசனுக்காக வழங்கப்படும் எழுத்து 'தே' நெடில்.

**மகேசன்:....** (தனது ஆந்தைக் கண்களால் முழிக்கிறார்.)

**பி.எச்:** நன்றி. நன்றி. நன்றி மூன்று வினாடிகளுக்கு மேல் மௌனம் சாதித்த படியால் போட்டியிலிருந்து நீக்கப்படுகிறார் திரு. மகேசன். அடுத்து அரசியல் நைனாரின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புதிதாக வரும் போட்டியாளர் யார் என்று பார்ப்போம்.

ஆம் இவர்... வவுனியா உமையாள்புரம் 5ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. லிங்கம்.... வணக்கம் லிங்கம். போட்டி விதிமுறைகள் எல்லாம் தெரியும் தானே

**லிங்கம் :** வணக்கம் ஆம் தெரியும்.

**பி.எச்:** நல்லது போட்டி விதிமுறைகள் எல்லாம் தெரியுமென்றபடியால் உங்கள்அபிமானப் பாடலைப் பாடுங்கள்.

**லிங்கம்:**

யாழ்ப்பாண சீமையிலே
பிக்கப் ஓடும் தீவினிலே
பிரசாரத்திற்கு வந்தவனை
யார் அடித்தாரோ
யார்அடித்தாரோ.
சொறின்னா மனசு தாங்காது.
இனியும் நினைக்க வைக்காதே.

**பி.எச்:** ஆம் 'சொறி' என்ற எழுத்தில் மணி அடித்ததால் அடுத்ததாக வழங்கப்படும் எழுத்து 'ஒ'.

**பிரேமச்சந்திரன்:**

ஒருநாள் ஒரு கனவு-அதை
நான் மறக்கவும் முடியாது.
நிஜமாய் இருக்கிறது.
இதுபோல் கனவொன்றும் கிடையாது.
பார்லிமென்டில் நடந்து சென்று-
அங்கு ஆசனத்தில் துள்ளிக் குதிப்போம்.
சந்தோஷத்தில் .....

**பி.எச்:** நன்றி. 'தோ' என்ற எழுத்தில் மணி ஒலித்திருக்கிறது. எனவே லிங்கனுக்கு அடுத்து வழங்கப்படும் எழுத்து 'தொ' அல்லது 'தோ'.

**லிங்கம்:**

தோழா தோழா தோள்
கொடுகொஞ்சம் எழுந்துக்கணும். -
தீர்வைப்பற்றி நாமும் பேசி
தெரிஞ்சிக்கணும்.
புலியைப் பற்றி அரசும்
புரிஞ்சிக்கணும்.
அரசும் புலியைப் கொஞ்சம்
புரிஞ்சிக்கணும்-
பாலாவும் சொல்ஹெய்மும்
பேசிக் கொண்டால்
அது தீர்வு ஆகுமா.

**பி.எச்.:** நன்றி. நன்றி. பாலாவும் சொல்ஹெய்மும் பேசிக்கொண்டால் அது முடிவ ஆகுமா? முடிவ என்பதை தீர்வ என்று தவறாக உச்சரித்தமையால் போட்டியிலிருந்து நீக்கப்படுகிறார் லிங்கம். ஆகவே வெற்றி பெற்ற பிரேமச்சந்திரனுக்கு பாராட்டைக் கூறிக் கொண்டு இந்த அரசியல் நைனாரின் பாட்டுக்கு பாட்டு நிகழ்ச்சியை நிறைவு செய்து உங்களிடம் இருந்து விடை பெறும் நான் உங்கள் அன்பின் பி. எச்.

காதிலை பூ கந்தசாமி

யாவும் கலப்படமற்ற கற்பனை




SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# பப்பிள்கம்







பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

105, ...

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

Website: www.lapik.com...

436331


← பபிள்கம் இனிப்புப்பண்டம் சோம்பலைப் போக்கவும், அநாவசியமாக எதையும் பேசாது வாயைச் சப்பிக் கொண்டிருக்கவும் கண்டுபிடிக்கப்பட்டது. இன்று இளமை, முதுமை வேறுபாடின்றி பலரது வாயிலும் நடக்கும்போதும், ஓடும் போதும், இருக்கும்போதும் இந்த இழுவை இனிப்புப் பண்டம் வாயில் மணிக்கணக்கில் சப்பைக் கட்டுப் போடப்படுவதைக் காணலாம்.

வெறுமனே சப்பித் துப்புவ தோடல்லாமல் வாயிலிருந்து காற்றைச் செலுத்தி பலூன்கள்போலவும் பபிள்கம்கள் உருவாக்கப்படுகின்றன. இங்கே சுசன் மொன்ட் கொமரி என்பவரது வாயில் வைத்து ஊதப்பட்டு 55.8 செ.மீ சுற்றளவில் பெருத்து வீங்கிப் போயுள்ள பபிள்கம் இனிப்பே இது. வெறும் வீக்கம் மட்டுமல்ல, இதுவொரு உலகசாதனையும் கூட.

# நெருப்புப்பசி

↓ தீயைத்தின்று வயிற்றுப் பிழைப்பைத் நடத்தும் மனிதர்களும் இல்லாமல் இல்லை. பலருக்கு மடியில் நெருப்பைக் கட்டிக் கொள்வது பிழைப்பு. இங்கே தீனலெக்கெற் என்ற பெண்மணி நெருப்பைத் தின்கிறார். சாகஸத்துக்காக மட்டுமல்ல, சாதனைக்காகவும் வாய்க்குள் தீப்பந்தத்தை அடைக்கிறார். சாதனை வெறியில் 6607 தடவைகள் வாய்க்குள் தீயை அமுக்கிச் சுவைத்தார் இந்த மணிக் கழுத்துப் பெண் மணி.



→ உலகில் குள்ளமனிதர்கள் பல்வேறு நாடுகளிலும் காணப்படுகின்றனர். இங்கே காணப்படும் குள்ளமானவர் வயதில் மூத்தவர். ஆனால் உருவத்தில் சின்னஞ்சிறியவர். நண்பரொருவர் அவரோடு உரையாட மண்டியிட்டிருக்க வேண்டியுள்ளது. குள்ளமான வளர்ச்சிக்கு உடலில் தோன்றும் ஹோமோன்களின் வித்தியாசமே முக்கிய காரணம். இந்தக் குள்ளமான மனிதரின் உயரம் ஒரு சாதனை அளவாகும். பிரம்மாவின் சிருஷ்டிப்பில் இவர் ஒரு புதுமை.



# சிறிய மனிதர்

# சவாரி

→ ஒருவர் இருவரல்ல. பதினாறு பேர் ஒரே சைக்கிளில் சவாரி செய்வதையே இங்கு காண்கிறீர்கள். 50 மீட்டர் தூரத்தை இப்படி எவருமே கீழே விழாமல் சவாரி செய்து உலக சாதனை படைத்துள்ளார்கள். சீனாவின் மிட்டோ என்ற சைக்கிள் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களே இவர்கள். உலகில் அதிகளவில் சைக்கிள்களைப் பயன்படுத்தும் நாடு சீனா. வேலைத்தளம், பாடசாலை, பல்கலைக்கழகம், சந்தை, என்று அனைத்து இடங்களுக்கும் சைக்கிள் சவாரி. இதனால் கோடிக்கணக்கான சைக்கிள்கள் சீனாவில் தினந்தோறும் உலாவருகின்றன.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து (23.02.2002)

கோண்டாவிலை பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்கரன் (சிறி)-விஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி றினோஜி தனது முதலாவது பிறந்த தினத்தை 23-02-2002 அன்று Swiss Erstfeld இல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா-அம்மா, கோண்டாவிலில் இருக்கும் பெரியப்பா பெரியம்மா, சிவாபத்தில் இருக்கும் மாமா-மாமி, றுஷனா அத்தான், சுபா மச்சாள், சுதா மச்சாள், வற்றாப்பளையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா மாமாமார்களான விஜிதன் யசிந்தன், றஜிதன், ஜயந்தன், வவனியாவிலுள்ள சின்ன அம்மம்மா, அம்மப்பா, கோபி குட்டிமாமா Swissலுள்ள சிவா மாமா, மீரா அத்தை மற்றும் அப்பப்பாமார், அப்பம்மாமார் அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார் உற்றார் உறவினர் அனைவரும் றினோஜியை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வற்றாப்பளை கண்ணகைஅம்பாள் அருள் பெற்று வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



றினோஜி



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், ... சி.பீ.டி. அச்சகத்தில் பெப்.24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.